முத்தமிழ்ப் புலவர்

புலவர் R. பழநியாண்டி



நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி, சென்னை-1

முத்தமிழ்ப் புலவர்

1. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை
2. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்
3. விபுலானந்த அடிகள்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

புலவர் R. பழநியாண்டி,
தலைமைத் தமிழாசிரியர்,
S. P. G. உயர்நிலைப்பள்ளி, கடலூர்.

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
6, கொண்டி செட்டித் தெரு, சென்னை—1.

பதிப்புரிமை] 1950 [விலை அணா 14

முதற் பதிப்பு—[illegible] [illegible]
இரண்டாம் பதிப்பு—ஜூலை [illegible]

5992a

Printed at the B. N. Press, Mount Road, Madras.

முகவுரை

முத்தமிழ்ப் புலவர் என்னும் பெயருடன் வெளிவரும் இத்துணைப்பாட நூல் உயர்நிலைப்பள்ளி மாணவர்க்கு உரியது. இதன்கண் (1) பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, (2) வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், (3) விபுலானந்த அடிகள் என்னும் தமிழ்ப்பெரும் புலவர் மூவர் வரலாறுகள் கூறப்பட்டுள்ளன. இம்மூவரும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் பயின்று, என்றும் அழியாத முறையில் சிறந்த நாடக நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் இயற்றி இருத்தலின், முத்தமிழ்ப் புலவர் என்னும் பெயருக்கு உரியரேயாவர்.

இப்பெருமக்கள் தமிழ் கற்பதில் ஆர்வங்காட்டினமை, தமிழைப் பிழையறக் கற்றமை, இலக்கியக் குறையினை உணர்ந்து நூல்கள் யாத்தமை, தமிழ்ப் பற்றினை மக்கட்கு ஊட்டினமை இன்னபிறவும் இக்காலத் தமிழ் மாணவர்க்கு இன்றியமையாதவை.

மறைந்தொழிந்த இசைத்தமிழ் அறிவினை இக்கால உலகத்திற்குத் தமது யாழ் நூலின் வாயிலாக எடுத்துக் காட்டிய பெருமை விபுலானந்த அடிகட்கே உரியதாகும். தமிழ்மொழி உள்ளளவும் அவர் பெயரினை நிலைநிறுத்த இஃதொன்றே சாலும். முற்றும் துறந்த அடிகளது தமிழ்ப் பற்று மாணவர் உள்ளங்களில் எழுச்சியை உண்டாக்க வல்லது.

சுருங்கக் கூறின், இப்பெருமக்கள் வரலாறுகள் இக்காலத் தமிழ்மாணவர் உலகத்திற்கு ஆக்கம் தருவனவாகும். தமிழ்வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட அறிஞர் இச்சிறு நூலினை ஆதரிக்குமாறு வேண்டுகின்றேன்.

ஆசிரியர்

உள்ளுறை

எண்	பொருள்	பக்
I.	பேராசிரியர் சுந்தரம் பிள்ளை	
1.	இளமைப் பருவம்	...
2.	ஆசிரியர் பணி	...
3.	தமிழ்த் தொண்டு	...
4.	நல்லியல்புகள்	...
II.	வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்	
1.	இளமையும் கல்விப் பயிற்சியும்	...
2.	கல்லூரித் தமிழாசிரியர்	...
3.	சாஸ்திரியார் தமிழ்த் தொண்டு	...
4.	முத்தமிழ்	...
III.	விபுலானந்த அடிகள்	
1.	ஈழ நாடு	...
2.	இளமைப் பருவம்	...
3.	ஆசிரியர்—மாணவர்	...
4.	விபுலானந்த அடிகள்	...
5.	பலதுறைத் தொண்டு—I	...
6.	அண்ணாமலைப் பல்கலைக் கழகம்	...
7.	பலதுறைத் தொண்டு—II	...
8.	நற்பண்புகள்	...



சங்க காலத் தமிழகம்
(கி.மு. – கி.பி. 400)
75
80
15
10
வ.
கோதாவரி
கிருஷ்ணை
வட பெண்ணை
வேங்கடம்
தொண்டை நாடு
காஞ்சிபுரம்
கடல்மல்லை
பாலாறு
தென் பெண்ணை
காவிரி
தகடூர்
திருக்கோவலூர்
நடு நாடு
மரக்காணம்
புதுச்சேரி
(பொதுசா)
கொல்லிமலை
கொங்கு நாடு
சோழ நாடு
காவிரிப் பூம்பட்டினம்
ஆவூர்
தொண்டி
முதிரமலை
உறையூர்
நாகப்பட்டினம்
வஞ்சி
முசிறி
பழநி மலை
பிரான்மலை (பறம்பு மலை)
கோடைமலை
மதுரை
வைகை
பாண்டி நாடு
நள்ளி நாடு
பொதியமலை
நாஞ்சில்மலை
கொற்கை
கன்னிமுனை
இலங்கை
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
வள்ளல்கள் ஆண்ட சிறிய நாடுகள்
தலை நகரங்கள்
துறைமுகப் பட்டினங்கள்
புலவர்கள் வாழ்ந்த ஊர்கள்

I. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை

(கி. பி. 1855—1897)

1. இளமைப் பருவம்

தமிழகம்

தமிழ்மொழி பேசப்பட்ட தென்னிந்திய நிலப் பகுதி பண்டைக்காலத்தில் தமிழகம் எனப்பட்டது. தமிழகம் வடக்கே வேங்கடமலையையும் தெற்கே கன்னி முனையையும் கிழக்கே வங்கக்கடலையும் மேற்கே அரபிக் கடலையும் எல்லைகளாகக் கொண்டது. இந்த நான்கு எல்லைகட்கும் இடைப்பட்ட தமிழகத்தில் முடியுடை வேந்தரால் ஆளப்பட்ட மூன்று நாடுகள் இருந்தன. அவை சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என்பன.

முத்தமிழ் நாடுகள்

சோழநாடு என்பது இன்றைய தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களையும் தென்னாற்காடு ஜில்லாவின் தென்பகுதியையும் கொண்டது. அந்நாடு காவிரி பாயப் பெற்ற வளநாடு. அதனால் சோழர் 'வளவர்' எனப் பட்டனர். 'சோழவளநாடு சோறுடைத்து' என ஆன்றோரால் சோழநாடு பாராட்டப்பட்டது. பாண்டிய நாடு என்பது மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களைக் கொண்டது. அந்நாடு வையை, தாமிரபரணி

யாறுகள் பாயப்பெற்றது. பாண்டியநாடு முத்து வாணி கத்திற் புகழ் பெற்றது. சோநாடு என்பது இன்றைய மலையாளம் ஜில்லா, கொச்சி, திருவாங்கூர்ச் சம்ஸ்தானங்கள் சேர்ந்த நிலப்பரப்பாகும். இந்நாட்டில் பேரியாறு பாய்ந்து கடலொடு கலக்கும் இடத்தில் வஞ்சிமாநகரம் சேரர் தலைநகரமாக விளக்கம் பெற்றிருந்தது.

சேரநாட்டுச் சிறப்பு

சேரநாடு மிக்க பழமையுடையது. சேரநாடு மலைநாடு. மலைகளில் காடுகள் மிகுதி; அதனால் அகில், சந்தனம், தேக்கு முதலிய மரவகைகள் மிகுதி. இம்மரவகைகளும் வாசனைப் பொருள்களும் மிளகும் யானைத் தந்தமும் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மேற்கு நாடுகட்கு அனுப்பப்பட்டுவந்தன. அக்காலத்தில் சேரநாடு அயல் நாடுகளுடன் கடல்வாணிகத்திற் சிறந்திருந்தது. இமயத்தில் வில்கொடி நாட்டிய இமயவரம்பன் சேரலாதன், சேரவேந்தருள் புகழ் மிக்கவன். அவன் மகனான செங்குட்டுவன் வடநாடு சென்று, தமிழரசரை இகழ்ந்துரைத்த கனக விசயரை வென்று, இமயத்திலிருந்து கண்ணகித் தெய்வத்திற்கு உருவம் அமைக்கக் கல்லைக் கொணர்ந்தான். இத்தகைய சங்க காலச் சேரர்க்குப் பிறகு வாழையடி வாழையாகச் சேரர் பலர் சேரநாட்டை ஆண்டுவந்தனர். சேரநாடு இன்று மலையாள நாடாக இருப்பினும் பழங்காலத்தில் தமிழ் நாடாகவே இருந்தது. செங்குட்டுவன் தம்பியாரான இளங்கோவடிகள் தமிழிற்றான் முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரம் பாடினார். ஏறத்தாழக் கி. பி. 9-ஆம் நூற்றாண்டினரான குலசேகராழ்வார் தமிழிற் பாடிய பாக்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இடம்

பெற்றுள்ளன. அதே நூற்றாண்டில் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலாய ஞானவுலா, பொன் வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை என்னும் தமிழ் நூல்களை இயற்றியுள்ளார். சேரநாட்டின் ஒரு பகுதியாகிய வேணாட்டைச் சேர்ந்த அடிகள் ஒருவர் கி. பி. 10 அல்லது 11-ஆம் நூற்றாண்டில் தமிழில் பாக்களைப் பாடியுள்ளார். சுருங்கக் கூறின், சேரநாடு சங்க காலத்திலிருந்து ஏறத்தாழக் கி. பி. 12-ஆம் நூற்றாண்டுவரை தமிழ் பேசப்பட்ட நாடாக இருந்ததென்று கொள்வதில் தவறில்லை. பின்னரே மலையாள மொழி அங்குத் தோற்றமெடுத்தது. இன்னும் தென்மலையாளப் பகுதியில் தமிழ் வழங்கி வருகிறது. அங்குள்ளவர் நாஞ்சில்நாட்டுத் தமிழர் எனப்படுகின்றனர். நாஞ்சில் வள்ளுவன் என்ற செல்வன் ஒருவன் கொடையிற் சிறந்தவன் என்பது சங்க நூலாகிய புறநானூற்றால் அறியப்படுவதாகும்.

நாஞ்சில் நாட்டுத் தமிழர்

நாஞ்சில் நாட்டுத் தமிழர் சேரநாடு முழுவதும் பரவி வாழ்ந்துவருகின்றனர். அவர்கள் நிலக்கிழாராகவும் அறுவை வாணிகராகவும்* வேறு பலவகைத் தொழில் வணிகராகவும் அரசாங்க அலுவலராகவும் இருந்துவருகின்றனர். சேரநாட்டில் ஆலப்புழை என்பது ஓர் ஊர். அவ்வூரில் நாஞ்சில் நாட்டுத் தமிழர் குடும்பங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று பெருமாள் பிள்ளை என்பவரைத் தலைவராகக் கொண்டது. அவர் வேளாண் மரபினர். அவர் அறுவை வாணிகராய் இருந்தார். அவர்

*ஆடை வணிகர்

மனைவியார் பெயர் மாடத்தியம்மை என்பது. இவ்விருவருக்கும் திருமகனாராய்ப் பிறந்தவரே நம் சுந்தரம் பிள்ளை என்பவர்.

பெற்றோர் சிறப்பு

பெருமாள் பிள்ளை தமிழ் மொழிப் பற்று மிக்கவர்; கடவுள் பக்தி, நாட்டுப் பற்று, மனிதப் பற்று உடையவர்; பொறுமை, அடக்கம், நயம்பட மொழிதல், முதலிய நல்லியல்புகள் வாய்க்கப் பெற்றவர். அவருடைய இல்வாழ்க்கையைச் சிறப்பிக்கத் தக்க முறையில் மாடத்தியம்மையார் விளங்கினார். அவர் கணவர் கருத்தறிந்து நடந்துவந்தார்; இன்சொல், அடக்கம், பொறுமை முதலிய பண்புகளை இயல்பாகவே பெற்றிருந்தார். இச்சீரிய காதலர் வாழ்க்கை இன்பப் பொலிவுடன் நடைபெற்றுவந்தது.

பிள்ளைப்பேறு

இல்லறம் பயனுடையதாகச் செய்ய மக்கட்பேறு இன்றியமையாதது என்பது பண்டையோர் கருத்து. 'பிள்ளை யில்லாத வீடு சந்திரன் இல்லாத இரவு போன்றது; குளம் இல்லாத ஊர் போன்றது; பெயர் இல்லாத வாழ்க்கை போன்றது; பசு நெய் இல்லா உணவு போன்றது' என்று புலவர்கள் பாடியுள்ளார்கள். பெருமாள் பிள்ளை சிறந்த புலவராதலால், புலவர் பாக்களை நன்கு அறிந்திருந்தார்; தமக்குப் பிள்ளை இல்லையே என்ற மனக்கவலையால் வாட்டமுற்றார்; மதுரை - சோமசுந்தரக் கடவுளை வேண்டி வரங்கிடந்தார். மாடத்தியம்மையார் 1855-ஆம் ஆண்டில்

பங்குனித் திங்கள் 28-ஆம் நாள் ஓர் ஆண் மகவைப் பெற்றார். சோமசுந்தரர் அருளாற் பிறந்த பிள்ளை என்பதுகொண்டு, பெருமாள் பிள்ளை தம் தவப்புதல்வருக்குச் 'சுந்தரம்' என்னும் திருப்பெயரை இட்டார். பெற்றோர் தம் தவப் புதல்வரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்துவந்தனர்.

தமிழ்க் கல்வி

ஐந்து வயதானதும் சுந்தரனார் தமிழ்ப் பள்ளியிற் சேர்க்கப்பட்டார். பள்ளிக் கல்வியுடன் தந்தையார் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை, நன்னெறி, நீதிநெறி விளக்கம் முதலிய நீதி நூல்களையும், தேவாரம், திருவாசகம் முதலிய அருள் நூல்களையும், திருக்குறள், நாலடியார் போன்ற அறிவு நூல்களையும் சிறிது சிறிதாகக் கற்பித்துவந்தார். இங்ஙனம் இளமையிற் புகட்டப்பட்ட இவ்வடிப்படைக் கல்வி சுந்தரனார்க்குத் தமிழ்ப் பற்றைப் படிப்படியாய் வளர்த்துவந்தது.

ஆங்கிலக் கல்வி

தொடக்கக் கல்வி முற்றுப் பெற்றதும் சுந்தரனார் ஆங்கிலப் பள்ளியில் விடப்பட்டார். அவர் ஆசிரியர்களிடம் பணிவு, அடக்கம், அன்பு இவற்றைக் காட்டினார்; படிப்பில் சிறப்புக் கவனம் செலுத்தினார். அவருடைய நல்லியல்புகள் ஆசிரியர்களை மகிழ்வித்தன. அவர் வகுப்புப் பிள்ளைகள் அனைவரிடமும் 'நல்ல பிள்ளை' என்று பெயரெடுத்தார். அவர் அங்கு நன்கு பயின்று தேறி இறுதியில், திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் பத்தாம் வகுப்பிற் சேர்ந்தார். புதிய

கல்லூரியிலும் ஆசிரியரும் மாணவரும் பாராட்டப் பத்தாம் வகுப்புத் தேர்வில் முதல்வராய்த் தேறினர். அதனால் அரசியலார் அளிக்கும் உதவிப்பணம்* திங்கள் தோறும் எட்டு ரூபாய் வீதம் கிடைத்தது. அவ்வுதவிப் பணம் அவருக்குப் பி. ஏ. வகுப்புவரை தரப்பட்டது. சுந்தரனார் தம் படிப்பிற் கண்ணும் கருத்துமாக இருந்து 1876-இல் தமது 21-ஆம் வயதில் பி. ஏ. தேர்வில் முதல் வராய்த் தேறினர்.

2. ஆசிரியர் பணி

கல்லூரி ஆசிரியர்

அரசர் கல்லூரித் தலைவரான ராஸ் துரைமகனார் சுந்தரனாரைத் தம் கல்லூரியிலே விரிவுரையாளராக அமர்த்திக்கொண்டார். சுந்தரனார் எப். ஏ., பி. ஏ, வகுப்புகட்கு வரலாற்றுப் பாடமும் சமயப் பாடமும்† கற்பிக்கலானார். சுந்தரனார் தாம் மறுநாள் கற்பிக்க வேண்டும் பாடங்களை முன்னாளிலேயே நன்கு படிப்பார்; பல நூல்களைப் படித்துப் பாடப் பொருளைத் திரட்டு வார்; அப்பொருளைச் சாதாரண மாணவரும் எளிதிற் புரிந்துகொள்ளுமாறு நன்கு விரிவுரை ஆற்றுவார். மாணவர் எத்தனை முறை கேட்பினும் சலிப்பின்றிக் கூறுவார்; அவர்தம் ஐயங்களை மகிழ்ச்சியோடு வர வேற்று அகற்றுவார்; ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியே சந்தித்துப் படிப்பில் ஊக்குவிப்பார். இத்தகைய ஆசிரியப்பண்புகளால் மாணவர் அனைவரும் அவரிடம் மிக்க அன்பு கொண்டனர். அவரது பெயர் திருவனந்தபுரத்தில் நன்கு பரவத் தொடங்கியது.

---

* Scholarship † Philosophy

திருமணம்

சுந்தரனார் தமது இருபத்தோராம் வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார்; அந்த ஆண்டிலேயே விரிவுரையாளர் பதவி ஏற்றார். அந்த ஆண்டு முடிவிற்குள் அவருக்குத் திருமணமும் சிறப்பாக நடந்தேறியது. அவரது இல்வாழ்வைச் சிறப்பிக்கச் சிவகாமி என்னும் மங்கை நல்லார் மனைவியாராய் வாய்த்தார். பெருமாள் பிள்ளைக்கு அரிய மனைவியார் வாய்த்து அவரது இல்லத்தைச் சிறப்பித்தாற் போலவே சுந்தரம் பிள்ளைக்குச் சிவகாமி யம்மையார் வாழ்க்கையின் விளக்கென அமைந்தார்.

கலாசாலைத் தலைமையாசிரியர்

திருநெல்வேலியில் ஆங்கிலக் கலாசாலை ஒன்று இருந்தது. அதற்குத் தலைவர் ஒருவர் தேவைப்பட்டார். அப்பொழுது சென்னைக் கல்வித் துறைத் தலைவராய் இருந்தவர் டாக்டர் டங்கன் என்பவர். அவர் ராஸ் துரைமகனார்க்குக் கடிதம் வரைந்து, தக்கார் ஒருவரை மேற்சொன்ன ஆங்கிலக் கலாசாலைக்குத் தலைவராக அனுப்பும்படி வேண்டினார். ராஸ் துரை மகனார் நம் சுந்தரம் பிள்ளையைத் தலைவராகச் சிபாரிசு செய்தார். அதனால் சுந்தரம் பிள்ளை 1877-இல் திருநெல்வேலி ஆங்கிலக் கலாசாலைக்குத் தலைவரானார்.

அவர் திருநெல்வேலியில் இருந்த பெருமக்களைச் சந்தித்துப் பழகினார்; மாணவருடைய பெற்றோர் களைக் கண்டு அளவளாவினார்; நல்ல முறையில் பாடங்கள் கற்பிக்குமாறு ஆசிரியர்களை ஊக்கினார்; ஆசிரியர்களுடன் நாடோறும் பழகி, அவர்கள் உள்ளங்

களைக் கவர்ந்தார்; கலாசாலை உயர்வுக்குப் பாடுபடு வதையே நோக்கமாகக் கொண்டார்: நகரத்தில் பல கூட்டங்களில் தமிழ்ச் சொற்பொழிவுகள் ஆற்றினர்; ஆங்கில இலக்கியம், தமிழ் இலக்கியம் பற்றிப் பல இடங்களிற் பேசினர். இத்தகைய செயல்களால் திருநெல்வேலி நகரில் சுந்தரம் பிள்ளை போற்றத்தக்கவ ராஞர். அவரிடம் அனைவரும் நன்மதிப்புக் கொண்ட னர். சுந்தரம் பிள்ளை தாம் திருநெல்வேலிக்குச் சென்ற சில ஆண்டுகட்குள் தமது கலாசாலையை * இரண்டாம் வகுப்புக் கல்லூரியாக உயர்த்தினர். அவரது இப் பெருந்தொண்டினை நகர மாந்தர் அனைவரும் பாராட்டி னர். அக்கல்லூரியே இன்று 'திரவியம் தாயுமானவர் இந்து கல்லூரி' என்னும் பெயருடன் விளங்குவதாகும்.

நல்லார் இணக்கம்

திருநெல்வேலிக்கருகில் கோடகநல்லூர் என்னும் ஊரில் அக்காலத்தில் சுந்தர சுவாமிகள் என்று ஒரு துறவி இருந்தார். அவர் தமிழிலும் சமய நூல்களிலும் புலமை பெற்றவர். அவரது புலமையைக் கேள்வி யுற்ற சுந்தரம் பிள்ளை அவரைக் கண்டு பேசினர்; அவர் நிறைந்த கல்வியும் சிறந்த ஒழுக்கமும் உடையவர் என்பதை நன்கறிந்த பின்னர் அவருக்கு மாணவ ராயினர். அவர் வாரந்தோறும் அவரிடம் சென்று சமய நூல்களைப் படித்துவந்தார்.

பேராசிரியர் பதவி

கி. பி. 1879-இல் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் பௌதிகப் பேராசிரியராய் இருந்த டாக்டர் இராபர்ட்

* Second Grade College.

ஹார்வி என்பவர் தம் தாய்நாடு செல்ல விழைந்தார்; தமது பதவியில் இருக்கத் தக்கவர் தம் அரிய மாணவராகிய சுந்தரம் பிள்ளையே எனக் கருதினார்; அதனால் அவரைத் திருநெல்வேலியிலிருந்து வரவழைத்துப் பேராசிரியராய் அமர்த்திச் சென்றார். சுந்தரம் பிள்ளை தமது புதிய பதவியைத் திறம்படத் தாங்கி, மாணவர் பாராட்டலைப் பெற்றார். அவர் அப்பதவியில் இருந்துகொண்டே 1880-இல் எம். ஏ. பட்டம் பெற்றார். அவர் கல்லூரி மாணவர்க்குத் தமிழில் ஊக்கம் பிறக்குமாறு பல சொற்பொழிவுகள் ஆற்றினார். சுந்தரம் பிள்ளை பௌதிகப் பேராசிரியராய் இருந்துகொண்டே தமிழ் ஆராய்ச்சியிலும் தமிழ் நாடக நூல் இயற்றுவதிலும் தமிழின் சிறப்பைப் பரப்புவதிலும் தம் ஓய்வு நேரத்தைச் செலவழித்துவந்தார்.

இறுதி

சுந்தரம் பிள்ளை படிப்பில் சலியாதவர். நாளொன்றுக்கு எட்டு அல்லது பத்து மணி நேரத்தைப் படிப்பதிலும் ஆராய்ச்சி செய்வதிலும் செலவழித்துவந்தார். அதனால் அவரது உடல் நலம் வரவரக் குறையத் தொடங்கியது. அவர் தம் உடல் நலன் குறைவதைப் பொருட்படுத்தாது மேலும் உழைப்பினை மேற்கொண்டார். இத்தவறுடைச் செயலால் அவர் நோய்வாய்ப்பட்டுத் தமது நாற்பத்திரண்டாம் வயதிற் (1897-இல்) காலமானார்.

3. தமிழ்த் தொண்டு

நாடக நூலாசிரியர்

சுந்தரம் பிள்ளை ஆங்கில நூல்களை நிரம்பப் படித்தவர். பார்ட்லிட்டன் என்பார் எழுதிய 'இரகசிய வழி' என்ற நூற்பொருளை அடிப்படையாய்க் கொண்டு தமிழில் செய்யுள் வடிவில் ஒரு நாடகத்தைப் பாடி முடித்தார். அஃது ஆசிரியப்பாவினால் இயன்றது. அந்நூற் பெயர் மனோன்மணீயம் என்பது.

கதைச் சுருக்கம்

ஜீவக வழுதி என்ற பாண்டிய மன்னன் கள்ளங் கபடு இல்லாதவன். அவன் மனைவி காலமானாள். அவனுக்கு மனோன்மணி என்ற மகள் ஒருத்தி இருந்தாள். அவள் பேரழகி; நற்குண நங்கை; நல்லொழுக்கம் மிக்கவள். தாயற்ற அம்மகளைத் தந்தை தன் உயிரினும் மேலாய்க் கருதிவந்தான். அரசனுடைய நற்குண நற்செயல்களைப் பாராட்டி நடராசன், நாராயணன் என்ற ஒழுக்கம் மிக்க வீரர் இருவர் அரண்மனைச் சேவகத்தில் இருந்துவந்தனர். அரசனிடமும் மனோன்மணியிடமும் மிக்க ஈடுபாடுடைய சுந்தர முனிவர் என்னும் துறவியார் அடிக்கடி பாண்டியன் அரண்மனைக்கு வந்து நல்லுரை புகன்று செல்வது வழக்கம். மனோன்மணியின் தோழியான வாணி என்பவள் கூர்த்த அறிவுடையவள்; சிறந்த ஒழுக்கம் உள்ளவள். அவள் மேற்சொன்ன நடராசனை உள்ளன்புடன் காதலித்துவந்தாள். ஆயின் அவள் தந்தை அவளது காதலுக்கு மதிப்புக் கொடாது, அவள்

விரும்பாத செல்வன் ஒருவனுக்கு அவளை மணம் முடிக்க விரும்பினான். அரசனும் அவளது களங்கமற்ற காதலை மதியாது, தந்தை சொற்படியே அவள் நடக்க வேண்டும் என அறிவுறுத்தினான்.

பாண்டியனுக்குக் குடிலன் என்பவன் முதல் அமைச்சன். அவன் சச்சந்தனுக்கு அமைந்த கட்டியங் காரனை ஒத்தவன்: வஞ்ச நெஞ்சினன்; சூழ்ச்சி அறியாத அரசனைத் தன் போலிப் பணிவினாலும் அடக்கத்தினாலும் தன் வயப்படுத்திக்கொண்டான். அவனுக்குப் பலதேவன் என்றொரு மகன் உண்டு. அவன் ஒழுக்கமற்ற இளைஞன். அவனுக்கு மனோன் மணியை மணம் முடிக்க வேண்டும், அதன் வழியாகப் பாண்டிய அரசைக் கைக்கொள்ள வேண்டும் என்பது குடிலன் விருப்பம். அதனால் அவன் இதற்குத் துணை புரியும் செயல்களை ஒன்றன் பின் ஒன்றாய்ச் செய்ய லானான்.

பாண்டியன் தலைநகரம் மதுரை. அங்கு இருந்தார் அனைவரும் பாண்டியனுக்கு மதிப்பீந்துவந்தனர். எனவே, தன் சூழ்ச்சி மதுரையிற் பலிக்காது என்பதைக் குடிலன் நன்குணர்ந்தான்; இதனால் தலைநகரை மதுரையிலிருந்து திருநெல்வேலிக்கு மாற்ற விரும் பினான்; அரசனிடம் சென்று, "திருநெல்வேலியை அடுத்துள்ள நாஞ்சில் நாடு பாண்டிய அரசு தோன்றிய காலந்தொட்டுப் பாண்டியர்க்கே உரியதாய் இருந்தது. இடைக்காலத்தில் அது சேரரால் கைக்கொள்ளப்பட் டது. நமக்குரிய அந்நாட்டை மீண்டும் பெறவேண்டி யது நமது பிறப்புரிமையாகும். சமாதான முறையில் சேரன் அதனைக் கொடானாயின், அவன்மீது போர்

தொடுத்து, அவனைப் போரில் வென்று, அதனைக் கைப் பற்ற வேண்டியது நமது கடமையாகும். போர் நேருமாயின் நாம் மதுரையிலிருந்து படைகளைத் திருநெல்வேலிக்குக் கொண்டுசென்று போரிடுதல் அவ்வளவு எளிதன்று. ஆதலின், திருநெல்வேலியைத் தலைநகரமாய் அமைத்துக்கொண்டு, அங்குப் போர் அரண்களையுடைய சிறந்த அரண்மனை ஒன்றைக் கட்டி முடிப்பது நல்லது," என்றான்.

இந்த யோசனையைச் சுந்தரமுனிவரும் நாராயணனும் நடராசனும் மனோன்மணியும் ஏற்கவில்லை. எனினும் குடிலனது சூழ்ச்சியை அறியாத அரசன் குடிலன் விருப்பப்படியே தலைநகரை மாற்றியமைத்தான். குடிலன் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள விரைந்து வேலை செய்தான்; தம் உயிரினும் மேலாய் அரசனை நேசித்துவந்த நாராயணனையும் நடராசனையும் வெவ்வேறு வேலைகளுக்கு அனுப்பி விட்டான். ஆயினும் சுந்தர முனிவரை அகற்ற அவனால் முடியவில்லை. அவர் அரண்மனையில் ஓர் அறையைப் பெற்று, ஆபத்து நேரிடின் அங்கிருந்து வெளியேறச் சுரங்கமொன்றை அமைத்துக்கொண்டிருந்தார். நடராசனும் நாராயணனும் வெளி வேலைகளைச் செய்துகொண்டே குடிலன் செயல்களைக் கண்ணுங் கருத்துமாய்க் கவனித்துவந்தனர். இது நிற்க.

குடிலன் அரசனைத் தூண்டித் தன் மகன் பலதேவனைச் சேரனிடம் தூது போக்கினான். சேர மன்னனான புருஷோத்தமன் குடிலனையும் பலதேவனையும் பற்றித் தாழ்ந்த கருத்துடையவன். பலதேவன் அவனிடம் சென்று, "நாஞ்சில் நாட்டைப் பாண்டிய

னுக்குத் திருப்பிக் கொடுத்துவிடவும்; இன்றேல் பாண்டியன் மகளை மணந்து, அந்த மண உறவினுல் காஞ்சில் நாட்டைப் பெறுக. இரண்டிற்கும் நீர் உடன்படவில்லையாயின், போர் புரிக," என்ருன். மான வீரனை புருஷோத்தமன் போருக்கு எழுந்தான். சேரர்படை கொதித்து எழுந்தது; சேரநாட்டு எல்லையைக் கடந்து பாண்டிய நாட்டிற்குள் புகுந்தது; பல ஊர்களை நாசமாக்கித் திருநெல்வேலியை நோக்கி வந்துகொண்டிருந்தது.

குடிலன் பாண்டியன் படைகளை அணிவகுத்தான்; நாராயணனையும் நடராசனையும் அரசனை நெருங்க விடாமல் தனித்தனி இடங்களில் நிறுத்திஞன்; சேர வீரர் அரசனை எளிதில் தாக்கிக் கொல்லும்படி வசதி செய்துவைத்தான். இதனைக் கவனித்துக்கொண்டேயிருந்த நடராசனும் நாராயணனும், சேரவீரர் அரசனைத் தாக்க நெருங்கிய போது, தத்தம் வீரருடன் நெருங்கி அவர்களைக் கொன்று அரசனைக் காத்தனர். அப்பொழுதும் அரசன் குடிலனது சூழ்ச்சியை உணரவில்லை. அவன் போரில் தான் இறந்தால் மனோன்மணியின் நிலை யாதாகுமோ என்று அஞ்சி, உடனே அவளைப் பலதேவனுக்குத் திருமணம் செய்துகொடுக்க முடிவு செய்தான்.

மனோன்மணி தன் கனவில் சேரமன்னனுகிய புருஷோத்தமனைக் கண்டு அவனையே மணக்க உறுதி பூண்டாள். எனினும் தன் கனவில் தோன்றியவன் சேரமன்னன் என்பதை அவள் அறியாள். சேரநாட்டு ஓவியன் காட்டிய மனோன்மணியின் உருவப்படத்தைக் கண்ட புருஷோத்தமன், அவள் பாண்டியன் மகள்

என்பதை அறியாத நிலையில் அவள்மீது அன்பு கொண்டான். தான் பலதேவனை மணக்க வேண்டும் என்று தன் தந்தை வற்புறுத்தியபோது வேறு வழியின்றி மனோன்மணி இசைந்தாள். எனினும் அவள் மனம் முழுவதும் கனவிற் கண்ட புருஷோத்தமனையே நாடியிருந்தது.

மண ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கையில், குடிலன் புருஷோத்தமனை அடைந்து பணிந்து, பாண்டியனைக் கொன்று அந்நாட்டைத் தனக்களிக்க வேண்டும் என்றும், தான் சேரனுக்கு அடங்கியிருப்பதாகவும் நயம்படக் கூறினான். சிறந்த ஒழுக்கமும் வீரவுணர்ச்சியும் கொண்ட புருஷோத்தமன் உடனே அவனைப் பிடித்து விலங்கிட்டு அழைத்துக்கொண்டு பாண்டியனிடம் வந்தான். மணவறையிலே இருந்த அனைவரும் அவ்விருவரையும் கண்டு வியப்பும் திகைப்பும் கொண்டனர். புருஷோத்தமன் மணப்பெண்ணாகிய மனோன்மணியைக் கண்டு திடுக்கிட்டான்; ஓவியன் காட்டிய உருவம் இப்பெண்மணியினதே எனத் துணிந்தான். அவனது தோற்றத்தைக் கண்ட மனோன்மணி, தான் கனவிற்கண்ட அழகன் அவனே எனத் துணிந்தாள். அப்பொழுது புருஷோத்தமன் குடிலன் சூழ்ச்சியை அம்பலப்படுத்தினான். ஜீவகவழுதி அப்பொழுதுதான் உண்மையை உணர்ந்தான். உடனே சுந்தர முனிவர் வாழ்த்துக் கூற, சேரமன்னனுக்கும் பாண்டியன் பாவைக்கும் திருமணம் சிறப்புற நடந்தது. நடராசனுக்கும் வாணிக்கும் திருமணம் நடைபெற்றது. பாண்டிய நாடும் சேரநாடும் உறவுகொண்டன.

மனோன்மணீயத்தில் அமைந்துள்ள தெய்வ வணக்கம் ஒரு தனிமுறை என்றே கூறவேண்டும். ஆசிரியர் தம் கண்ணிலும் கருத்திலும் காதிலும் நாவிலும் எப்பொழுதும் நடம் புரிந்துவந்த தமிழன்னையைத் தனிப்பெருந் தெய்வமாய்க் கொண்டு வணங்கியுள்ளார்; நிலத்தை ஓர் மடந்தையாகவும், பரத கண்டத்தை அவள் வதனமாகவும், தெக்கணத்தை அம்மடந்தையின் பிறைநுதலாகவும், திராவிட நாட்டை நுதலில் வைக்கும் திலகமாகவும் உருவகித்து, அத்திலகத்திலிருந்து நாற்புறமும் பரவும் நறுமணம் போன்றது தமிழ் என்று குறித்துள்ளது, ஆசிரியரது கற்பனைத் திறனையும் தாய்மொழிப் பற்றையும் நன்கு தெரிவிப்பதாகும். அடுத்த பாட்டில், ஆசிரியர் எல்லையறு பரம்பொருளோடு தமிழைச் சிறப்புற உவமித்துள்ளார்; 'கடவுள் பலகோடி உயிர்களையும் உலகங்களையும் படைத்து அளித்து அழித்துக்கொண்டிருப்பினும் அழியாப் பெரும்பொருளாய் விளங்குதல் போலத் தமிழணங்கு கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு என்னும் மொழிகளைத் தோற்றுவித்து ஒன்று பலவாய்ப் பெருக்கிக்கொண்டிருப்பினும், தன் இளமை நலம் குன்றாமல் கன்னியாகவே இருக்கின்றாள்[1]' என்று

---

1. நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே

அழகுபடக் கூறியுள்ளார். பிறபாடல்கள்[2] ஒவ்வொன்றும் தமிழ்த் தாயின் பெருமைகளைத் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டுவன.

நூற்றொகை விளக்கம்

சுந்தரம் பிள்ளை நூற்றொகை விளக்கம் என்னும் உரைநடை நூலை வெளியிட்டுள்ளார். அது, இக்கால நிலைக்கேற்பச் சாத்திரங்களை எத்தனை வகையாய் வகுக்கலாம் என்பதுபற்றியும், அவற்றின் முறையும் பொருளும் என்ன என்பதுபற்றியும் விளக்கிக்காட்டுவதாகும். அந்நூல், திருவாங்கூர் அரசாங்கத்தார் சொற்பொழிவு ஏற்பாட்டின்படி அரசர் கல்லூரியிற் செய்த சொற்பொழிவுகளின் தொகுப்பாகும்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள்

சுந்தரம் பிள்ளை தம் ஓய்வு நேரத்தைத் தமிழ் ஆராய்ச்சியிற் பயன்படுத்தியதன் பயனாகப் பல அரிய கட்டுரைகள் வெளிவந்தன. இவற்றுட் சிறந்தவை (1) தமிழ் இலக்கிய வரலாற்றுக் கால ஆராய்ச்சி, (2) சமய நூல் ஆராய்ச்சி, (3) பண்டைச் சேர வேந்தர் கால ஆராய்ச்சி, (4) பத்துப் பாட்டு ஆராய்ச்சி, (5) திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சி என்பன.

---

2. பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே.

இவற்றுள் மிகச் சிறந்தவை பண்டைச் சேர வேந்தர் கால ஆராய்ச்சியும் திருஞான சம்பந்தர் கால ஆராய்ச்சியுமாகும். திருஞான சம்பந்தர் கி. பி. 7-ஆம் நூற்றாண்டினர் என்பதை ஆசிரியர் பல சான்றுகள் காட்டி நிறுவியுள்ளனர். இந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஆங்கிலத்தில் வரையப்பட்டன. இவற்றைப் படித்த பல நாட்டறிஞரும் பிள்ளையவர்களது ஆய்வுத் திறனைப் பாராட்டினர்.

கல்வெட்டாராய்ச்சி

திருவாங்கூர்ச் சீமையில் கல்வெட்டாராய்ச்சி இலாகா ஒன்று ஏற்பட்டது. கோவிற் சுவர்களிலும் பிற இடங்களிலும் இருக்கும் கல்வெட்டுகளைப் படி எடுத்தல், அவற்றை அச்சிடுதல், அவற்றில் காணப்படும் செய்திகளை ஆராய்தல், விளக்குதல் என்பன கல்வெட்டு ஆராய்ச்சி இலாகாவின் வேலைகள். பிள்ளையவர்கள் அவ்விலாகாவில் கௌரவச் செயலாளராய் அமர்ந்து அரிய சேவை செய்தார். அவரது கல்வெட்டு ஆராய்ச்சியறிவைக் கண்ட பெர்லின் பல்கலைக் கழகத்தார், தம் பெர்லின் நகரில் ஆறு திங்கள் தங்கியிருடபின் 'தத்துவ அறிஞர்'* என்னும் பெரும் பட்டத்தை வழங்குவதாக வாக்களித்தனர். பிள்ளையவர்கள் பட்டத்திற்காக ஐரோப்பா செல்ல விரும்பவில்லை.

சிறப்புக்கள்

பிள்ளையவர்களின் ஆராய்ச்சி சென்னைக் கவர்னர் துரையவர்களை மகிழ்வித்தது. அவர் தூண்டுதல்மீது

---

* Doctor of Philosophy.

இலண்டன் வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தார் பிள்ளையவர்கட்கு F. R. H. S. என்னும் பட்டத்தை அளித்தனர்.[1] சென்னை அரசாங்கத்தார் ராய் பகதூர் என்னும் பட்டத்தை அளித்து மகிழ்ந்தனர். ஆசியாத் தொடர்பான ஆராய்ச்சிக் கழகம் தன் கழகவுறுப்பினராய்ப் (M. R. A. S.)[2] பிள்ளையவர்களைச் சேர்த்துக்கொண்டது. சென்னைப் பல்கலைக்கழகம் இவரைத் தன் கழகவுறுப்பினராய்ச் (F. M. U.)[3] சேர்த்துக்கொண்டது.

4. நல்லியல்புகள்

பெற்றோரிடம் அன்பு

பிள்ளையவர்கள்பால் காணப்பட்ட நல்லியல்புகள் பல. அவற்றுள் சிறந்தது பெற்றோரிடம் அவர் காட்டிய பணிவும் பக்தியுமாகும். அவர் பேராசிரியராய் இருந்த காலத்தும் பெற்றோர் சொற்படி நடந்துவந்தார்; அவர்கள் யோசனைக்கு மாறாய் நடந்தறியார்; தம் மனைவியாரையும் அங்ஙனமே நடக்கச் செய்தார்; 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்', 'தாய் சொல் துறந்தால் வாசகமில்லை,' 'தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை' என்ற பழமொழிகளைத் தம் நண்பர்கட்கு அடிக்கடி எடுத்துக் கூறிவந்தார்.

அடக்கம்

பிள்ளையவர்கள் இளமை முதல் அடக்கத்தை அணிகலனாய்க் கொண்டவர்; பள்ளியில் பிள்ளைகளிடமும்

---

1. Fellow of the Royal Historical Society.
2. Member of the Royal Asiatic Society
3. Fellow of the Madras University.

ஆசிரியரிடமும் பழகும்பொழுதும் அலுவல் பார்த்த காலங்களிலும் அடக்கத்துடன் நடந்துகொண்டதால் அவர் அனைவராலும் பாராட்டப்பெற்றார்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

என்னும் நன்மொழியைப் பொன்மொழியாய்ப் போற்றி வந்தார்.

கடவுள் பக்தி

பிள்ளையவர்கள் இறைவனிடம் நீங்காத அன்பு பூண்டவர். அவர் தம் பிள்ளைப் பருவமுதலே, தந்தையார் நல்லுரைப்படி, வழிபாடு செய்தபின்னரே மற்ற வேலைகளைக் கவனித்துவந்தார். சைவராதலின் சைவத் திருமுறைகளை நன்கு பயின்றார்; பிற சமய நூல்களையும் நன்கு கற்றுச் சமய நூலறிவு நிரம்பப் பெற்றார்; வேதாந்த சாஸ்திரங்களில் போதிய பயிற்சி பெற்றார். உண்மையான சமயத் துறவிகளிடம் மிக்க அன்பையும் மதிப்பையும் காட்டினார்.

காலத்தின் அருமை

கற்றவர் பலர் தம் ஓய்வுக் காலத்தை வீணே கழிப்பதைப் பார்க்கலாம். பிள்ளையவர்கள், அவர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர் அல்லர். அவர் காலத்தின் அருமையை நன்கு அறிந்தவர்; ஒரு மணி நேரம் வீணாதல் நமது வாழ்நாளில் ஒரு பகுதி வீணாதல் என்பதாகும். இதனைப் பிள்ளையவர்கள் நன்கு உணர்ந்தவர். ஆதலால் அவர் ஒரு மணி நேரத்தையும் வீணாக்காது பயனுடையதாகச் செய்துவந்தார் என்பது கவனிக்கத் தக்கது.

தாய்மொழிப் பற்று

அவர் ஆங்கிலத்தில் வல்லவர் எனினும் தம் தாய்மொழியையே தம் உயிரெனக் கருதினார்; தமிழ் நூல்களை முயன்று கற்றுத் தமிழ்ப் புலமை பெற்றார்; நாட்டவர் வியக்கத்தகும் நன்னூலாகிய மனோன்மணீயத்தைச் செய்து மங்காப் புகழ் பெற்றார்; அரிய ஆராய்ச்சிகள் செய்து தாய்மொழியின் பெருமையையும் பழைமையையும் அயல்நாடுகளிலும் எட்டும்படி செய்தார். தமிழில் இக்காலத்தில் நாடக நூல் இல்லை என்னும் குறையை ஓரளவு நீக்கிய பெருமையும் தமிழுக்குச் செய்த தொண்டுமே பிள்ளையவர்களைத் தமிழகம் என்றும் நினைக்குமாறு செய்யவல்லன.

II. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்

(கி. பி. 1870—1903)

1. இளமையும் கல்விப் பயிற்சியும்

முன்னுரை

சிறந்த நாடக நூல்களையும் செய்யுள் நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் தமிழ் மொழியில் வரைந்து, சென்னைக் கிறித்தவக் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியராயிருந்து தொண்டாற்றி மறைந்த பெரியார் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் ஆவர். அவர் பி. ஏ. பட்டம் பெற்றவர். அவரது வரலாறு மாணவர் முன்னேற்றத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக வல்லது.

முன்னோர்

சாஸ்திரியார் மதுரையை அடுத்துள்ள விளாச்சேரி என்னும் சிற்றூரினர். அவர் முன்னோர் சில நூற்றாண்டுகட்கு முன் பிரயாகை என்னும் இடத்திலிருந்து தமிழகத்திற் குடி புகுந்தவர். அவர்கள் 'தீக்ஷிதர்', 'சாஸ்திரியார்' என்னும் பட்டங்களைப் பெற்றவர்கள்; வடமொழியிற் சிறந்த கல்விமான்கள். ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கிய அப்பெருமக்கள் தமிழ் நாட்டில் பல இடங்களிற் குடியேறி வாழலாயினர். அவருள் ஒருவர் விளாச்சேரியில் தங்கி வாழ்ந்துவந்தார். அவர் மரபில் வந்தவரே நமது சாஸ்திரியார்.

பெற்றோர்

சாஸ்திரியாரது தந்தையார் பெயர் கோவிந்த சிவனார் என்பது. அவர் வடமொழி, தென்மொழி இரண்டையும் அறிந்தவர்; சைவ சமயத்தில் அழுத்தமான பற்றுடையவர்; யோகாப்பியாசம் செய்வதில் தேர்ச்சி பெற்றவர்; வாயுஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம், அக்கினி ஸ்தம்பனம் முதலியவற்றைச் செய்து காட்டியவர். அப்பெரியார் மாந்திரிகத்திலும் வல்லவர். அவர் அமைதி குடிகொண்ட மனத்தினர்; புன்னகை தவழ்ந்த முகத்தினர்; எவரிடத்தும் மிக்க அன்பும் மரியாதையும் காட்டிப் பேசுபவர். இந்நல்லியல்புகளால் விளாச்சேரி மக்கள் அவரைப் பெரிதும் மதித்து மரியாதையுடன் நடந்துவந்தனர்.

அவரது இல்லக் கிழத்தியார் மாசற்ற மணியாவர்; வருவிருந்து உவப்பவூட்டும் நேசம் மிக்குடையவர்; கணவர் கருத்தறிந்து ஒழுகும் நீர்மையுடையவர்; கணவர் வருவாய்க்குத் தக்கவாறு குடும்பத்தை நடத்துவதில் சமர்த்தர்; அமைதிக்கு இருப்பிடமானவர். அவ்வம்மையார் சிறந்த பக்தி உடையவர். அவர் இல்லறத்தார் ஆற்றவேண்டும் கடமைகளைத் தவறாது நடத்தி வந்தார்.

பிள்ளைகள்

இங்ஙனம் பல நலங்களும் சிறக்கப் பெற்ற கணவரும் மனைவியாரும் மலரும் மணமும்போல இல்லறத்தை இனிதாய் நடத்திவந்தனர். அவர்களுடைய நற்பண்புகளையும் இனிய இல்லற வாழ்க்கையையும் கண்டு ஊரார் நன்மதிப்புக் கொண்டனர். கோவிந்த சிவனார் மனையறத்தை மாண்புறச் செய்ய மக்கள்

இருவர் தோன்றினர். மூத்தவர் பெயர் சுந்தரேச சாஸ்திரியார் என்பது; இளையவரே நமது சூரிய நாராயண சாஸ்திரியார்.

கல்விப் பயிற்சி

'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்பதற்கு ஏற்ப, நமது சாஸ்திரியார் தம் பிற்காலப் புகழுக்கு அடிப்படையான சுறுசுறுப்பு, அஞ்சாமை முதலிய நற்பண்புகளை இளமைப் பருவத்திலேயே பெற்றிருந்தார். அவர் பள்ளிக்குச் செல்லுமுன்னரே தந்தையாரிடம் இராமாயணம், பாரதம், பாகவதம், திருவிளையாடற் புராணம் ஆகிய நூற் கதைகளைக் கேட்டறிந்தார்; கிராம வாழ்க்கையைப்பற்றிய அறிவினைப் பெற்றார்; தந்தையார் அடிக்கடி பாடிவந்த தோத்திரப் பாக்களைப் பாடித் தந்தையாரை மகிழ்வித்தார்.

அவர் ஒரு நிமிடத்தையும் வீணாய்க் கழித்ததில்லை; தெருவில் தம்மை ஒத்த சிறுவருடன் விளையாடுவார்; அவர்கட்குத் தாமே தலைவராய் நிற்பார்; நின்று, பல வகை விளையாட்டுகளை நடத்துவார்; கொல்லையில் தாமாகவே ஏதேனும் வேலை செய்துகொண்டிருப்பார்; வீட்டிற்கு வந்து பெற்றோருடன் பேசுபவர் பேச்சுக்களைக் கவனமாய்க் கேட்பார்; அவற்றுள் தமக்குப் புரியாதவற்றைப் பெற்றோரைக் கேட்டுத் தெளிவார்; தாயாருடன் அடிக்கடி கோவில் சென்று மீள்வார். அவரது பரந்த நெற்றி, அகன்ற விழிகள், புன்னகை தவழும் வாய், இவற்றைக் கண்டும் பல பொருள் பற்றிய இனிய அவரது பேச்சினைக் கேட்டும் பெற்றோரும் மற்றோரும் பெருமகிழ்ச்சி அடைந்தனர்; 'இவன்

தக்க வயதில் பெயரும் புகழும் பெறுவான்,' என்று சோதிடம் கூறினர்.

கல்வி கற்றல்

சாஸ்திரியார் ஐந்து வயதிற் கிராமப் பள்ளியிற் சேர்ந்தார்; பத்து வயதுவரை தமிழ் வாசித்தார். அவர் வீட்டிலும் தந்தையாரிடம் தமிழ்ப் பயிற்சி பெற்றார்; ஆதலின் முதல் மாணவராய்ச் சிறந்து விளங்கினார்; பள்ளி விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வத்தைக் காட்டினார்; பாடம் ஒப்பித்தலில் சுறுசுறுப்பாய் இருந்தார்; தம் வகுப்பு மாணவர்க்குத் தலைவராய்த் திகழ்ந்தார். அவருடைய சுறுசுறுப்பைக் கண்ட ஆசிரியர் மிக்க மகிழ்ச்சியுற்றார்.

கிராமக் கல்வி முடிந்ததும் சாஸ்திரியார் விளாச்சேரிக்கு ஒரு கல் தொலைவில் உள்ள பசுமலைப் பள்ளியிற் சேர்ந்தார். அவர் நாள்தோறும் தம் சிற்றூரிலிருந்து பசுமலைக்குப் போக்கு வண்டியில் ஏறியோ, நடந்தோ சென்றார்; நாடோறும் தம் பாடங்களைத் தவறாது படித்துவந்தார்; வகுப்பிற் சிறந்த பேச்சாளராய்த் திகழ்ந்தார்; பள்ளி விளையாட்டுகளிற் கவனம் செலுத்தினார்; ஆசிரியர்களுடன் நெருங்கிப் பழகினார்; தமக்குப் பாடத்தில் தோன்றும் ஐயங்களை அஞ்சாது கேட்டுத் தெளிந்தார்; தமிழில் மிகுந்த ஆர்வத்தைக் காட்டிப் படித்துவந்தார். அவர் எப்பொருளையும் நுட்பமாய் ஆராய்ந்தறியும் இயல்பினராய் இருந்தார்.

மதுரையில் வாழ்க்கை

பசுமலைப் பள்ளியில் படித்து முடித்த பிறகு சாஸ்திரியார் மதுரையில் இருந்த பள்ளி ஒன்றிற்

சேர்ந்தார். அவர் அக்காலத்தில் தம் தந்தையாரிடம் வடமொழியைக் கற்றார். அப்பொழுது மதுரையில் மஹா வித்துவான் சபாபதி முதலியார் என்ற பெரியார் ஒருவர் இருந்தார். அவர் அரசாங்கப் பள்ளியில் தமிழ் ஆசிரியராய் இருந்து ஓய்வு பெற்றவர். அவர் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் நன்கு பயின்றவர். அவரிடம் பலர் தமிழ்ப் பாடம் கேட்டுவந்தனர். சாஸ்திரியார் உயர்நிலைப்பள்ளி மாணவராய் இருந்த பொழுதே மஹாவித்துவான் அவர்களிடம் தனியே தமிழ் நூல்களைப் பாடம் கேட்டுவந்தார். பள்ளிச் சிறுவராகிய சாஸ்திரியார்க்குத் தமிழில் இருந்த பற்றினைப் பார்த்து மகிழ்ந்த மஹாவித்துவான் அவர்கள் பேரன்புகொண்டு பாடம் கற்பித்துவந்தார். சாஸ்திரியார் கூரிய அறிவு படைத்தவர் அல்லவா? அதனால் அவர் பல நூல்களைப் பாடம் கேட்டுச் சங்கப் பாக்களைப் படித்து இன்புறும் அளவுக்குப் புலமை பெற்றார்; விரைந்து கவிபாடும் ஆற்றல் பெற்றார். அக்காலத்தில் அவர் செய்தது 'மாலா பஞ்சகம்' என்ற தோத்திர நூலாகும்.

உயர்நிலைப்பள்ளி மாணவராய் இருந்தபொழுதே சாஸ்திரியார் உடற் பயிற்சியிலும் ஊக்கம் காட்டி வந்தார்; பள்ளி விளையாட்டுகளிற் பரிசுகள் பல பெற்றார்; மதுரை யானைப் பாகர் ஒருவரிடம் சிலம்ப விளையாட்டும் மற்போரும் கற்றார்; அவை இரண்டிலும் பொற்பதக்கங்களும் பெற்றார்.

உற்ற நண்பர்

சாஸ்திரியார் எப். ஏ. வகுப்பில் வாசித்துவந்த பொழுது விசுவநாத முதலியார் என்பவருடன் சிறந்த

நண்பரானார். விசுவநாதர் தந்தையார் மதுரையில் வாழ்ந்த செல்வருள் ஒருவர். 'நல்லார் நட்பு வளர்பிறை போல வளரும்' என்று புலவர் கூறுவர். அவ்வாறே சாஸ்திரியார்—முதலியார் நட்புச் சிறப்புற வளர்ந்தது. இருவரும் இணைபிரியாத நண்பராயினர். இந்நிலையில் சாஸ்திரியார் 1891-இல் எப். ஏ. தேர்வில் முதல்வராய்த் தேர்ந்தார்; சேதுபதி அரசரது உதவிச் சம்பளம் பெற்றார். தம் நண்பர் பெற்ற சிறப்பினைக் கண்ட முதலியார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்: சாஸ்திரியாரைத் தம் செலவில் சென்னைக்கு அழைத்துச் சென்று, கிறித்தவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் சேர்த்தார்.

கல்லூரிப் படிப்பு

சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தலைவர் மில்லர் துரை அவர்கள். அவர் சிறந்த படிப்பாளி; கல்லூரியைச் சிறப்புற நடத்திப் புகழ்பெற்றவர். அவர் நமது சாஸ்திரியார் பெயரைக் கண்டு மயங்கி, "உமது பெயரை மாற்றிக்கொள்ள முடியுமா?" என்று கேட்டார். சாஸ்திரியார் அதற்கு இசைந்து, கல்லூரிக் குமாஸ்தாவிடம் சென்று, 'சூரிய நாராயணன்' என்ற தம் பெயரைச் 'சூரிய நாராயண சாஸ்திரி' என்று மாற்றிவிட்டனர். மறுநாள் மில்லர் துரை முன்னதைவிட நீண்ட பெயரைக் கண்டு வியப்புற்றுச் சாஸ்திரியாரைப் பார்த்தார். உடனே சாஸ்திரியார், "ஐயா, தாங்கள் எனது பெயரை மாற்றச் சொன்னீர்கள். நான் அதன்படியே மாற்றிவிட்டேன்," என்று அஞ்சாது கூறினார். மில்லர் துரை சாஸ்திரியாரது அஞ்சாமையையும் அறிவு நுட்பத்தையும் கண்டு பாராட்டினார். அவர் அன்று முதல்

சாஸ்திரியாரது கல்வி வளர்ச்சியிலும் சொந்த நலத்திலும் ஊக்கம் காட்டி உதவிவந்தனர்.

சாஸ்திரியார் பி. ஏ. வகுப்பில் மிகுந்த கருத்தினைச் செலுத்திப் படிக்கலானார்; மாணவர் பேச்சுக் கழகங்களில் சிறந்து விளங்கினார்; தூய தமிழில் பிழையறப் பேசுவதையே பழக்கமாய்க் கொண்டார்; மாணவரும் ஆசிரியரும் பாராட்டத்தக்க முறையில் நடந்துவந்தார்; 1892-இல் நடந்த பி. ஏ. தேர்வில் சிறப்புறத் தேர்ச்சி பெற்றார்; தமிழ் மொழியிலும் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் மாகாணத்திலேயே முதல்வராய்த் தேறினார்.

2. கல்லூரித் தமிழாசிரியர்

பெரியோர் பாராட்டு

சி. வை. தாமோதரம் பிள்ளை என்பவர் யாழ்ப்பாணத்துத் தமிழர். அவர் சென்னைக் கோட்டையில உயர்தர அலுவலில் இருந்து ஓய்வு பெற்றவர். அப்பெரியார் தமிழில் சிறந்த புலமை உடையவர்; தொல்காப்பியம் முதலிய பழைய தமிழ்நூல்கள் சிலவற்றை முதன் முதல் அச்சிட்டு வெளிப்படுத்தியவர். அவர் பெயர் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. பி. ஏ. தேர்வில் தமிழ் மொழியில் முதல்வராய்த் தேறிப் பாஸ்கர சேதுபதி அவர்களது பொற்பதக்கம் பெறுபவரைப் பிள்ளையவர்கள் சோதிப்பது வழக்கம். அதனால் அவர் நமது சாஸ்திரியாரை வரவழைத்தார்; ஒரு மணி நேரத்துக்குரிய கேள்வித்தாள் ஒன்றைக் கொடுத்து விடை எழுதுமாறு பணித்தார். சாஸ்திரியார் விடை

எழுதி முடித்தார். பிள்ளையவர்கள் அவரை மறுநாள் வருமாறு கூறினர்.

மறுநாள் சாஸ்திரியார் சென்று பிள்ளையவர்களைக் கண்டார். உடனே பிள்ளையவர்கள் மலர்ந்த முகத்துடன் சாஸ்திரியாரைப் பார்த்து, "உமது தமிழ் வன்மையை நீர் எழுதிய விடைகளைக் கொண்டு நன்கு உணர்ந்தேன். உமது மொழிபெயர்க்கும் ஆற்றலையும் கவிபாடும் திறமையையும் காணவிரும்புகிறேன்," என்று சொன்னார்; சொல்லி, ஆங்கிலப் பெரும்புலவரான ஷேக்ஸ்பியர் வரைந்த 'வெனிஸ் வாணிகன்' என்னும் நாடகத்தில் உள்ள சில வரிகளைத் தந்து, அவற்றைக் கருத்துச் சிதையாமல் தமிழிற் செய்யுள் வடிவில் தம் முன்பாகப் பாடித் தரும்படி கேட்டார். சாஸ்திரியார் மிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டு, அவ்வாங்கில வரிகளைப் படித்தார்; பொருள் உணர்ந்தார்; உடனே ஒரு தாளில் தமிழ்ச் செய்யுள் ஒன்றை எழுதினர்; அதனைப் பிள்ளையவர்கட்குக் காட்டினர்.

"கன்னலங் கனிந்த பாடற் காயக னல்ல னேனும்
இன்னிசை கேட்டு நெஞ்சம் இளகிடா திருப்பான் வஞ்ச
மன்னவர் துரோக மாதி மாபவம் செய்யத் தக்கான்
அன்னவன் தனை நம்பாமல் அகற்றிட வேண்டும் அன்றே."*

---

* The man that hath no music in himself,
Nor is not moved with concord of sweet sounds,
Is fit for treasons, stratagems and spoils;
The motions of his sprit are dull as night
And his affections dark as Erebus:
Let no such man be trusted.

(Merchant of Venice, Act V. Scene I)

இச்செய்யுளைப் படித்துப் பார்த்த பிள்ளையவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்; சாஸ்திரியாரை மனமாரப் பாராட்டி, அவருக்குத் திராவிட சாஸ்திரி என்ற பட்டம் அளித்தார்; அவரது புலமையைப் பாராட்டிப் பல தமிழ் நூல்களை அவருக்குப் பரிசாய் வழங்கினார்; "இவ்விடைத்தாளில் எழுதிய செந்தமிழ் நடையிலேயே நூல் ஒன்று வரைய இயலுமோ?" என்று கேட்டார். சாஸ்திரியார், "இயலும்" என்று கூறி, அன்று முதல் மதிவாணன் என்னும் புதுவது புனைந்ததோர் செந்தமிழ்க் கதையை எழுதத் தொடங்கினார். அது சிறிது சிறிதாய் 'ஞான போதினி' என்ற இதழில் வெளிவரலாயிற்று. ஆயின், அது முற்றுப் பெறுவதற்குள் பிள்ளையவர்கள் காலமானது வருந்தற்குரியது.

கல்லூரித் தமிழாசிரியர்

மில்லர் துரை நமது சாஸ்திரியாரிடம் மிக்க அன்பு கொண்டவர் அல்லவா? அவர் சாஸ்திரியாரைத் தமது கல்லூரியிலேயே தமிழாசிரியர் வேலையில் அமர்த்திக் கொண்டார். சாஸ்திரியார் வேதாந்த தத்துவ சாத்திரத்திலும் முதல்வராய்த் தேறியிருந்தும், அப்பாட ஆசிரியராக விரும்பாது, தமிழாசிரியர் பதவியையே விரும்பியது அவர் தமிழினிடம் கொண்டிருந்த பற்றை நன்கு காட்டுகின்றதன்றோ?

சாஸ்திரியார் தமிழ் ஆசிரியர் பதவி ஏற்ற பிறகு சங்கத் தமிழ் நூல்களை நன்கு பயின்றார்; பிற்காலத் தமிழ் இலக்கண இலக்கியங்களை ஊன்றிப் படித்தார்; தமிழ் மொழியின் தோற்றம், வளர்ச்சி, மாறுதல் பற்றிய விவரங்களை நன்கு ஆராய்ந்தார்; ஆங்கில இலக்கியங்களையும் கருத்தூன்றிப் படித்தார்; வகுப்பு

களில் வடமொழி-தென்மொழி-ஆங்கிலம் இவற்றின் தனித்தனிச் சிறப்பியல்புகளையும் மூன்றிலும் உள்ள பொதுத் தன்மைகளையும் தெளிவாக விளக்கிப் பேசினர்; சொற்களின் பிறப்பு, வளர்ச்சி பற்றிய விளக்கங்களைத் தந்தார். அவர் செய்யுட்களை இசையுடன் படித்துக் காட்டிப் பொருளை விளக்கினர்; தேவைப்பட்ட சந்தர்ப்பங்களில் வடமொழி — ஆங்கில நூல்களிலிருந்து மேற்கோள் காட்டி மாணவரை இன்புறுத்தினர். அவர் எப்பொழுதும் செந்தமிழ் பேசிவந்ததைக் கண்ட மாணவருட் சிலர் அவரைப் பின்பற்றிப் பேசிப் பழகினர். "பிழையறப் பேசிப் பழகின், பிழையற எழுதலாம்" என்று சாஸ்திரியார் அடிக்கடி கூறிவந்தார். சாஸ்திரியார் செய்த செந்தமிழ்ச் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேட்டு மாணவர் தமிழ்ப் பற்றுக் கொண்டனர் என்னல் மிகையாகாது. அவர் கல்லூரியில் நற்பெயர் பெற்றார்.

தமிழ்ப் பேராசிரியர்

சாஸ்திரியாருக்கு மேலே இருந்த தமிழ்ப் பேராசிரியர் 1895-இல் காலமானர். சாஸ்திரியாரது கற்பிக்கும் ஆற்றலையும் மாணவர் மனம் கவரும் திறமையையும் நுண்ணறிவையும் நன்கறிந்த மில்லர் துரை அவரையே தமிழ்ப் பேராசிரியராய் நியமித்தார். அவரது வகுப்பிற்குத் தமிழ் மாணவர் தவறுவதே இல்லை; தாயைக் கண்ட சேய்களென மகிழ்ச்சியுடன் வகுப்பிற் கூடுவர்; அவரது செந்தமிழ் நடையினைச் செவியாரப் பருகுவர்; ஆங்கிலம்-வடமொழி-தமிழ் இவற்றிலிருந்து கூறும் ஒப்புமைப் பகுதிகளைக் கேட்டு இன்புறுவர்.

மறைமலை அடிகள்

சாஸ்திரியார் பேராசிரியரான பிறகு, அவர் முன்பு இருந்த ஆசிரியர் பதவிக்குப் பலர் விண்ணப்பித்தனர். அவ்விண்ணப்பதாரருள் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகள் ஒருவராவர். அவர் அக்காலத்தில் வேதாசலம் பிள்ளை எனப்பட்டனர். அவர் அப்பொழுது இளைஞர் ஆயினும் ஆங்கிலம் - தமிழ் - வடமொழி இவற்றில் அறிஞராய் விளங்கினார். அவரது விண்ணப்பமே சாஸ்திரியாருக்குப் பிடித்திருந்தது. எனினும் அவர் வேறு சிலரையும் தேர்ந்தெடுத்து வரச் செய்தார்; ஒவ்வொரு நாள் ஒருவரை வகுப்பு எடுத்துக் கொள்ளுமாறு செய்தார்; இறுதியில் மறைமலையடிகளே தம்முடன் தமிழ்ப்பணி ஆற்றத் தக்கவர் என்ற தமது முடிவை மில்லர் துரைக்கு அறிவித்தார். அப்பெரியார் மறைமலையடிகளையே தமிழ் விரிவுரையாளராக அமர்த்தினார்.

இரு பெரும்புலவர்

சாஸ்திரியாரும் மறைமலையடிகளும தமிழ் - ஆங்கிலம் - வடமொழி இவற்றில் வல்லுநராக இருந்தனர்; இருவரும் தூய செந்தமிழ் நடையிற் பேசிவந்தனர்; இருவரும் தமிழாராய்ச்சியிற் சிறந்து விளங்கினர்; இருவரும் சிறந்த சொற்பொழிவாளர்கள்; பாடம் கற்பிப்பதில் பண்பட்டவர்கள். ஆதலின் மாணவர் கொண்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. உண்மையாகவே அக்காலத்தில் சென்னைக் கிறித்தவக் கல்லூரி இரு பெரும்புலவரைப் பெற்றிருந்தது.

இயற்றமிழ் மாணவர்

கல்லூரி மாணவருள் தமிழை மிகுதியாய்ப் படிக்க வேண்டும் என்று விரும்பியவர்க்குச் சாஸ்திரியார் தம் வீட்டில் தனி வகுப்பு வைத்து நடத்திவந்தனர்; அவர்கட்கு 'இயற்றமிழ் மாணவர்' என்று பெயரிட்டனர். சாஸ்திரியார் ஆண்டுதோறும் அவர்கட்குத் தேர்வுகள் வைத்து நடத்திப் பரிசுகள் வழங்கினர். அவர்கள் சிறந்த தமிழ்ப்பற்றுடையவர்களாய் விளங்கவேண்டும் என்பது சாஸ்திரியார் எண்ணம். கல்லூரியில் தமிழ்ப் பணி ஆற்றியது போதாதென்று வீட்டிலும் வகுப்பு வைத்து நடத்திய அவரது தமிழ்ப்பற்றை என்னெனப் புகழ்வது! அவர் மாணவர் ஒருவரிடமிருந்தேனும் சம்பளம் பெற்றதில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

தந்நலம் அற்றவர்

சாஸ்திரியாரிடம் தனியே தமிழ் படித்துவந்தவருள் சரவண முதலியார் என்பவர் குறிப்பிடத்தக்கவர். அவர் கல்லூரியிலும் பி. ஏ. வகுப்பில் சாஸ்திரியாரிடம் படித்துவந்தார். அவர் பி. ஏ. தேர்வுக்குச் சென்ற ஆண்டில் சாஸ்திரியார் தமிழ்த் தேர்வாளராய் இருந்தார். "சாஸ்திரியாரே தேர்வாளராதலின் அவரிடம் பாடம் கேட்கும் முதலியார் முதன்மையுறத் தேறுதல் எளிது; பாஸ்கர சேதுபதி அவர்கள் பொற்பதக்கத்தையும் அவரே பெறுவார்," என்று மாணவர் கூறினர். முதலியார் உத்தமர்; உழைப்பாளி. ஆதலின் மாணவர் சொல்லைப் பொறார் ஆயினர். அவர் நேரே சாஸ்திரியாரிடம் சென்று, மாணவர் கூறியதைக் கூறி, "இந்த ஆண்டு நீங்கள் தேர்வாளர் பதவியை ஏற்கவேண்டா.

வேறு எவர் வரினும் வருக. நான் முதன்மை பெற்றுப் பரிசு பெற்றே தீருவேன்," என்றார். உடனே சாஸ்திரியார் தமக்குத் தேர்வாளர் பதவி வேண்டா என்றும், தமக்குப் பதிலாகக் கும்பகோணம் கல்லூரியில் இருந்த (டாக்டர்) உ. வே. சாமிநாதையர் அவர்கட்கு அதனை அளிக்குமாறும் அதிகாரிகட்குக் கடிதம் எழுதினார். அதிகாரிகள் அங்ஙனமே செய்தனர். முதலியாரே பரிசு பெற்றார். தம் மாணவர் வேண்டுகோளுக்கு இணங்கித் தம் பதவியைத் துறந்த சாஸ்திரியாரைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் ?

இளமையில் மறைவு

இங்ஙனம் பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையும் கொண்டு சாஸ்திரியார் செய்த செயல்கள் பலவாகும். அவர் பலர் வேண்டுகோளுக்கு இணங்கி நூல்கள் வரையலானார்; பாக்கள் இயற்றலானார்; கல்லூரி வேலை முடிந்ததும் வீட்டில் முன்சொன்னவாறு தமிழ் வகுப்புகள் நடத்திவந்தார். சுருங்கக் கூறின், அவர் ஓய்வின்றித் தமிழுக்கு உழைத்தார். அதன் பயனாக க்ஷயரோகம் அவரைப் பற்றியது. அவரது மனைவியாரான முத்து சுப்பலக்ஷ்மி அம்மையார் கணவர்க்கேற்ற காரிகையார் ; அவர் கருத்தறிந்து நடப்பதையே தமது கொள்கையாய்க்கொண்டவர் ; ஆதலின் கணவர் ஓய்வின்றி வேலை செய்துவந்ததைக் கண்டிக்கவில்லை : அன்பு தவழ இரண்டொரு முறை "ஓய்வின்றி வேலை செய்ததால் அல்லவா இருமல் நோய் தோன்றியிருக்கிறது !" என்று பக்குவமாய்ப் பகர்ந்தார். சாஸ்திரியார் புன்முறுவல் காட்டித் தலையசைத்து வாளா இருந்தனர்.

59920
மறைமலை அடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY

சாஸ்திரியார் இருமல் நோயால் அன்புற்றபொழுதும் தமிழ்ப் பாடம் நடத்துவதை நிறுத்தவில்லை; மாணவரை நோக்கி, "ஐயா, இருமல் எம்முடன் பெருமல் செய்கிறதே!" என்று கூறிக்கொண்டே பாடம் நடத்துவார். நாளடைவில் அவர் உடல் மெலிவடைந்து வந்தது. அந்த நிலையிலும் அவர் வாயாற் கூறிய செய்திகளை மாணவர் சில நூல்களாக எழுதி முடித்தனர். தமிழன்னைக்கே தம் வாழ்நாட்களைத் தியாகம் செய்த சாஸ்திரியார் இருமல் நோய் மேலிட்டு 1903-இல் மண்ணுலக வாழ்வை நீத்தார். அப்பொழுது அவருக்கு வயது முப்பத்து மூன்று.

3. சாஸ்திரியார் தமிழ்த்தொண்டு

தமிழாசிரியர்

கணிதம், விஞ்ஞானம் முதலிய பாடங்களின் ஆசிரியர்கள் தங்கள் பாட அளவிலே நின்று கற்பிக்க வேண்டுபவராவர். ஆயின் மொழி, வரலாறு முதலிய பாட ஆசிரியர்கள், பாடங்கள் பல திறப்பட்டவை ஆதலின், பலவகைப்பட்ட வெளிச் செய்திகளையும் மேற்கோள்களையும் கூறவேண்டுபவர் ஆகின்றனர். ஆதலின் உலகச் செய்திகள் பலவும் இப்பாட வகுப்புகளில் ஆசிரியர்களாற் குறிக்கப்பெறும். தமிழ் ஆசிரியர் தமிழ்மொழி வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு, தென் இந்திய நாட்டு வரலாறு முதலியவற்றை நன்கறிந்தவராதல் வேண்டும். அந்நிலையில் தமிழாசிரியர் இருப்பின், அவரது புலமை மாணவர்க்குப் பெரிதும் பயன்படும். மாணவர் தாம் படியாமலே மொழிபற்றிய பல செய்திகளையும் ஆசிரியர் வாயிலாக அறிந்துகொள்

வர். உண்மையில் இங்ஙனம் பிள்ளைகட்குப் பரந்த அறிவினை ஊட்டும் ஆசிரியர் சிறந்த மொழித்தொண்டு செய்பவர் ஆவர். நமது சாஸ்திரியார் இத்துறையில் தலைசிறந்து விளங்கினார். அவரது ஆசிரியத் தொண்டு பாராட்டத்தக்கதே ஆகும். அவர் மும்மொழிப்புலவர் ஆதலின், தமிழில் உயர்ந்த கருத்துக்கள் வந்தபொழுது, அவற்றுக்கு நேரான ஆங்கிலக் கருத்துக்களைக் கூறி, ஆங்கிலப் புலவர் கூறிய முறையினைவிடத் தமிழ்ப் புலவர் கூறியுள்ள முறை சிறந்து நிற்றலைத் தெளிவாய் விளக்கிக் காட்டி மாணவரை மகிழ்வித்தார். இங்ஙனம் சிறிது சிறிதாய் மாணவர்க்குத் தமிழ்மீது பற்றுள்ளம் கொள்ளச் செய்தார்.

நாடக நூலாசிரியர்

'தமிழில் நாடகநூல்கள் இல்லை' என்ற குறையை நீக்கவேண்டும் என்பது சாஸ்திரியார் எண்ணம்; அவை அமைதற்குரிய இலக்கண நூல் ஒன்றும் முறைப்படத் தமிழ் மொழியில் இன்மையால், நாடக இயல் என்றதோர் புதுமைச் சூத்திர நூலை இயற்றினார்; அந்நாடக இயல் முறைப்படியே ரூபாவதி, கலாவதி, மான விஜயம் என்னும் நாடகநூல்களை வரைந்தார்.

மானவிஜயம் என்பது செய்யுள் நடையில் ஓர் அங்கத்தில் அமைந்தது; களவழி நாற்பது என்னும் நூலையும் 'குழவி இறப்பினும்' என்னும் தொடக்கத்துப் புறநானூற்றுப் பாடலையுமே பற்றிக்கொண்டு எழுதப் பட்டது. ரூபாவதி செய்யுளும் பாட்டும் கலந்த நாடக நூல். கலாவதியும் அவ்வாறு அமைந்ததே ஆகும். சாஸ்திரியார் தமிழ்ப் பாக்களின் எல்லா வகைகளையும் இதனிற் சேர்த்திருக்கின்றார். இந்நூல் பாஸ்கர சேதுபதி

அவர்கட்கு உரிமையாக்கப்பட்டது. 'முத்திரா ராக்ஷஸம்' என்னும் நாடகநூலும் சாஸ்திரியாரால் எழுதப்பட்டது.

சிறந்த நடிகர்

சாஸ்திரியார் நாடகநூலாசிரியர் மட்டும் அல்லர். அவர் சிறந்த நடிகராகவும் விளங்கினார். அவர் அழகிய தோற்றமும் இனிய குரலும் உடையவர்; ஆதலால் பெண்வேடம் தாங்கி நடிப்பதில் பெருவிருப்பம் உடையவராய் இருந்தார். சென்னையில் அக்காலத்தில் 'வித்வமனோரஞ்சனீ சபை' என்றொரு நாடகசபை இருந்தது. அதனில் நமது சாஸ்திரியார் உறுப்பினராய்ச் சேர்ந்து, நடிகரானார்; தாம் வரைந்த ரூபாவதி, கலாவதி என்ற நாடகங்களில் தாமே கதாநாயகிகளாகிய ரூபாவதியாகவும் கலாவதியாகவும் வேடம் புனைந்து நடித்தார். அவரது நடிப்பைக் கண்ட அறிஞர் வியந்து பாராட்டினர்.

பாராட்டுக்குரிய பாவலர்

சாஸ்திரியார் இளமை முதலே பாக்களை இயற்றும் ஆற்றல் பெற்றவர் அல்லவா? அவர் பல பொருள் பற்றி அகவற்பாக்கள் பாடி அவற்றை ஒரு நூலாய் வெளியிட்டனர்; அதற்குத் 'தனிப்பாசுரத் தொகை' எனப் பெயரிட்டனர்; அந்நூலின் அட்டையில் சூரிய நாராயண சாஸ்திரி என்னும் தம் பெயரை, அதன் தமிழ்ப்பெயரான பரிதிமாற் கலைஞன் என்று மாற்றி அச்சிடுவித்தார். அந்நூல் தமிழ்ப் புலவர்களது பாராட்டுக்கு உரியதாயிற்று. அந்நூற்பாக்களை ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத் தமிழ்ப் புலவராய் விளங்கிய

ஜி. யூ. போப் என்பவர் படித்து மகிழ்ந்தார். போப் ஐயரைத் தமிழ் உலகம் நன்கறியும். அவர் ஓர் ஆங்கில அறிஞர்; தமிழைப் பல ஆண்டுகள் வருந்திக் கற்றவர்; தமிழில் ஆர்வம் மிக்கவர்; பள்ளி மாணவர் பயிலத் தக்கவாறு தமிழ் இலக்கண நூல் எழுதினவர்; திருவாசகத்தையும், நாலடியாரையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அழியாப் புகழ் பெற்றவர்.

அப்பெரியார் சாஸ்திரியாரது தனிப்பாசுரத் தொகையைப் படித்துப் பாராட்டி, "தமிழன்னை புத்துடையில் காணப்படுதற்குரிய அறிகுறிகளைக் காட்டும் புதிய நூல்கள் இரண்டைத் தவிர வேறு இருப்பதாய் எனக்குத் தோன்றவில்லை.

"'மனோன்மணீயம்' என்னும் நாடகநூல் ஆசிரியர் ஆகிய திரு. சுந்தரம் பிள்ளை அவர்கள் நமது நல்வினைக் குறைவினால் விரைவில் மறைந்துவிட்டனர்.

"'தனிப்பாசுரத்தொகை - முதற்பகுதி' என்ற ஆக்கியோன் பெயர் குறிப்பிடாச் சிறுநூல், நாம் மனமார எதிர்கொள்ளத்தக்க புதிய மரபினர் வருகையின் முன்னோடியாகத் தோற்றுகிறது,"

என்று வரைந்துள்ளார். இதிலிருந்து தனிப்பாசுரத்தொகையின் பெருஞ் சிறப்பினை நன்கறியலாம் அன்றோ? பாவலர் விருந்து என்னும் செய்யுள் நூலையும் சாஸ்திரியார் எழுதி வெளியிட்டார்.

இப்பாக்களின் சிறப்பு

இப்பாக்களைப் புலவர் பாராட்டக் காரணம் என்ன? இவற்றைப் பாடியவர் சிறந்த தமிழ்ப் புலவர்; தமிழ் இலக்கணத்தை நன்குய்ப் படித்தவர்; செய்யுள்

இலக்கணத்தைப் பிழையறக் கற்றவர்; சங்க கால இலக்கியங்களில் நிரம்பிய பயிற்சியுடையவர்; பிற்கால இலக்கியங்களிலும் புலமையுடையவர்; மும்மொழி களில் விரிந்த அறிவுடையவர்; கற்பனை ஆற்றல் நிரம் பியவர். இத்தகைய பண்புகள் ஒருங்கே பெற்றிருந் தமையின் அவர் இயற்றிய செய்யுட்கள் சொற்செறி வும் பொருட்செறிவும் பெற்றுத் திகழ்கின்றன. இக் காலக் கவிஞருட் பலர் இப்பண்புகளுட் பலவற்றைப் பெறுதவர். ஆதலின் அவர் பாக்கள் மணமற்ற காட்டு மலர்களாய்க் காண்கின்றன; விரைவில் வழக்கு வீழ் கின்றன; அறிஞர் பாராட்டுக்கு உரியவை ஆகா தொழிகின்றன. இயல்பாய்ப் பாக்கள் பாடும் பண்பு சிலரிடம் அமைந்துள்ளது. ஆயின் அவை மணமற்ற பொன்மலர்களை ஒக்கும். இலக்கண அறிவு கைவரப் பெற்றபின் அவர்கள் தங்கள் பாக்களைத் திருத்திச் செம்மை செய்வாராயின் - இலக்கண அமைதி பெறப் பாடிவருவாராயின், அப்பாக்கள் மணம் பெற்ற பொன் மலர்களாக ஒளிரும் என்பதில் ஐயமில்லை. சாஸ்திரியார் பாக்கள் மணம் பெற்ற பொன் மலர் கட்கு ஒப்பாகும். ஆதலின் அவை தமிழ் உள்ளவரை அறிஞரால் பாராட்டப்பெறும்.

உரைநடை நூல்கள்

சாஸ்திரியார் எழுதிய உரைநடை நூல்கள் சில. அவற்றுள் காலத்தில் முற்பட்டது மதிவாணன் என்பது. அது சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் விருப்பப் படி எழுதப்பட்ட செந்தமிழ் நடைகொண்ட நூலாகும். அவர் தம் தந்தையார் விருப்பப்படி மாங்குடி - மணிய சிவனார் சரித்திரம் என்று ஒரு நூலை எழுதினார்.

சாஸ்திரியார் ஞான போதினி, விவேக சிந்தாமணி' முதலிய செய்தித் தாள்களில் அரிய கட்டுரைகள் பல எழுதி வெளியிட்டுவந்தார்; தமிழ்ப் புலவர் சில ருடைய வரலாறுகளை வரைந்து வெளியிட்டார். அவை அனைத்தும் அவர் காலத்தில் நூல் வடிவில் வெளியாகவில்லை. அவருக்குப்பின் அவரது இரண்டாம் குமாரராகவுள்ள திருவாளர் வி. சூ. சுவாமிநாதன் என்ப வர் அக்கட்டுரைகளைத் தமிழ் வியாசங்கள், தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் இரு நூல்களாக வெளியிட்டனர். அவை இன்று ஆயிரக் கணக்கான தமிழர்க்குப் பயன் பட்டுவருகின்றன.

தமிழ்மொழி வரலாறு

சாஸ்திரியார் மேனாட்டு ஆராய்ச்சி முறையில் தமிழ் மொழியினை ஆராய்ந்து, 'தமிழ் மொழி வரலாறு' என்னும் அரியதோர் ஆராய்ச்சி நூலினை எழுதி வெளி யிட்டார்; அவ்வரிய நூலைத் தமது அருமை ஆசிரி யரும் கல்லூரித் தலைவருமாகிய மில்லர் துரையவர்கட்கு உரிமையாக்கினார். அந்நூல் தமிழ் மொழியின் வரலாற்றை நன்கு உணர்த்தவல்லது. அதனைப் போன்றதொரு நூல் இதுவரை தமிழில் எழுதப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது. அந்நூல் வித்து வான் தேர்விற்கு மொழி வரலாற்றுப் பாட நூலாய்ப் பல ஆண்டுகளாய் இருந்துவருகின்றது எனின், அதன் சிறப்பினையும் தேவையையும் பற்றிக் கூறவேண்டுமோ? அந்நூல் (1) ஆதி வரலாறு, (2) வடமொழிக் கலப்பு, (3) மூவகைப் பாகுபாடு, (4) ஐவகை இலக்கணம், (5) பாஷையின் தோற்றமும் தொன்மையும், (6) பாஷையின் சிறப்பியல்பு, (7) பாஷை வேறுபடுமாறு,

(8) நூற்பரப்பு, (9) பாஷையின் சீர்திருத்தம், (10) முடிவுரை என்னும் பத்துப் பகுதிகளை உடையது. இப்பகுதிகள் மொழியைப்பற்றிய பல உண்மைகளை விளக்கமாய்க் கூறுவன. நீங்கள் இப்பகுதிகளை வாசித்து நமது தமிழ் மொழி வரலாற்றை அறிதல் நலமாகும்.

மேற்சொன்ன பகுதிகளுள் ஒன்றுன "மூவகைப் பாகுபாடு" என்பதில் உள்ள 'முத்தமிழ்' பற்றிய சில செய்திகள் அடுத்த பகுதியில் தரப்பட்டுள்ளன. அவை உங்கட்கு மூவகைத் தமிழைப்பற்றிய உண்மைகளையும் சாஸ்திரியாரது தமிழ் நடையினையும் நன்கு விளக்குவனவாகும்; படித்துப் பயன் பெறுக.

4. முத்தமிழ்

தொன்றுதொட்டுத் தமிழ்மொழி இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளுடையதென்று பலருங் கூறுகின்றனர். அம்மூவகைப் பாகுபாடுகளின் இயல்புகளைக் குறித்துச் சிறிது ஆராய்வோம்:

இயற்றமிழென்பது தமிழர் யாவர்மாட்டும் பொதுமையின் இருவகை வழக்கினும் இயங்குகின்ற வசனமுஞ் செய்யுளுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண் இலக்கியங்களும் இலக்கணங்களுமாகிய யாவும் அடங்குமென்க.

முற்காலத்துச் சங்கச் செய்யுட்களும் அவற்றின் உரைகளும், இடைக்காலத்துக் 'கம்பராமாயண' மாதிய நூல்களும் அவற்றினுரைகளும், இக்காலத்து வெளிப்படுஞ் செய்யுணூல்களுமாகிய யாவும் இயற்றமிழாம். இவ்வியற்றமிழ் இசைத்தமிழ்க்கும் நாடகத்

தமிழ்க்கும் முன்னர்த் தோன்றினமைபற்றி அஃது இவ் விரண்டிற்கும் முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும் இயற்றமிழே இவ்விரண்டற்கும் உயிரென விளங்குவது. இயற்றமிழின்றி இவ்விரண்டுந் தனித்தியங்குவனவல்ல.

இசைத் தமிழென்பது, பண்ணொடு கலந்துந் தாளத்தொடு கூடியும் இயங்குஞ் செந்தமிழ்ப் பாட்டுக்களானுங் கொடுந்தமிழ்ப் பாட்டுக்களானு மியன்ற இலக்கியங்களும் அவற்றினிலக்கணங்களுமாகும் நூல்களின் தொகுதியாம். இதன்கண், கீர்த்தனங்களும், வரிப்பாட்டுக்களும், சிந்து ஆனந்தக்களிப்பு கும்மி தெம்பாங்கு முதலியனவும் அடங்குமென்க. இயற்றமிழின்கண் வழங்குஞ் சொற்களுஞ் சொற்றொடர்களுமின்றி இசைத் தமிழ் எங்ஙனம் இயங்கமுடியும்? அன்றியும் இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசையெடுத்துத் தாளமறுத்துப் பாடப்படின், அவை இசைத் தமிழின்பாற்படும். இராகத்தொடுமட்டில் இயைத்துப் பாடப்படும் பாடல்கள் இயற்றமிழின்பாற்பட்டனவாக மதிக்கப் படுமேயன்றிப் பிறிதில்லை. தாளமும் உடன் கூடிய வழியே அஃது இசைத்தமிழின்பாற்படுமென்க......... இவ்விசைத்தமிழ், நாடகத் தமிழ்க்கு முன்னர்த் தோன்றினமைபற்றி முன் வைக்கப்படுவதாயிற்று. அன்றியும் இவ்விசைத் தமிழே நாடகத் தமிழிற்குச் சிறப்பும் விளக்கமும் தந்து நிற்பதாம். இசைத் தமிழ் இல்வழி நாடகத் தமிழிற்கு இயக்கமில்லை......இயற்றமிழும் இசைத் தமிழுங் கூடிய வழியே நாடகத் தமிழ் பிறக்குமென்று கூறுதலே அமைவுடைத்தாம்.

இனி இடைக்காலத் தொடக்கத்தில் தோன்றிய இசைத்தமிழிலக்கிய நூலாகிய மூவர் தேவாரங்களும் தமிழிற்கே உரிய பண்ணுந்திறமும் பயின்றனவாகி ஒளிர்கின்றன. அத்தேவாரங்களுக்குப் பின்னர் ஏற்பட்ட இசைத் தமிழிலக்கிய நூல்களில் வடமொழி யிராக வமைப்புந் தாளவமைப்புங் காணப்படுகின்றன. அதன்மேல் இற்றை நாள்களில் உலவும் இலக்கியமும், இலக்கணமுமாகிய இசைத்தமிழ் நூல்களெல்லாம் 'மேளகர்த்தா' என்னும் வடநூலைத் தழுவியே அமைக்கப்பட்டிருக்கின்றன. சிற்சில நூல்கள் நாட்டியத்திற்குரிய வடமொழிப் பரததாளங்களினும் ஏற்பட்டிருக்கின்றன. இசைத்தமிழின்கண் ஏற்பட்ட வடமொழிக் கலப்பு இவ்வளவுதான்.

பழைய இசைத்தமிழ் நூல்களுட் பெரும்பாலன இறந்துவிட்டன. இரண்டொன்றுமட்டில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அவைதாமுஞ் சின்னாட்களில் வெளியிடப்படாவிடின் அழிந்துபடினும் படும். இவ்வாறு இசைத்தமிழ் நூல்கட்குக் குறைவு நேரக் காரணம் யாது? இடைக்காலத்திலிருந்த மக்களுக்குள் ஒழுக்கச் சீர்திருத்தஞ் செய்யப் புகுந்த போலியாரியர் சில்லோரால் விளைந்த கேடாமிது. இவ்வுலக வாழ்க்கைக்கு அறம் பொருளின்பமென்ற மூன்றுஞ் சிறந்தனவா மென்னும் உண்மையை நன்குணராது, 'அறமே யாவரும் பின்பற்றுதற்குரியது; மற்று இன்பம் கைவிடுதற்குரியது' என்று எண்ணி, இசையினால் இன்பம் மிகுதலின் அதனையுங் கடிய வேண்டுமென்று புகுந்து, ஆரியருஞ் சைனரும் ஒருங்கு சேர்ந்து இசைத் தமிழைப் பெரிதும் அலைத்துத் தொலைக்க முயன்றனர்.

அம்முயற்சிகளில் அநேக நூல்கள், அந்தோ! அழிந்து போயின. இப்போழ்து எஞ்சியிருப்பன மிகச் சிலவே. இவற்றை இறைவன் பாதுகாத்தருள்க. மேற்கூறிய மருட்கை யுணர்ச்சி இக்காலத்தினும் பலரிடங் குடி கொண்டிருக்கின்றது. இஃதென்னே!

நாடகத் தமிழென்பது, கையில் நூலெடுத்துப் படித்தற்குரிய அவகாசமில்லாத வேலைக்காரர்களுக்கும், படிக்கத் தெரியாதவர்களுக்கும் நல்லறிவு புகட்டும் நோக்கத்தோடு வகுக்கப்பட்டது; அது கேட்போர்க்குங் காண்போர்க்கும் இன்பம் பயவாவிடின், சாமானிய சனங்கள் அதனை விரும்பிச் செல்லாராதலின் அஃது இன்பச் சுவையோடியல்வதாயிற்று. உலகத்தினியல்பினை உள்ளதை யுள்ளவாறே புனைந்து காட்டுவது நாடகத் தமிழே யன்றி வேறில்லை. இயற்றமிழும் இசைத் தமிழுஞ் சேர்ந்தவழியே நாடகத்தமிழ் பிறந்ததெனினும் நாடகத் தமிழிற்கு வேறு தனிப்பெருஞ் சிறப்புளது. முன்னையன இரண்டும் கேள்வி யின்பம் மட்டிலே பயப்பனவாய் நிற்கின்றன. இவ்விரண்டனடியாகப் பிறந்த நாடகத் தமிழோ கேள்வி யின்பம் பயப்பதே யன்றிக் காட்சி யின்பமும உடன்பயக்கின்றது. இச்சிறப்புப் பற்றியே பிற நாடுகளிலுள்ள பிற பாஷைப் புலவர்கள் நாடகங்களை மிக்க மேன்மையுடையனவாய் மதிக்கின்றனர்.

இத்துணைப் பெருமை வாய்ந்த நாடகத்தமிழின் தோற்றமென்னை? "தமிழ் நாடகம் முதலிலுண்டானது மதவிடயமாகவே என்பது துணியப்படும். அது கடவுளர் திருவிழாக் காலங்களில் ஆடல்பாடல்கள் இரண்டையுஞ் சேர நிகழ்த்துவதினின்றும் உண்டாயிற்று. சில

காலத்தின் பின்னர்க் கதைநடையான மனப்பாடங் களும் உடன் கூடின; அதன்மேல் முதலிற் பாடலா யுள்ள சம்பாஷணைகளும் பின்னர் வசனமாயுள்ள சம் பாஷணைகளும் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. பிற்பாடு நாடகத்தமிழ் 'வேத்தியல், பொதுவியல்' என்ற இரு பிரிவினதாகி அரசர்களானும் ஏனையோரானும் ஆத ரித்து வளர்க்கப்பட்டது.

இவ்வாறு தோன்றி வளர்ந்த நாடகத்தமிழ் பின்னர் வீழ்நிலையை யடையப் புகுந்தது. அதற்குற்ற காரணம் யாது? ஒழுக்க நிலை வகுக்கப் புகுந்த ஆரியருஞ் சைனரும் நாடகக் காட்சியாற் காமமே அறிவினும் மிகப் பெருகு கின்றதென்ற போலிக் கொள்கை யுடையராய்த் தம் நூல்களிற் கடியப்படுபவற்றுள் நாடகத்தையுஞ் சேர்த் துக் கூறினர். அக்காலத்திருந்த அரசர்களுக்குந் துர்ப் போதனை செய்து நாடகத் தமிழைத் தலையெழவொட் டாது அடக்கிவந்தனர். ஔவையாருந் திருவள்ளுவரும் ஒருங்கே புகழ்ந்த இல்லற வாழ்க்கையையே தீவினையச் சத்தின்பாற்படுத்திக் கூறுஞ் சைனர்கள் நாடகத்தமி ழைக் கடிந்தது ஓராச்சரியமன்று. இவ்வளவு கட்டுப் பாட்டுக் கிடையில் நாடகத்தமிழ் எவ்வாறு தலையெ டுத்து ஓங்கப்போகின்றது? ஆதலின் நாளாவட்டத்தில் அது சிறிதுசிறிதாக வீழ்ந்துகொண்டே வாராநின்றது. அதன்மேல் இயற்றமிழ்க் காப்பியங்கள் நாடெங்கும் மலிந்து சிறந்து நாடகத்தமிழை வளரவொட்டாது தடுப்பனவாயின.

இவ்வாறு நாடகத்தமிழ்க்கு நாற்புறத்தினுந் தடை கள் அமைக்கப்பட்டமையின் அஃது அழிநிலையடையத் தலைப்பட்டது. பண்டிதராயினோர் கடிந்து நாடகத்

தமிழைக் கைவிடவே, அது பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தளவிலே நிற்கின்றது. அக் காலத்துச் சங்கப் புலவர்கள் செய்த 'பரதம்', 'அகத்தியம்,' 'முறுவல்', 'சயந்தம்,' 'குணநூல்,' 'செயிற்றியம்,' 'மதிவாணர் நாடகத் தமிழ்நூல்,' 'கூத்தநூல்,' என்ற நாடகத்தமிழ் நூல்களெல்லாம் யாண்டுப்போய் ஒளித்தன? 'சிலப்பதிகாரம்' என்னும் நாடகக் காப்பியமட்டிலே தப்பித்தவறி வெளியேறிவிட்டது. அதனை வெளிப்படுத்திய பண்டித சிகாமணி சாமிநாதையர்க்குத் தமிழுலகஞ் செய்யக்கடவ கைம்மாறென்னே?

இனிப் பரத சாஸ்திரமும் காமக்கணிகையர் வயப்பட்டுத் தாழ்வடைந்து நிற்கின்றது. அதனையும் அறவொழிக்கப் புகுந்து முழங்குகின்றனர் சிலர். எனினும் கி.பி. பதினேழாம் நூற்றாண்டினிறுதி தொட்டுக் கூத்து நூல்கள் சில, வேரற்று வீழ்ந்த நாடகத் தமிழினின்றும் கிளைப்பனவாயின. இடையிடையே கவிகூற்று மேவி, இழிசினர் நடக்கு மியல்பினவாகிக் கூத்தும் பாட்டுங் கொண்டு நடப்பனவெல்லாம் கூத்துநூல்களாம். சீர்காழி அருணசலக் கவிராயர் செய்த 'இராம நாடக'மும், குமரகுருபர சுவாமிகள் செய்த 'மீனாக்ஷியம்மை குற'மும், திரிகூட ராசப்பக் கவிராயர் செய்த 'குற்றாலக் குறவஞ்சி'யும் இக்கூத்து நூலின்பாற் படுவனவாம். 'முக்கூடற் பள்ளு,' 'பருளை விநாயகர் பள்ளு' முதலியனவுங் கூத்து நூல்களேயாம். இவை யெல்லாம் இயற்றமிழ்ப் புலமை சான்ற பாவலர் இயற்றியனவாம். . . . . .

நாடகசாலையை உலகத்தின் பிரதிவிம்ப மென்றெண்ணி ஆங்கு நடித்துக் காட்டப்படுபவற்றுள் தமக்கு வேண்டிய நற்பகுதிகளை மட்டில் ஏற்றுப் போவதே நன்

மக்களியல்பு. உழைத்த உள்ளத்திற்கு இன்பந் தந்தூ ஊக்கம் விளைவிப்பன நாடகங்களே. சிற்சிலர் அறிவு திரிந்து வேறுபட்டாராயின் அஃது அவரது இயற்கைத் தன்மைகளுள் ஒன்றுமே யன்றி, நாடகத்தால் விளைந்த செயற்கைத் தன்மையன்றும். தவறுள்ள விடத்தி லன்றே திருத்தம் வேண்டும்? புண்ணுள்ள விடத்தி லன்றே சிகிச்சை செய்யப்படும்? மக்கள் சிலர் தமது தீக்குணத்தால் நாடகசாலை சென்றும் நாடகங்கள் படித்தும் கெட்டாராக, அதனைக் காகதாலியமாய் நாடகத்தின் தலையிலேற்றி, நாடகத்தமிழே தீதென்று கடிதல் எவ்வாறு ஏற்புடைத்தாகும்? இது நிற்க.

சென்ற சில்லாண்டுகளாக, நாடகத்தமிழ் அறி வுடையோர் சிலரது உதவிகொண்டு தலையெடுத்து வளராநின்றது. இதற்கு வடமொழி நாடகப் பயிற்சியும் ஆங்கில நாடகப் பயிற்சியும் மிகப் பயன்படுவனவாயின. இவ்வாறு புதுவழியிற் புனையப் பட்டு வெளிப்படும் நாடகங்கள் இன்னும் அதி கரித்தல் வேண்டும்.

III. விபுலானந்த அடிகள்

(கி. பி. 1894 - 1947)

1. ஈழ நாடு

இலங்கைத் தீவு

ஈழ நாடு அல்லது இலங்கைத் தீவு என்பது இந்தியா விற்குத் தெற்கே இருப்பது. அது வடக்கிலும் கிழக்கிலும் வங்கக் கடலையும் மேற்கே மன்னார் வளைகுடாவையும் தெற்கே இந்துப் பெருங்கடலையும் எல்லைகளாகப் பெற்றுள்ளது. அத்தீவு நமது தமிழகத்தை அடுத்திருப்பது; இந்தியக்கரைக்கு ஏறத்தாழ முப்பது கல் கிழக்கில் இருப்பது; இவ்வளவு அண்மையில் இருந்தும் இந்தியாவில் இராத பல புதிய மரங்களைப் பெற்றுள்ளது; இந்தியாவில் இருக்கும் புலி, சிறுத்தை, காட்டு எருமை முதலிய விலங்குகளையும் சில பறவை இனங்களையும் சில ஊர்வனவற்றையும் பெற்றிலது.

கடல் கோள்கள்

'இன்று காணப்படும் இலங்கைத்தீவு மிகப் பழைய காலத்தில் இந்தியாவின் பகுதியே யாகும். ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முன் உண்டான பெரிய கடல் கோளினால் அஃது இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்டது. ஏறத்தாழக் கி. மு. 504-இல் உண்டான கடல் கோளினால் பல ஆயிரக்கணக்கான சிற்றூர்களும் இலங்கையின் தென் பகுதியும் கடலுக்கு இரையாயின. பின்னர்க் கி. மு. 306-இல் நடந்த கடல் கோளினால் இலங்கையின் ஒரு பகுதி அழிந்தது,' என்று இலங்கை வரலாறு குறித்துள்ளது.

யாழ்ப்பாணம்
வட மாகாணம்
தலைமன்னார்
திருக்கேதீச்சரம்
திருக்கோணமலை
அநுராதபுரம்
வ. மே.
மாகாணம்
கண்டி
ஆதாம் மலை
கொழும்பு
தெ. மா.
கதிர்காமம்
இந்திய சமுத்திரம்

இயற்கை அமைப்பு

இலங்கையின் பெரும்பகுதி காடுகள் அடர்ந்தது. அங்கு மலைகள் பல உண்டு. தென் இலங்கையில் மலைப் பகுதியே மிகுதி. அப்பகுதியில் வானளாவிய-மேகங்கள் எப்பொழுதுமே படிந்து கிடக்கும்—கொடு முடிகள் நூற்றுக்கு மேலாக இருக்கின்றன. அவை மூவாயிரம் முதல் எண்ணாயிரம் அடிவரை உயர்ந்தவை. அவற்றுள் ஒன்று எச்சமயத்தவரும் போற்றும் ஆதாம் கொடு' முடி என்பது.

இலங்கையில் பல சிற்ருறுகள் பாய்கின்றன. அவை நிலத்தை நன்கு வளப்படுத்துகின்றன. இலங்கை நிலநடுக்கோட்டுக்கு அருகில் இருப்பதால், ஆண்டு முழுவதும் சூடாகவே இருக்கும். ஈழ நாட்டில் தேயிலைத் தோட்டங்கள் பல உண்டு; இரப்பர்த் தோட்டங்களும் இருக்கின்றன; தென்னந் தோப்புகள் மிகப் பல. ஈழ நாட்டிலிருந்து இம்மூன்று பொருள்களும் மிகுதியாக வெளி நாடுகட்கு ஏற்றுமதி செய்யப் படுகின்றன.

ஈழ நாட்டு வரலாறு

இராவணன் ஈழ நாட்டை ஆண்டதாக இராமாயணம் கூறுகிறது. ஈழ நாட்டில் வேடர் முதலிய நாகரிக மற்ற மக்கள் காடுகளில் வாழ்கின்றனர். அவர்களே அந்நாட்டுப் பழங்குடிகள் என்று வரலாற்று ஆசிரியர் கூறுகின்ருர். அசோகருக்கு முன்னர் வங்காளத்திலிருந்து குடியேறிய அரச மரபினரே சிங்கள அரசர்கள் என்பதும் அவர் கருத்து. கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் பௌத்த சமயத்தைப் பல நாடுகளிலும் பரவச் செய்ய விரும்பிய அசோகர் சேர, சோழ, பாண்டிய நாடு

கட்கும் ஈழ நாட்டுக்கும் பௌத்த சமயப் பிரசாரகரை அனுப்பினர். அதனால் பௌத்த சமயம் இலங்கையில் கி. மு. மூன்றும் நூற்றுண்டிலேயே கால் கொண்டது. புத்தர் ஞானம் பெற்ற போதி மரத்திலிருந்து கிளை ஒன்று கொண்டுவரப்பட்டு இலங்கையில் வைத்துப் பயிராக்கப்பட்டது. நாளடைவில் பௌத்த சமயம் ஈழ நாட்டில் நன்கு பரவித் தழைத்தது.

நமது தமிழ் நாட்டு வேந்தர் அடிக்கடி இலங்கை மீது படையெடுத்தனர்; சில ஆண்டுகள் வட இலங்கைப் பகுதியைப் பிடித்து அரசாண்டனர். 'ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த சோழன் கரிகாலன் இலங்கையை வென்று பலரைச் சிறைசெய்து கொணர்ந்தான்; அவர்களைக்கொண்டு காவிரியின் கரைகளைப் புதுக்கினுன்' என்று தமிழ் நூல்கள் கூறு கின்றன. கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் இலங்கை அரசனுக இருந்த கயவாகு என்பவன் செங்குட்டுவன் கட்டிய கண்ணகிக் கோவிலைத் தரிசிக்கச் சேரநாடு வந்தான் என்று சிலப்பதிகாரம் செப்புகிறது. இதனால் அக்காலத்தில் தமிழரசனும் இலங்கை இறைவனும் நண்பராக இருந்தனர் என்பது தெரிகிறது.

கி. பி. ஏழாம் நூற்றுண்டின் இடையில் நரசிம்ம பல்லவன் என்ற மஹாமல்லன் தமிழ் நாட்டின் பெரும் பகுதியை ஆண்டுவருங்கால், மானவன்மன் என்ற ஈழத்தரசன் அவனிடம் அடைக்கலம் புகுந்தான். பல்லவன் தன் படைகளை அவனுக்கு உதவியாக அனுப்பி மானவன்மனது பட்டத்தைக் கவர்ந்த வேறொருவனை முறியடித்து மானவன்மனை ஈழத் தரசன் ஆக்கினுன்.

பின்னர்க் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் முதற் பராந்தக சோழன் ஈழ நாட்டின் வடபகுதியைக் கைப் பற்றி ஆண்டான். அவனுக்குப் பின்வந்த இராஜராஜ சோழன் இலங்கைத் தலைநகரமாகிய புகழ்பெற்ற அநுராதபுரத்தை அழித்துப் 'போலநருவா' என்பதைத் தலைநகரமாக்கினான். இராஜராஜேசுவரம் என்று அவன் பெயரால் ஒரு சிவன் கோவில் ஈழத்திற் கட்டப்பட்டது. வேறு கோவில்களும் தமிழ் முறையிற் கட்டப்பட்டன. தமிழர் பலர் அங்குக் குடியேறினர். ஈழத்து அரச மரபினர் தென் இலங்கை மலைப்பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இங்ஙனம் ஏறக்குறைய இருநூறு ஆண்டு கள் இலங்கையின் வட பகுதியைச் சோழப் பேரரசர் ஆண்டுவந்தனர்.

சமய நிலை

இலங்கையில் பௌத்த சமயமே சிறந்த சமயமாக இருந்தது. பின்னர்ச் சைவ சமயம் ஓரளவு செல் வாக்குப் பெற்றது. அதன் பயனாகத்தான் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் பாடத் தக்க பெருமையுடைய க்ஷேத்திரம் (கேதீச்சுரம்) மேற்குக்கரையில் இருந்ததென்னலாம். மிகச் சிறிய அளவில் வைணவமும் சமணமும் இருந்தன எனலாம். வட இந்தியாவில் இருந்தும் உலகின் பிற பகுதிகளி லிருந்தும் பௌத்த சமயத் துறவிகள் ஈழநாட்டிற்குச் சென்றனர். அங்குத் தங்கிப் பௌத்த நூல்களைப் படித்தனர் என்பதை நோக்க, ஈழநாட்டில் பௌத்தம் பெற்றிருந்த சிறப்பை நன்கறியலாம். கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க பௌத்த சமயக் கோவில் களும் மடங்களும் ஈழநாடு முழுவதும் இருந்தன.

அவற்றுள் பல நாளடைவில் அழிந்தன; சில மண்ணுள் மறைந்தன. எஞ்சியவை இன்றளவும் கண்டு களிக்கத் தக்க நன்னிலையில் இருந்துவருகின்றன. மண்ணுள் மறைந்த பௌத்த சமயக் கட்டடங்கள் சில இன்று அநுராதபுரத்தில் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈழத்துத் தமிழர்

சங்க கால முதலே தமிழர் இலங்கையில் இருந்தனர் என்று கூறலாம். ஈழத்துப் பூதன் தேவனார் என்ற தமிழ்ப்புலவர் பாக்கள் சங்க நூல்களிற் காணப்படுகின்றன. இலங்கையின் வடபகுதி யாழ்ப்பாணம் என்பது. அங்கும் வடகிழக்கு இலங்கையிலும் தமிழர் பெரும் பகுதியினராக வாழ்கின்றனர். அவர்களிடம் சங்ககாலத் தமிழ்ச் சொற்கள் வழக்கில் இருப்பதைக் காணலாம். அவர்களிடம் பழந்தமிழ்ப் பழக்க வழக்கங்கள் இன்றளவும் இருந்துவருகின்றன. அன்றி நமது தமிழகத்துத் தமிழரும் ஆயிரக்கணக்கில் ஈழ நாட்டிற் குடியேறியுள்ளனர். அவருட் பெரும்பாலர் தேயிலை, இரப்பர்த் தோட்டங்களில் வேலை செய்து வாழ்கின்றனர்.

பல நாட்டு மக்கள்

இலங்கையிற் சிங்களவர் தொகையே மிகுதியாகும். அவருக்கு அடுத்தபடியாக இருப்பவர் தமிழர். கிழக்கிந்தியத் தீவுகள், சீனம் முதலிய கிழக்கு நாடுகட்கும் ஐரோப்பா, ஆசியாக் கண்டங்கட்கும் செல்லும் கப்பல்கள் இலங்கைத் துறைமுகமாகிய கொழும்பில் தங்கிச் செல்கின்றன. இலங்கைக்கும் இந்தியாவுக்கும்

கடல் வாணிகம் நடக்கிறது. இலங்கையிலிருந்து இரப்பர், தேயிலை, தேங்காய் முதலியன அயல்நாடுகட்கு ஏற்றுமதியாகின்றன. ஆதலின் உலகப் பல நாட்டு வாணிகர் இலங்கையில் வாழ இடமுண்டாகிறது. கொழும்பு நகரில் எல்லா நாட்டு மக்களையும் காணலாம்.

தமிழ்ப் பெரியார் பலர்

இலங்கைத் தமிழருள் தமிழ்ப் பெரும்புலவர்களாக விளங்கிய பெருமக்கள் பலராவர். அவருள் தலைசிறந்தவர் ஆறுமுக நாவலர் என்பவர். அவர் மிகப் பெரிய புலவர்; சிறந்த சைவசித்தாந்தி. அவர் அச்சிட்டு வெளிப்படுத்திய தமிழ் நூல்கள் பல. சி. வை. தாமோதரம் பிள்ளை என்பவா மற்றொருவர். '1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்' என்ற தலைப்பில் ஆங்கில ஆராய்ச்சி நூலை எழுதி வெளியிட்டவர் திருவாளர் கனகசபைப் பிள்ளை என்பவராவர். சென்னையில் தமிழ்ப் பெரும் புலவராகவும் சிறந்த சைவ சித்தாந்தியாகவும் பெரிய பேச்சாளராகவும் விளங்கியவர் நா. கதிரைவேற் பிள்ளை என்பவர். அவரது மாணவருள் ஒருவரே நமது தமிழ்ப் பெரியாராகவுள்ள திரு. வி. கல்யாண சுந்தரனார். இங்ஙனம் புகழ்பெற்ற இலங்கைத் தமிழர் பலராவர். அப்பெரியார்கட்குப் பின் இந்த நூற்றாண்டில் பெரும்புகழ் பெற்று வாழ்ந்து, 1947-இல் மறைந்த விபுலானந்த அடிகள் குறிப்பிடத் தக்கவராவர்.

2. இளமைப் பருவம்

இலங்கைத் தமிழர்

இலங்கையில் தமிழ் மக்கள் சிறப்பாக வடமாகாணம், கீழ்மாகாணம் என்னும் பகுதிகளிற்றான் வாழ்கின்றனர் என்பது முன்னர்க் கூறப்பட்டதன்றோ? வட மாகாணத்தில் சிறப்புற்றது யாழ்ப்பாணம். கீழ் மாகாணத்தில் தலைமை பெற்றது மட்டக்களப்பு என்பது. மட்டக்களப்பு இயற்கை அமைப்பால் யாழ்ப்பாணத் தமிழ்ப் பகுதிகளுடன் சேராமல் தனித்துள்ளது; ஆயின் சிங்கள நாட்டுக்கு அண்மையில் இருப்பதால் சிங்களவர் நடை, உடை, பாவனை முதலியன ஓரளவு குடியேறப் பெற்றதாகும். எனினும் அது, பழைய சங்க காலத் தமிழ்ச் சொற்களை இன்றளவும் பேச்சு வழக்கில் கொண்டுள்ளது. அங்குக் குடியேறிய யாழ்ப்பாணத்துப் பழந்தமிழர் தங்கள் தாய்மொழியைப் பேணிவருகின்றனர். அவர்கள் தூய தமிழிற்றான் பேசிவருகின்றனர். அங்ஙனம் குடியேறிய யாழ்ப்பாணத் தமிழருள் ஒருவர் மரபில் தோன்றியவரே நமது விபுலானந்த அடிகள் ஆவர்.

பெற்றோர்

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு என்னும் பகுதிகளில் சில தீவுகள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று காரைத் தீவு என்பது. அத்தீவிற்றான் நம் விபுலானந்தர் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் சாமித்தம்பியார் என்பது; தாயார் பெயர் கண்ணம்மையார் என்பது. சாமித்தம்பியார் சிறந்த நற்குணங்களைப் பெற்றவர்; நல்லொழுக்கம் உடையவர். அவர் தமிழ் நூல்களை நன்கு

பயின்றவர். காரைத் தீவில் இருந்த தமிழர் அவரிடம் மிக்க அன்பும் மரியாதையும் காட்டிவந்தனர்; அவருடன் பழகித் தமிழின்பத்தில் திளைத்தனர். கண்ணம்மையார் கணவருக்கேற்ற காரிகையார். கணவரது கருத்தறிந்து நடந்துகொள்ளும் கருத்துடையவர்; வருவாய்க்கு ஏற்பக் குடும்பத்தைத் திறம்பட நடத்திக் கணவர் பாராட்டுக்கு உரியவரானவர். சுருங்கக்கூறின், கணவரும் மனைவியாரும் நகமும் சதையும் போலவும், மணமும் மலரும் போலவும், உயிரும்உடலும் போலவும் ஒன்றுபட்ட உள்ளத்தராய் வாழ்ந்துவந்தனர்.

பிள்ளை யில்லாக் குறை

சாமித்தம்பியாரும் கண்ணம்மையாரும் இல்லறத்தை நல்லறமாக நடத்திவந்தனராயினும் அவர்கள் இல்லத்தை அணிசெய்து இல்லறத்தை மேலும் இன்பமுடையதாகச் செய்யத்தக்க பிள்ளை இல்லாதிருந்தது. அதனால் இருவரும் மனம் கவன்றனர்;

"கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லால் உருக்கி அழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்து விளையாடும் மகிழ்ச்சி மைந்தர்
இல்லா தவர்க்கு மனைவாழ்வின் இனிமை என்னும்!"

என்று பாண்டு மன்னன் வருந்தியதுபோல் வருந்தினர்; தங்கள் குலநாயகனும் மயில்வாகனனுமான முருகப் பெருமானை நோக்கி வரம் வேண்டினர்.

மயில்வாகனன்

பின், சில திங்கள் கழித்துக் கண்ணம்மையார் ஓர் ஆண்மகவினைப் பெற்றார். முருகன் திருவருளால் தமக்கு மைந்தன் பிறந்தான் என்பதை நம்பிய பெற்றோர் மகவுக்கு மயில்வாகனன் என்று பெயரிட்டு மகிழ்ந்

தனர்; கண்ணை இமைகள் காப்பதுபோல அருந்தவச் செல்வனை வளர்த்துவரலாயினர்; மார்புமீதும் தோள் மீதும் தொட்டிலிலும் கட்டிலிலும் வைத்துக் கருத்துடன் கவனித்துவந்தனர். மயில்வாகனர் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்ந்துவரலாயினர். அவர் தவழ்நடை நடந்து சிறுகை நீட்டிப் பெற்றோர் உணவினைத் தொட்டும் பிசைந்தும் கவ்வியும், மழலைச் சொற்களைப் பேசியும் பெற்றோர்க்கு மகிழ்ச்சியை விளைத்துவந்தார். பெற்றோர் எல்லையற்ற மகிழ்ச்சியுள் ஆழ்ந்தனர்.

பள்ளிப் பருவம்

மயில்வாகனர் 1898-இல் பள்ளியில் சேர்க்கப்பட்டார். அவர் மாணவராகிய விண்மீன்களின்முன் முழுமதியாக விளங்கினார்; பிள்ளைகள் அனைவரிடமும் மலர் முகத்துடன் பழகினார்; வகுப்பில் சட்ட திட்டங்கட்குக் கட்டுப்பட்டவராய் நடந்துகொண்டார்; ஆசிரியர் பாராட்டும் வகையில் தம் அன்றாட வேலைகளைச் செய்து முடித்தார்; வீட்டிலும் பெற்றோர் விரும்பத்தக்க முறையில் நடந்துகொண்டார்; குறித்த நேரத்தில் எழுதல், நீராடுதல், உணவு கொள்ளல், படித்தல், பள்ளி செல்லல், வீடு திரும்புதல், விளையாடுதல் முதலியவற்றைத் திறம்படச் செய்துவந்தார். காலத்தின் அருமையைச் சிறு வயதிலிருந்தே அவர் நன்கறிந்தவராய்க் காணப்பட்டார்.

எந்தப் பள்ளியிலும் சோம்பேறி மாணவர்கள் இருப்பது வழக்கமன்றோ? மயில்வாகனர் படித்த பள்ளியிலும் அத்தகைய மாணவர் சிலர் இருந்தனர். அவர்கள் அவரைத் தம் வலையில் இழுக்க முயன்றனர்.

ஏழு வயதினரான மயில்வாகனர் அவர்கள் வலையில் விழாது, பெற்றோர் மகிழ, ஆசிரியர் பாராட்ட, நல்ல மாணவருடன் பழகித் தம் வேலையில் கண்ணும் கருத்து மாய் இருந்துவந்தார். அவர் இளமையிலேயே இனிமை யாய்ப் பாடும் வாய்ப்புப் பெற்றிருந்தார்; பாக்களை மிகவும் இனிமையாய்ப் பாடிப் பெற்றோரையும் மற்றோ ரையும் மகிழ்வித்துவந்தார்.

தெய்வ பக்தி

பெற்றோர் பழக்க வழக்கங்களுள் பல பிள்ளை களைச் சாரும் என்று அறிஞர் கூறுவர். பெற்றோர் சிறந்த சிவபக்தர்களாக இருந்தமையாற்போலும் மயில் வாகனரும் இளமைமுதலே கடவுட்பக்தியிற் சிறந்து காணப்பட்டார். அவர் தம்மூர்க் கோவில்கட்குப் பெற்றோருடன் சென்று வருவார்; சமயச் சொற் பொழிவுகட்குப் பெற்றோருடன் செல்வார்; அவற்றைக் கவனத்துடன் கேட்பார்; சொற்பொழிவாளரைப் பற்றிய விவரங்களைத் தந்தையாரைக் கேட்டுத் தெளி வார்; அவர் பேசியதன் சாரத்தைத் தாம் அறிந்து கொள்ளும் வகையில் தந்தையாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்; தந்தையாருடன் பலர் தமிழ்த்தொடர் பாகவும் சமய சம்பந்தமாகவும் பேசுவனவற்றை அருகில் இருந்து கவனிப்பார்; அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் கூர்ந்து நோக்குவார். இங்ஙனம் அவர் இளமை முதலே தமிழ் மொழியைப் பற்றியும், சைவ சமயத்தைப் பற்றியும் ஓரளவு அறிந்துகொள்ள லானார். அவரது இளமை உள்ளம் இந்த இரண்டி னிடத்தும் பதிந்தன.

கதிர்காம யாத்திரை

ஈழ நாட்டில் பல நூற்றாண்டுகளாகவே சைவ - பௌத்த க்ஷேத்திரங்கள் இருந்துவருகின்றன என்பது முன்னர்க் கூறப்பட்டது. சைவத் தலங்களுள் மேற்குக் கரையில் தலை மன்னாருக்குக் கிழக்கே ஐந்து கல் தொலைவில் பாலாவியாற்றங்கரையில் உள்ள மாதோட்டத்தில் திருக்கேதீச்சுரர் கோவில் இருக்கின்றது. இது கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற பழமையுடையது. மற்றொன்று உள் நாட்டில் உள்ள திருக்கோணமலை என்பது. அது 'தென் கயிலாயம்' எனப் புகழ்பெற்றது. அதனைக் கி. பி. 9-ஆம் நூற்றாண்டினரான சுந்தர மூர்த்தி சுவாமிகள் பாடியுள்ளார். இவை இரண்டும் சிவபெருமான் கோவில்கொண்டுள்ள தலங்கள் ஆகும். கதிர்காமம் என்பது இலங்கைத் தென்கோடியில் உள்ள முருகப் பெருமான் தலமாகும். அத்தலத்தை இன்றளவும் இலங்கைவாழ் மக்களே அன்றி இந்திய மக்களும் சென்று வணங்கிவருகின்றனர். அப்புகழ் பெற்ற தலத்தைத் தரிசிக்க வேண்டுமென்று சாமித் தம்பியார் குடும்பத்துடன் சென்றார். பத்து வயதுடைய மயில் வாகனர் கதிர்காம யாத்திரையை நன்கு அனுபவித்தார்.

புகைவண்டிப் பிரயாணத்தில் வழிநெடுக மலைகளும் காடுகளும் பள்ளத்தாக்குகளும் மேட்டு நிலங்களும் தேயிலை காப்பித் தோட்டங்களும், பசிய வயல்களும் ஆகிய பலதிறப்பட்ட காட்சிகளைக் காண அவருக்கு வாய்ப்பு ஏற்பட்டது. சிறுவர் இயற்கை அழகில் கண்ணையும் கருத்தையும் செலுத்தினார். வானுற ஓங்கி, மேகங்கள் படிந்த மலை முகடுகளைக்

கண்டார் : மலைப்பக்கங்களில் வளம் பெற வளர்ந்த மரங்களின் பசுமையைப் பார்த்தார் ; பச்சைக் கம்பளம் பரக்க விரித்தாற்போலக் காணப்பட்ட பசிய வயல்களை ஒரு புறம் கண்டார் ; அப்பொழுது அவர் இயற்கைத் தாயின் இன்பப் புதல்வராக மாறினார் ; இயற்கைப் பொருள்களிடத்தில் இன்பக் காட்சியுண்டு என்பதை உணர்ந்தார்.

கதிர்காமம் அவருக்கு எத்தகைய காட்சி அளித்தது ? அவர் அங்குச் சென்ற நூற்றுக்கணக்கான அடியார்கள் கோவிலுக்குப் பயபக்தியுடன் சென்றதைக் கண்டார் ; அவர்கள் இறைவன் திருமுன் நின்று தம்மை மறந்தவராய் முருகன் பெருமைகளைப் பாடி விழி நீர் வார நின்று வழிபட்டதைப் பார்த்தார் ; தம் பெற்றோர் தாய்ப்பசுவைக் கண்ட கன்றுகள்போல முருகப் பெருமானை விழிகளாரக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வார ஆடிப்பாடி வழிபட்டதைக் கண்டார் ; தாமும் மனப்பாடம் செய்திருந்த சில தோத்திரப் பாடல்களைப் பாடி வணங்கினார். இந்த யாத்திரை அவர் உள்ளத்தில் இயல்பாக இருந்த சமயப்பற்று வளரத் துணைபுரிந்தது.

பள்ளிக் கல்வி

மயில்வாகனர் 1902-இல் கல்முனை என்னும் ஊரில் மெதாடிஸ்ட் பள்ளியிற் சேர்ந்து படித்தார் ; பின்னர் மட்டக்களப்பு நடுக் கல்லூரியிற் சேர்ந்தார் ; பிறகு அர்ச் மிக்கேல் கல்லூரியிற் சேர்ந்து வாசித்தார். அவர் ஒவ்வொரு பள்ளியிலும் மாணவரும் ஆசிரியரும் ஒருங்கே பாராட்டத்தக்க முறையில் நடந்துகொண்டார் ; ஒவ்வொரு வகுப்பிலும் முதல்வராகத் தேறினார் ; இறுதியில் தமது பதினாறும் வயதில் கேம்பிரிட்ஜ் பல்

கலைக் கழகத்தாரால் நடத்தப்பட்ட மேல் வகுப்புத் தேர்வில் தேர்ச்சி பெற்ருர்.

தமிழ்க் கல்வி

மயில்வாகனர் ஆங்கிலப் பள்ளியிற் படித்துக் கொண்டே வீட்டில் தமிழ்க் கல்வி பயின்றுவந்தார். இதனை மாணவர் பெரும்பாலோரிடம் காண்டல் அரிதாகும். மயில்வாகனர் இளம்பருவத்திலேயே திருக்குறள், நன்னூல், சூடாமணி நிகண்டு முதலிய நூல்களைத் தந்தையாரிடம் பயின்ருர்; பிறகு தாய்மாமன்மாராகிய சிவகுருநாத பிள்ளை, வசந்தராசப் பிள்ளை என்பவர்களிடம் பாரதம், கந்தபுராணம் முதலிய நூல்களைக் கற்ருர்; செய்யுள் இலக்கணம் படியாமலே இயல்பாகச் செய்யுள் செய்யும் வன்மைபெற்ற அவர், யாப்பிலக்கணத்தையும், அணிஇலக்கணத்தையும் முறைப்படி வாசித்து முடித்தார்; முடித்த பிறகு, இலக்கண அமைதி பொருந்தப் பல செய்யுட்களைப் பாடத் தொடங்கினுர்; ஆங்கில இலக்கிய - நாடக நூல்களையும் ஆழ்ந்து கற்கலானுர்.

3. ஆசிரியர் - மாணவர்

பள்ளி ஆசிரியர்

மயில்வாகனர் சீனியர் கேம்பிரிட்ஜ் தேர்வில் தேறிய பிறகு 1909-இல் மட்டக்களப்பில் உள்ள செயின்ட் மிக்கேல் பள்ளியில் ஆசிரியரானார். அவர் ஆங்கிலத்தில் பிழையறப் பேசும் ஆற்றல் பெற்றவர்; தமிழில் ஓரளவு புலமை பெற்றவர்; இனிய குரலும் மலர்ந்த முகமும் உடையவர்; மாணவரிடத்துக் கரை கடந்த அன்புகொண்டவர்; கற்பிப்பதில் ஆர்வம் உடையவர். இப்பண்புகள் அனைத்தும் சேர்ந்து மாணவரை மகிழ்வித்தன. காந்தத்தினிடம் இரும்பூசி வயப்படுதல்போல மாணவர் மயில்வாகனரிடம் ஈர்க்கப்பட்டனர். அவர்கள் அவரை மிக்க அன்புடன் வரவேற்றுச் சூழ்ந்துகொள்வர்; தங்கள் ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறுவர். சுருங்கக் கூறின், ஆசிரியர் ஒவ்வொரு மாணவர் அகக்கோவிலிலும் நிலைபெற்றனர் என்னலாம். மயில்வாகனர் ஆசிரியர் பதவியில் இருந்தபொழுதும் தமிழ் நூற்களை நன்கு பயின்று வந்தார்.

தாயார் மறைவு

மயில்வாகனரது தாயார் 1911-இல் நோய்வாய்ப்பட்டுக் காலமாயினர். அதனால் அவர் கொண்ட துயரம் அளவிடற்கரியது. ஈன்ற தாயின் பிரிவினை எவரே பொறுப்பர்? உலகிற் கண்கண்ட தெய்வங்கள் தாயும் தந்தையுமாவர். அவருட் சிறந்தவர் தாயார். அவரது அன்புக்கு இணையாக உலகில் எதனைக் கூற இயலும்?

அதனால் அல்லவோ முற்றும் துறந்த பட்டினத்தடிகளும், தம் தாயார் இறபபை எண்ணி எண்ணிக் கதறினார்! இங்ஙனம் முற்றும் துறந்த முனிவரையும் வாட்ட வல்ல தாயன்பு நமது மயில்வாகனாரை வாட்டியதில் வியப்பில்லை அன்றோ? அவர் தம் தாயார் இறந்த பிறகு சொந்தவூரில் இருக்க எண்ணினார்; அதனால் அங்குச் சென்று கத்தோலிக்க மிஷன் பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தார்.

ஆசிரியப் பயிற்சி

மயில்வாகனார் ஆசிரியப் பயிற்சி பெறுமலே மூன்றாண்டுகள் ஆசிரியராக இருந்தார். ஆசிரியவேலைக்குப் பயிற்சி தேவை ஆதலின் அவர் 1911-இல் கொழும்பு நகர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் சேர்ந்து பயிற்சி பெறலானார். "வகுப்பில் ஆங்கிலம் கற்பிக்கும் பொழுதும், தமிழ்நூல் ஒன்று மேசையின்கீழ் இருக்கும். ஆசிரியர் வேறு மாணவருடன் பேசும் பொழுது மயில்வாகனர் மேசையின் கீழுள்ள தமிழ்நூலை எடுத்துப் படித்துக் கொண்டிருப்பார். இவ்வாறு அவர் ஒரு நொடிப் பொழுதையும்வீணாக்காமல் கல்வியிற் கண்ணுங்கருத்துமாய் இருப்பார்," என்று அவருடன் ஆசிரியப் பயிற்சி பெற்றவர் கூறுவதுண்டு. கல்லூரி நேரம் போக எஞ்சிய நேரங்களில் அவர் பண்டிதர் ச. கந்தையா பிள்ளை, முதலியார் ச. கயிலாசம் பிள்ளை, வித்துவான் சி. தாமோதரம் பிள்ளை இவர்களிடம் பல தமிழ் நூல்களைப் பாடம் கேட்டார்; அவ்வப்பொழுது கொழும்பு நகரத்தில் உள்ள விவேகானந்த சபைக்குச் சென்று, அங்கு நடந்து வந்த சொற்பொழிவுகளைக் கேட்டுவந்தார்.

ஆசிரியர் வேலை

ஆசிரியப் பயிற்சியில் தேர்ச்சியுற்ற மயில்வாகனர் மட்டக்களப்பில் உள்ள செயின்ட் மிக்கேல் கல்லூரியில் 1913-இல் ஆசிரியராய் அமர்ந்தார். ஆசிரியப்பயிற்சி பெற்ற மயில்வாகனர் முன்னிலும் பன்மடங்கு திறமை பெற்றவராய்ப் பாடங்களை நன்கு கற்பிக்கலானார். அவர் ஆங்கிலப் பாடங்களையும் தமிழ்ப் பாடங்களையும் சாதாரண மாணவரும் நன்கு தெரிந்துகொள்ளத் தக்க எளிய முறையிற் கற்பித்ததைக் கண்ட மாணவர் அவரிடம் மிக்க மதிப்புக்கொண்டனர்; அவர் நல்லியல்புகளைக் கண்டு அவர்பால் பேரன்பு காட்டினர். ஆசிரியர் மாணவர்களுடன் கலந்து பழகினார்; அவரவர் ஐயங்களை அன்புடன் கேட்டுத் தெளியவைத்தார். இச்செயல்களால் மாணவர் அவரைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றினர்.

விஞ்ஞானப் பயிற்சி மாணவர்

இங்ஙனம் ஆசிரியராய் இருந்த மயில்வாகனர் அத்தொழிலை விட்டு 1915-இல் அரசினர் பலதொழிற் கல்லூரியிற்சேர்ந்து விஞ்ஞானசாத்திரம் பயிலத் தொடங்கினார். இருபதாம் நூற்றாண்டு விஞ்ஞான சாத்திர வளர்ச்சிக்கு உரிய நூற்றாண்டு. வருடந்தோறும் அற்புதமான ஆராய்ச்சி முடிவுகள் வெளி வந்துகொண்டிருக்கின்றன அல்லவா? இப்பொழுது அணுக்குண்டுவின் அளப்பரிய ஆற்றலை நாம் உணர்ந்திருக்கிறோம் அல்லவா? அணுச்சக்தியை எவ்வெவ்வாறு மக்கள் நலனுக்குப் பயன்படுத்தலாம் என்று உலக விஞ்ஞானிகள் இப்பொழுது ஆய்ந்துவருகின்றனர். விஞ்ஞான சாத்திர அறிவு மிகுந்துள்ள நாடே சிறந்த நாடாய் இப்பொழுது கருதப்

படுகிறது. ஆதலின் மயில்வாகனர் விஞ்ஞான சாத்திரப் பயிற்சியில் ஊக்கம் காட்டியது முற்றும் பொருத்தமே யாகும். அவர் சிறந்த பேராசிரியர்களிடம் பயிற்சி பெற்று, அடுத்த ஆண்டில் நடைபெற்ற தேர்வில் சிறப்புறத் தேறினர்.

'பண்டிதர்' தேர்வு

அக்காலத்தில் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவப்பட்டுத் தனித்தமிழ்த் தேர்வுகள் நடைபெற்று வந்தன. பாலவநத்தம் ஜமீந்தாரான **பாண்டித்துரைத்தேவர்** என்ற பெரியார் அச்சங்கத்தை 1901-இல் ஏற்படுத்திஞர்; தமிழில் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்ற தேர்வுகளை ஏற்படுத்திஞர் ; சங்கத்தின் மூலமாக அத்தேர்வுகட்கு மாணவரைத் தயார் செய்ய வகுப்புகளை அமைத்தார்; தமிழ் நூல்நிலையம் ஒன்றைத் திறந்துவைத்தார்; அச்சகம் ஒன்றை அமைத்தார் ; தமிழ் ஆராய்ச்சிக்காகச் "செந்தமிழ்" என்னும் பெயருடன் மாதத்தாள் ஒன்றைத் தொடங்கிஞர்.

பாண்டித்துரைத் தேவரால் நிறுவப்பட்ட பண்டிதத் தேர்வில் முதல்வராக வெற்றி பெற்றுத் தங்கத் தோடாப் பரிசு பெற்ற பெரும்புலவர் சிலர். அவருள் காலஞ்சென்ற பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் ஒருவர்.

பண்டித - மயில்வாகனர்

ஈழ நாட்டிலிருந்து அத்தேர்வுக்குச் சென்றவர் ஒருவருமிலர். மயில்வாகனர் பண்டிதத் தேர்வுக்குச் செல்லவேண்டுமென்று விரும்பிஞர். அவர் இளம் பருவ முதலே தமிழ் நூல்களை மிகுந்த ஊக்கத்துடன் புலவர் பலரிடம் பாடம் கேட்டுவந்தார் அல்லவா ?

அவர் தாமாகவும் பல நூல்களைப் படித்து முடித்தார். அவர் 1916-இல் மதுரை சென்று பண்டிதத் தேர்வினை எழுதி வெற்றி அடைந்தார்; இலங்கைத் தமிழர் உள்ளங் குளிர்ந்து பாராட்டப் 'பண்டிதர்' பட்டம் பெற்றார்; அன்று முதல் பண்டித மயில்வாகனர் என்று அழைக்கப்பெற்றார்.

பி. எஸ்ஸி. பட்டம்

மயில்வாகனர் தாம் விஞ்ஞானப பயிற்சி பெற்ற கல்லூரியிலேயே முதலில் இரசாயன உதவி ஆசிரிய ராய் இருந்தார்; பிறகு யாழ்ப்பாணத்துக் கல்லூரி ஒன்றில் இரசாயன சாத்திரப் பேராசிரியராய் வேலை பார்க்கலானார்; அப்பொழுது ஏற்பட்ட ஓய்வினை விஞ்ஞான ஆராய்ச்சியினும் தமிழ் நூல்களை வாசித் தலிலும் கழித்தார். அவர், 'நடக்கும் நூல்நிலையம்' எனப் புகழ் பெற்ற சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் முதலிய தமிழ்ப் பெரும் புலவர்களுடன் நெருங் கிப் பழகினார்; தமிழ் நூல் ஆராய்ச்சியில் பேரூக்கம் காட்டினார்; 1920-இல் இலண்டன் பல்கலைக் கழகத்தா ரால் நடத்தப்பட்ட பி. எஸ்ஸி. தேர்வில் வெற்றி பெற் றார்; அது முதல் பண்டித - மயில்வாகனர், B. Sc. (Lond.) என்று அழைக்கப்பட்டார்.

கல்லூரித் தலைமையாசிரியர்

மயில்வாகனர் 1920-இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் தலைமை ஆசிரியர் பதவி ஏற்றார்; அப் பதவியில் இரண்டு ஆண்டுகள் இருந்து தொண்டு புரிந்தார். கல்லூரியில் ஆங்கிலம், தமிழ், விஞ்ஞான பாடங்களை அவரே நடத்தலானார். பாடம் நடத்தும் அவரது முறை மாணவர்க்கு மகிழ்ச்சியை விளைத்தது.

மயில்வாகனரால் பொது மக்களிடையே கல்லூரி நன் மதிப்புப் பெற்றது.

மயில்வாகனர் லத்தீன் மொழியிலும் வல்லவர். கல்லூரியில் அம்மொழி ஆசிரியர் வராத வேளைகளில் அதைப் படிப்பிக்கத் தாமே முற்படுவார்; லத்தீன், ஆங்கிலம், தமிழ் இவற்றின் ஏற்றத் தாழ்வுகளைப் பல மேற்கோள்களுடன் எளிதாக விளக்கிக் காட்டுவார்; அப்பொழுது இருந்த லத்தீன் பாட புத்தகம் 'வேர்ஜில் எயினேயிட்' என்பது. மயில்வாகனர் அதனைத் தமிழ்க் காவியமாகப் பாடி முடித்தார்; லத்தீன் பாடத்தை நடத்திக்கொண்டே தாம் பாடிய காவியப் பகுதிகளை யும் படித்துக் காட்டி மாணவரை மகிழ்விப்பார்; ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியர், பேக்கன் முதலியவர் நூல் களைப் படிப்பிக்கையில், அப்புலவர் பெயர்கட்குச் 'செக சிற்பியார்', 'பேக்கனார்' எனத் தமிழ் மணம் ஊட்டி, அவர்தம் வாசகங்கட்கு ஈடாகச் சங்க நூல் களிலிருந்து மேற்கோள்களைக் காட்டி, மாணவர்க்குத் தமிழ் அறிவு கொளுத்துவார்.

அவர் ஒருநாள் மாணவரை நோக்கி, "சிவபெரு மான் காட்சி தந்து 'உங்கட்கு என்ன வரம் வேண்டும்?' என்று கேட்பின், நீங்கள் என்ன கேட்பீர்கள்?" என்று திடீரெனக் கேட்டார். ஒவ்வொரு மாணவர் ஒவ்வொன்றைச் சொன்னார். இறுதியில் மயில்வாகனர், "என்னைக் கேட்பின், நான் முத்தி தரும்படி கேட்க மாட்டேன். முத்தி என்னளவில் நின்றுவிடும். அதனை விட எல்லோரும் இன்புறுமாறு தொண்டு செய்வதில் உள்ள இன்பம் மிகுதியாகும். ஆதலின் 'தொண்டு செய்ய வரம் தா—தமிழ்ப் பணி செய்ய வரமருள்' என்று கேட்பேன்," என்று முகமலர்ச்சியுடன் கூறினார்.

அவரது பேச்சு மாணவர்க்கு மிகுந்த உள்ளக் கிளர்ச்சி அளித்தது. அவரது உயர்ந்த மனப்பான்மையை எண்ணி எண்ணி மாணவர் மகிழ்ந்து பாராட்டினர்.

ஆரிய - திராவிட மொழி வளர்ச்சிக் கழகம்

இலங்கையில் 'ஆரிய-திராவிட மொழி வளர்ச்சிக் கழகம்' என்ற பெயர் கொண்ட கழகம் ஒன்று பல ஆண்டுகளாய் இருந்துவருகிறது. மயில்வாகனர் கல்லூரித் தலைமை யாசிரியராக இருந்த காலத்தில் அக் கழகம் செவ்வையாய் நடைபெறவில்லை. மயில்வாகனர் தமிழ் அறிஞர் பலருடன் கூடி யோசித்து அதனைப் புதுக்கி அமைத்தார்; அதன் சார்பில் தேர்வுகள் வைத்து நடத்த ஏற்பாடு செய்தார்; தமது இறுதிக் காலம் வரை அக்கழகத்தின் பண்டிதத் தேர்வுகட்குத் தேர்வாளராகவும் கௌரவ உறுப்பினராகவும் இருந்து தொண்டு செய்துவந்தார்.

ஈழத்தில் மறைமலையடிகள்

சென்னையை அடுத்த பல்லாவரத்தில் (பல்லவ புரம்) மறைமலையடிகள் என்னும் பெயர்கொண்ட தமிழ்ப் பெரும்புலவர் இருந்துவருகின்றார். அவர் சென்னைக் கிறித்தவக் கலாசாலையில் தமிழ்ப் பேராசிரியராய் இருந்தவர்; தமிழ் - வடமொழி - ஆங்கிலம் இவற்றில் வல்லுநர் என்பன முன் கூறப்பட்டன. அவர் சைவ சித்தாந்த சாத்திரங்களை நன்கு கற்றவர்; உலகச் சமய நூல்கள் அனைத்தையும் நன்கு படித்து ஆராய்ந்தவர். அப்பெரியார் பல ஆராய்ச்சி நூல்களைச் சிறந்த தமிழ் நடையில் எழுதி வெளியிட்டுள்ளவர்.

அப்பெரியார் புகழை நமது மயில்வாகனர் கேள்வியுற்றார்; அவருடைய நூல்களைப் படித்து மகிழ்ந்தார்;

அவரை ஈழநாட்டிற்கு வரவழைத்தார்; யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களில் அவரைச் சொற்பொழி வாற்றச் செய்தார். மறைமலையடிகள் பேச்சு - எழுத்து - படிப்பு ஆகிய மூன்றிலும் பேராற்றல் பெற்றவர். ஆத லின் அவர் சொற்பொழிவுகள் ஈழ நாட்டவரால் பெரி தும் பாராட்டப் பெற்றன. மயில்வாகனர் தமிழ் மக்க ளிடம் பெரும் பொருள் திரட்டி மறைமலையடிகட்கு, இலங்கைத் தமிழர் பாராட்டின் அறிகுறியாகத் தந்தார்.

4. விபுலானந்த அடிகள்

இராமகிருஷ்ண மடம்

வங்க மாகாணத்தில் தோன்றிய மஹான்களில் இராமகிருஷ்ண பரம ஹம்சர் மிகச் சிறந்தவர் ஆவர். அவர் உலகப்பற்றை விரும்பாதவர்; துறவுள்ளம் கொண்டவர்; யோகப் பயிற்சியிற் சிறந்தவர்; இந்து சமுதாயத்திற் காணப்பட்ட சாதி வேறுபாடுகளை அறவே வெறுத்தவர்; எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற எண்ணமுடையவர்; "காளியம் மையே! நான் பிராமணன் என்றும் மற்றொருவன் பறையன் என்றும் இருக்கின்ற வேறுபாடு என் மனத் தில் தோன்றாதிருக்க அருள்வாய்!" என்று அம்மையை வேண்டிய உத்தமர். அப்பெரியாரின் மாணவருள் தலை சிறந்தவரே விவேகானந்த அடிகள்.

விவேகானந்தர் பி.ஏ. பட்டம் பெற்றவர்; மற்போர், குத்துச் சண்டை முதலியவற்றிலும் தேர்ச்சி பெற்ற வர்; அறிவு, ஆராய்ச்சிகளிற் சிறந்தவர்; பேச்சிலும் எழுத்திலும் வல்லவர். அவர் 'கடவுள் உண்டா?

இல்லையா?' என்று இராமகிருஷ்ணரைக் கேட்டு, 'உண்டு' என்று தெளிந்தவர். அவர் இராமகிருஷ்ண ரைப் பல கேள்விகள் கேட்டார். இராமகிருஷ்ணர் எல்லாக் கேள்விகட்கும் விடையளித்து விவேகானந் தரை ஆட்கொண்டார். இராமகிருஷ்ணரைப் பலவாறு சோதித்த பிறகே விவேகானந்தர் அவரைத் தம் ஞான குருவாகக் கொண்டார்; அவர் மறைந்த பிறகு, அவர் பெயரால் (இராமகிருஷ்ண) மடங்களைப் பல இடங்களில் தாபித்தார். அப்பெரியார் அமெரிக்கா விற்குச் சென்று எல்லாச் சமயத்தவரும் கூடியிருந்த மாநாட்டில் இந்து சமயப் பெருமையை நன்கு விளக்கிப் பேசிப் பெரும்பெயர் பெற்றார்; அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளில் இராம கிருஷ்ண மடங்களை ஏற்படுத்தி அவ்வந்நாட்டு மக்களைச் சீடர்களாய்ச் சேர்த்தார்; இந்தியாவிலும் பொதுமக்கட்குக் கல்வி, சமயபோதனை, மருத்துவவுதவி இவற்றை அளிக்கத் தக்க மடங்களைப் பல இடங்களில் ஏற்படுத்தினார். உண்மைத் துறவியாக இருந்து நாட்டுப் பொதுமக்கள் நலனுக்கே பாடுபட்டுவந்த அப் பெரியார் உழைப்பினைப் பாராட்டிப் பொதுமக்கள் மடங்களை நிறுவப் பெரும்பொருள் உதவினர். அம் மடங்கள் இன்று உலகமெங்கும் பரவித் தொண்டு செய்துவருகின்றன.

இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் ஆங்கிலம் கற்றவர்கள்; சமய நுட்பங்களை நன்கறிந்தவர்கள்; சொற்பொழிவு செய்தலில் வல்லவர்கள்; பொது மக்கட்குத் தொண்டு செய்வதில் பின் வாங்காதவர்கள். அவர்கள் ஏதேனும் வெளிவேலையில் ஈடுபட்டுப் பொருள் பெறினும், அது மடத்திற்கே அளிக்கப்பட்டு

விடும். இந்து சமய வளர்ச்சிக்கென்று பாடுபடுகின்ற மடங்களுள் இராமகிருஷ்ண மடங்கள் முதலிடம் பெறத்தக்கவை ஆகும்.

மடத்துத் தொடர்பு

இராமகிருஷ்ண மடம் ஈழநாட்டிலும் ஏற்படுத்தப் பட்டது. அம்மடத்தில் துறவிகள் இருந்து பொது மக்கட்குக் கல்வி - சமய - மருத்துவத் தொண்டு செய்துவந்தனர். கொழும்பில் விவேகானந்தர் பெயரால் சபை ஒன்று இருந்தது. நமது மயில்வாகனர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிற் படித்து வந்த பொழுதே இச்சபைக்குச் சென்றுவந்தார் என்பது முன்னரே கூறப்பட்டதன்றோ? அவரது உள்ளம் அடிகள்பாற் சென்றது. அவர் விவேகானந்த அடிகள் வரலாறு, கடிதங்கள், சொற்பொழிவுகள் இவைபற்றிய நூல்களை நன்கு பயின்றார். பின்னர் அவர், அடிகளுக்கு ஆசிரியராய் இருந்த பரமஹம்சர் வரலாற்றையும் உபதேசங்களையும் கருத்தூன்றிக் கவனித்தார். அவர் உள்ளம் இராமகிருஷ்ண மடத்தை மதிக்கத் தொடங்கியது. மயில்வாகனர் 1916-இல் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி சர்வானந்தர் என்பவருடன் தொடர்புகொண்டார்; அவருடன் சமய ஆராய்ச்சியிற் புகுந்தார்; ஓய்வு நேரங்களில் சர்வானந்தருடன் வேதாந்தம், சித்தாந்தம் பற்றிப் பேசலானார். அதன் பயனாக அவருக்குச் சமயதத்துவ ஆராய்ச்சியிற் பெரு விருப்பம் ஏற்பட்டது.

மடத்தில் சேர்தல்

இராமகிருஷ்ண மடத்துத் துறவிகள் செய்துவந்த பொதுநலத் தொண்டும் மடத்தின் கொள்கைகளும்

மயில்வாகனர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. மயில்வாகனர் உள்ளம் தொண்டு ஒன்றினையே விரும்பி நின்றது. அதனால் அவர் துறவுபூண்டு தொண்டு புரியத் துணிந்தார்; 1922-இல் ஈழ நாட்டைவிட்டுச் சென்னை சென்றார்; அங்குத் திருமயிலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ண மடத்திற் சேர்ந்தார்; பிரபோத சைதன்யர் என்னும் பிரமசரிய ஆசிரமப் பெயர் சூட்டப் பெற்றார். அந்த மடத்தில் இருந்துகொண்டே மடத்தார் வெளியிட்டுவந்த இராமகிருஷ்ண விஜயம் என்னும் தமிழ் இதழுக்கும் 'வேதாந்த கேசரி' என்னும் ஆங்கில இதழுக்கும் ஆசிரியராய்ப் பணியாற்றினார்; வடமொழியையும் பல சமய நூல்களையும் கற்றார்.

தமிழ்த் தொண்டு

மயில்வாகனரான பிரபோத சைதன்யர் மடத்தில் இருந்துகொண்டே ஓய்வு நேரங்களில் தமிழ்ப் பெரும் புலவர் பலருடன் நெருங்கிப் பழகலானார்; மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், மறைமலை அடிகள், கா. நமச்சிவாய முதலியார் முதலிய பெரும்புலவர்களுடன் பழகினார். இலங்கையிலிருந்த தமிழ்ப் பெரும்புலவர் ஒருவர் மடத்தில் சேர்ந்து துறவியானார் என்ற செய்தி கேட்ட தமிழர் பலர் மயில்வாகனரைத் தத்தம் தமிழ்க் கழகங்கட்கு அழைத்துச் சென்று பேசவைத்துச் சிறப்புச் செய்தனர். அவருடைய இனிய பேச்சு, நடந்துகொண்ட முறை முதலியன அவர்கட்குப் பெருமகிழ்ச்சியை அளித்தன. அவரது சைவசமயச் சொற்பொழிவுகளைக் கேட்டும் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகளைக் கேட்டும் சென்னை மக்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

மயில்வாகனர் புகழ் தமிழ் நாட்டில் செய்தித்தாள்கள் வாயிலாகவும் தமிழ்ப் புலவர்கள் வாயிலாகவும் பரவத் தொடங்கியது. பல ஊர்களிலிருந்து அழைப்புகள் வந்தன. மயில்வாகனர் அவ்வவ்விடங்கட்குச் சென்று சொற்பொழிவாற்றி மக்களை மகிழ்வித்தார். அப்பெரியார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தார்; அங்கு நடைபெற்ற மூவகைத் தமிழ்த் தேர்வுகட்கும் தேர்வாளராய் இருந்து தொண்டாற்றினர்; அச்சங்கம் வெளியிட்டுவந்த ‘செந்தமிழ்’ என்னும் திங்கள் தாளில் அவர் கட்டுரைகள் மிளிர்ந்தன.

மயில்வாகனர் தமிழகத்தில் பெயர் பெறுதலைச் செய்தித் தாள்கள் வாயிலாகவும் பிறர் வாயிலாகவும் அறிந்த ஈழத்துத் தமிழறிஞர்கள் மகிழ்ச்சிகொண்டனர். அக்காலத்தில் ஈழ நாட்டில் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அதனில் தமிழ்ப் பேராசிரியராய் இருக்கும்படி மயில்வாகனர்க்கு அழைப்பு வந்தது; ஆயின் அவர் மடத்தை விட்டுப் போக முடியவில்லை; மடத்திலிருந்தே மடத்து வேலைகளையும் தமிழ்த் தொண்டினையும் கவனித்துவந்தார். அவரை ஆசிரியராய்க்கொண்ட மடத்து இதழ்களும் பிற தாள்களில் வரைந்த கட்டுரைகளும் நாட்டு நல்லறிஞர் பாராட்டுக்கு உரியவை ஆயின.

தமிழர் கல்விச்சங்கம்

மயில்வாகனர் சென்னையில் இருந்தபொழுது சென்னையில் தமிழர் கல்விச்சங்கம் என்ற பெயருடன் ஒரு சங்கம் இருந்தது. திருவாளர் சர். டி. சதாசிவ ஐயர், அ. அரங்கசாமி ஐயங்கார், ச. பவானந்தம் பிள்ளை, டி. ஆர். வேங்கடராம சாத்திரியார், டி. வி. கோபால

சுவாமி முதலியார், எஸ். முத்தைய முதலியார் முதலிய பெரியோர்கள் அதனை நடத்திவந்தனர். விஞ்ஞானச் செய்திகளை எளிய தமிழில் மக்களிடையே பரவச் செய்தல் வேண்டும் என்பதே அச்சங்கத்தின் சிறந்த நோக்கமாய் இருந்தது. அதனால் அஃது அறிஞர் பலரைக்கொண்டு தமிழில் விஞ்ஞானச் சொற்பொழிவுகளை நடத்திவந்தது.

நமது மயில்வாகனர் சிறந்த தமிழ்ப்புலவர் என்பதையும் விஞ்ஞானத்தில் பட்டம் பெற்றவர் என்பதையும் அறிந்த சங்கத்தார் அவரைக்கொண்டு பல சொற்பொழிவுகள் நடைபெறச் செய்தனர். மயில்வாகனருடைய மலர்ந்த முகமும் பேச்சுவன்மையும் மக்கள் மனத்தைக் கவர்ந்தன. அவர் சொற்பொழிவுகளைப் பலரும் விரும்பிக் கேட்டனர்; கடினமான விஞ்ஞானச் செய்திகளை மிகத் தெளிவான முறையில் எளிய தமிழில் அவர் பேசியது அவர்கட்கு வியப்பாக இருந்தது.

விபுலானந்த அடிகள்

மயில்வாகனர் இங்ஙனம் இரண்டு ஆண்டுகளை மடத்துத் தொண்டிலும் தமிழ்த்தொண்டிலும் கழித்தார்; அக்காலத்தில் பிரமசரிய ஆசிரமத்துக்குரிய கடமைகளில் அணுவளவும் தவறாது நெறிப்பட நடந்து வந்தார். அவரது நெறியினைக் கண்டு மகிழ்ந்த மடத்துத் தலைவர் 1924-ஆம் ஆண்டுச் சித்திரைத் திங்கள் பௌர்ணமியன்று அவருக்குக் குருப்பட்டம் சூட்டி, 'சுவாமி விபுலானந்தர்' என்ற புதிய பெயரை வழங்கினர். அன்று முதல் பண்டித மயில்வாகனர்—'சுவாமி விபுலானந்தர்' என வழங்கப்பெற்றார். தமிழ் அறிஞர் அவரை விபுலானந்த அடிகள் என்று அழைக்கலாயினர்.

5. பலதுறைத் தொண்டு—I

மடத்துப் பள்ளிகள்

இராமகிருஷ்ண மடத்தின் சிறந்த கொள்கைகளுள் கல்விச் சாலைகளை வைத்து நடத்தல் ஒன்றாகும். ஈழநாட்டில் இக்கொள்கைப்படி பல பள்ளிகள் வைத்து நடத்தப்பட்டன. விபுலானந்த அடிகள் அப்பள்ளிகளின் பொறுப்பாளராக நியமனம் பெற்றார். அவர் 1925-ஆம் ஆண்டு முதல் அந்தப் பதவியை ஏற்று நடத்தலானார்; தாராள மனப்பான்மையோடும் விரிந்த நோக்கத்தோடும் பிள்ளைகளுடனும் ஆசிரியர்களுடனும் பழகினார்; அவர்கட்குத் தோழராகவும் ஆலோசனையாளராகவும் ஒப்பற்ற தலைவராகவும் விளங்கினார். அவர் தொண்டு ஒன்றைக் கருதியே துறவு பூண்டவர் ஆதலின், தந்நலமற்றவராய்ப் பள்ளிகளைப் பல துறைகளிலும் முன்னேற்ற அரும்பாடுபட்டார்; ஆசிரியர்கட்கும் மாணவர்கட்கும் தமிழ்ப்பற்றையும் சமயப் பற்றையும் ஒழுக்க நிலையையும் நன்கு வளர்த்தார்; மட்டக்களப்பினைத் தலைமை இடமாய்க் கொண்ட கீழ் மாகாணத்தில் அநாதைப் பிள்ளைகட்காக ஒரு பள்ளியைத் தொடங்கித் திறம்பட நடத்திவந்தார். அவரது தொண்டினை ஈழமக்கள் பாராட்டி மகிழ்ந்தனர்.

திருக்கோண மலையில்

அடிகள் கீழ்மாகாணத்தில் திருக்கோணமலை-இராமகிருஷ்ண மடத்தில் இருந்தார்; அங்கு இருந்து கொண்டே பல பள்ளிகளை மேற்பார்த்துவந்தார். அப்பொழுது அறிஞர் பலர் அவரைக் கண்டு அளவளாவுதல் உண்டு. அடிகள் அவர்களிடம் தமிழ், வட

மொழி, ஆங்கிலம் என்னும் மூன்று மொழிகளிலும் உள்ள கலைச் சிறப்புகள் பலவற்றையும் குறித்துப் பேசுவார்; எம்மொழியில் எந்நூலில் சிறந்த கருத்துகள் இருப்பினும் அவற்றைத் தமிழில் அமைத்துத் தமிழைச் சிறப்பிக்க வேண்டும் என்பார். நண்பர்கள், "தமிழில் இங்ஙனம் புதிய நூல்கள் செய்யலாம். ஆயின், அவற்றை ஆதரிக்கத் தமிழர் இல்லையே!" என்றனர். அடிகள், "இன்று தமிழர் ஊக்கமின்றி இருக்கலாம். ஆயின், இருபதாண்டுகட்குள் இந்நிலைமை மாறி விடும். தமிழர் தாய்மொழி வேட்கை கொண்டு தமிழை வளர்க்க முற்படுவர்; தமிழன்னையின் நிலைமை உயரத் தரும் காலம் விரைந்துவரும்" என்றனர். அப்பெரியார் கூறியது இன்று உண்மையாகிவிட்டதன்றோ? நீங்கள் அனைவரும், "நமது தாய்மொழி தமிழ். அது நமது உயிர். அதனை வளர்ப்பது நமது பிறப்புரிமை" என்று தமிழ்ப் பற்றுக்கொண்டு இருக்கிறீர்கள் அல்லவா? பொதுமக்களும புதிய புதிய தமிழ் நூல்களைப் படித்து அறிவு வளர்ச்சி பெறுகின்றனர் அல்லவா? நாடெங்கும் தமிழ்க் கழகங்கள் இருந்து தொண்டாற்றுகின்றன அல்லவா? இவற்றைத்தான் அடிகள் இருபதாண்டுகட்குமுன் குறிப்பிட்டார்.

அடிகள் சில சமயங்களில் பகவத்கீதை சம்பந்தமாகப் பேசுவார்; கீதையில் உள்ள சில சுலோகங்களைச் சொல்லி அவற்றுக்குத் தம் நுண்ணறிவிற்பட்ட விளக்கங்களைத் தெளிவாகக் கூறுவார்; அவற்றைக் கேட்போர்க்கும் ஒரு புதிய எண்ணத்தை மனத்தில் நிலை பெறச் செய்துவிடுவார்.

ஞானியார்

தென் ஆர்க்காடு ஜில்லாவில் உள்ள பாடல்பெற்ற தலங்களுள் ஒன்று திருப்பாதிரிப்புலியூர் என்பது. அங்கு ஞானியார் மடம் ஒன்று இருக்கின்றது. அதன் தலைவர் ஞானியார் சுவாமிகள் எனப்பட்டனர். அப் பெரியார் சைவவுலகிற் பெரிய ஆசாரியராக விளங்கினார்; நாடு முழுவதும் சுற்றிச் சைவ சமயச் சொற்பொழிவுகள் செய்தார்; ஆயிரக் கணக்கான சீடர்களைச் சேர்த்தார். அவர் ஒரு தமிழ்ப்பள்ளி வைத்து நடத்திவந்தார். பலர் அப்பெரியாரிடம் தமிழ் நூல்களையும் சைவ நூல்களையும் பாடம் கேட்டனர். அவர் தமிழ்—வடமொழி—ஆங்கிலம் இவற்றில் வல்லுநராய் விளங்கினார்.

ஞானியார் மடத்தில் ஆண்டுவிழா

ஞானியார் அவர்கள் நமது விபுலானந்த அடிகள் சிறப்பினைக் கேள்வியுற்றார்; தமது மடத்தில் நடைபெற்ற தமிழ் மாநாட்டிற்குத் தலைவராக இருக்கும்படி அடிகளை அழைத்தார். ஞானியாரது பெரும் புகழைக் கேள்வியுற்ற அடிகள் அவரைப் பார்க்க வாய்ப்பு நேரிட்டதை எண்ணி மகிழ்ந்து, அழைப்பினை ஒப்புக்கொண்டார்; திருப்பாதிரிப்புலியூர் சென்று ஆண்டு விழாத் தலைவரானார்; தலைமைப் பேருரையைத் திறம்படப் பேசினார்; அதனில் தமிழின் பழம்பெருமை, தமிழ் இலக்கிய வளம், தமிழை வளர்க்கத்தக்க வழிகள், தமிழர் கடமை முதலியவற்றைப் பற்றி விளக்கமாய்ப் பேசி மக்கட்குத் தாய்மொழிப் பற்று வேரூன்றச் செய்தார். அவரது இனிய பேச்சு—பொருட்சிறப்பு—அவர் காட்டிய மேற்கோள்கள் முதலியன மக்களை மனமகிழச்

செய்தன. ஞானியார் அடிகளுடைய பெரும் புலமையைக் கண்டு மகிழ்ந்தார்; அவரால் தமிழ்நாடு சிறப்படையும் என்று நம்பினுர்.

மதங்க சூளாமணி

இயற்றமிழ், இசைத்தமிழ் ஆகிய இரண்டிற்கும் தமிழ்நூல்கள் இருக்கின்றன. பழைய நாடகத்தமிழ் நூல்கள் அழிந்துபட்டன. அக்குறையை நிறைவாக்க நமது அடிகள் முயன்று ஒரு நாடகத் தமிழ்நூலினை எழுதினுர். அதனை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் வெளியிட்டுள்ளனர். அதன் பெயர் மதங்க சூளாமணி என்பது. அந்நூலில் ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்களின் நயமும் தசரூபகம் முதலிய வடமொழி நாடகநூல்களின் நாடக அமைப்பும் நமது நாடகத் தமிழின் இயல்பும் விளக்கமாய்க் கூறப்பட்டுள்ளன. அந்நூல் தமிழ் அறிஞர் பாராட்டுக்கு உரியதாயிற்று. அதன் வாயிலாக அடிகளது பெரும்புலமை நாடு அறிய வாய்ப்பு ஏற்பட்டது.

பாவலர் விருந்து

அடிகள் ஈழநாட்டில் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த பள்ளிகளை மேற்பார்த்துக்கொண்டே மேற்சொன்ன தொண்டுகளில் ஈடுபட்டுவந்தனர். அவர் சென்னையில் இருந்த பொழுது முன்சொன்ன தமிழர் கல்விச்சங்க உறுப்பினர்களுடன் நெருங்கிப் பழகினுர். அவ்வுறுப்பினருள் அ. மாதவையர் என்பவர் ஒருவர். அவர் தமிழ் வளர்ச்சியில் மிக்க ஆர்வம் கொண்டவர். அவர் 'பஞ்சாமிர்தம்' என்னும் பத்திரிகையை வெளியிட்டுவந்தார். அடிகள் அதனில் பிளேட்டோ எழுதிய 'பாங்க்வெட்' என்னும் நூலைப் 'பாவலர் விருந்து' என்ற தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்து வந்தார்.

அப்பகுதிகளைப் படித்த தமிழறிஞர் அடிகளாரது மொழி பெயர்க்கும் ஆற்றலைப் பாராட்டிப் பேசினர்.

தமிழ்ப் பல்கலைக் கழகம்

தமிழ் நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்று இராஜா-சர்-அண்ணாமலைச் செட்டியார் பெருமுயற்சி செய்தார். 'அப்பல்கலைக் கழகம் தேவையா' என்பதை விசாரித்து முடிவு செய்ய 1926-இல் குழு ஒன்று நியமனம் பெற்றது. இராமநாதபுர அரசர் அக்குழுவுக்குத் தலைவராய் இருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தார் நமது அடிகள் கருத்தை அறிய விரும்பினர். அடிகள் அக்கழகத்தார் வேண்டுகோட்கு இணங்கி மதுரை சென்று, ஆலோசனைக் குழுவினர் முன்னர், "தமிழ் வளர்ச்சிக்காகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று தமிழ்நாட்டில் ஏற்படுத்துதல் சாலச் சிறந்ததே யாகும்," என்று சான்று கூறினர். அதன் பயனாக ஏற்பட்டதே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்பது.

சிவானந்த வித்தியாலயம்

அடிகள் ஈழத்தில் புதிதாக அமைத்த பள்ளிகளில் ஒன்று சிவானந்த வித்தியாலயம் என்பது. அது 'மட்டு நகரி'ன் ஒருசார், தூய மணற்பாங்கான கல்லடி—உப்போடை என்னும் இடத்தில் அமையப்பெற்றது. மணல் வெளியில் அமைக்கப்பட்ட அக்கல்விச்சாலை இன்று விழிகட்கு விருந்தளிக்கும் நிலையில் விளங்குகின்றது. பதினெட்டு மாணவரைக்கொண்டு தொடங்கப் பெற்ற அக்கல்விச்சாலை இன்று ஐந்நூற்றுவர்க்கும் மேலாகப் பெற்றுள்ளதற்கு அடிகளது பெருமுயற்சியே அடிப்படையாகும். நாட்டுப் பற்றுடன் ஆங்கில

அறிவை ஊட்டி, நாட்டு மக்களை நல்வழிப்படுத்த அடிகள் மேற்கொண்ட முயற்சி மெய்யாகவே பயனளித்தது. கலாசாலை கிழக்கே கடலைச் சார்ந்திருந்தது. கலாசாலைக்குத் தமது குருவான சிவானந்தர் பெயரையே அடிகள் சூட்டி மகிழ்ந்தார். ஏழை மாணவரும் உயர்ந்த கல்விகற்று முன்னேற உதவிபுரிதற்காக இலவச விடுதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

அடிகள் பிள்ளைகட்கு இந்து சமயத்தின் சிறப்பியல்புகளைத் தெளிவாக விளக்கிப் பல சந்தர்ப்பங்களிற் பேசினார்; பக்கத்துச் சிற்றூர்களிற் சமயச் சொற்பொழிவுகள் செய்தார்; பிள்ளைகட்குத் தமிழ் மொழிமீது பற்று ஏற்படச் செய்தார்; இரவு பகல் மாணவரிடையே இருந்து அவர்களை அன்பாக நடத்தி, அவர்கள் மனத்தைக் கவர்ந்தார். பிள்ளைகள் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து வருதலைக் கண்ட பொது மக்கள் மகிழ்ச்சி அடைந்து, கல்விச் சாலையை வளப்படுத்தப் பொருள் உதவி செய்தனர். அதன் பயனாகப் பல புதிய கட்டடங்கள் தோற்றமெடுத்தன. விடுதிச் சாலைகள் விரிவாக்கப்பட்டன; கழுநீர்த் தொட்டிகளும் மல்லிகைத் தோட்டங்களும் ரோஜாச் செடிகளும் ஆங்காங்கே வைத்துப் பாதுகாக்கப்பட்டன. சிறந்த நூல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. தண்ணீர்க் குழைகள் பதிக்கப்பட்டன. மாமரங்களும் வேப்ப மரங்களும் பாலை நிலத்தைப் பசிய தரையாக்கின. மின்சார விளக்குகள் பூட்டப்பெற்றன. இசை வகுப்புகள், சமய வகுப்புகள், யோகாசன வகுப்புகள் வளர்ச்சி பெற்றன. இலக்கிய மன்றம் விரித்தமைக்கப்பட்டது. அடிகளை கல்விச்சாலைத் தலைவராக இருந்து சிறிது

காலம் வேலை பார்த்தார். ஆசிரியர்களும் அடிகளைப் பின்பற்றிக் கல்விச்சாலை நலனுக்கென்றே உழைத்தனர். அடிகள் அக்கல்விச்சாலையில் பொதுமக்கள் தமிழ் அறிவு பெறுவதற்காகப் 'புலவர் வகுப்பு' ஒன்றைத் தோற்றுவித்தார். அவ்வகுப்பு மாணவர் மிக்க விருப்புடன் தமிழ் நூல்களைக் கற்கலாயினர். அடிகள் செய்யுட்களை இசையுடன் படித்துக்காட்டிப் பொருள் விளக்கம் செய்தல் வழக்கம்.

மாணவர்களும் ஆசிரியரும் நாட்டு உடைகளையே அணிந்தனர். மாணவர் ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம் இவற்றில் சிறந்த பயிற்சி பெற்றனர்; இவை அனைத்திற்கும் மேலாகத் தொண்டுசெய்வதில் ஆர்வம் கொண்டனர்; அடிகளைத் தம் கண்கண்ட கடவுளாகக் கருதி ஊக்கமும் உணர்ச்சியும் கொண்டு கல்வி கற்றனர். அடிகள் பௌத்தம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளை எடுத்துக்காட்டும் இராமகிருஷ்ணருடைய உபதேச மொழிகளை மாணவர்க்கு நன்கு ஊட்டிவந்தார்; விவேகானந்தருடைய வீர வுரைகளால் மாணவர்க்கு ஊக்கத்தையும் உணர்ச்சியையும் ஊட்டினர்.

சுருங்கக் கூறின், விபுலானந்த அடிகளால் பாலை நிலம் பசிய நிலமாயிற்று; அறியாமை மக்களை விட்டு அகன்றது. மக்கள் கல்வி, ஒழுக்கம், சமய உணர்ச்சி முதலியவற்றில் வளர்ச்சி பெற்றனர். அவர்கள் அனைவரும் தங்கள் அறியாமையைப் போக்கி அறிவுச் செல்வத்தை அளித்த அடிகளை அகமாரப் பாராட்டினர்; இன்றும் பாராட்டுகின்றனர். இங்ஙனம் அடிகள் செய்த பொதுநலத் திருப்பணிகள் பலவாகும்.

6. அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

தில்லையின் சிறப்பு

தமிழகத்தில் சிதம்பரம் எனப்படும் தில்லையம்பதி மிகச் சிறந்த பழமையுடையது. அது கி. பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் நாட்டுச் சிவத் தலங்களின் தலை மணியாக விளங்கியது. தேவார ஆசிரியர்கள் பாடிய திருமுறைகள் அங்குத்தான் அடக்கம் செய்யப் பட்டு இருந்தன. அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த தில்லைவாழ் அந்தணர் மூவாயிரவர் சிறந்திருந்த தலமும் அதுவே யாகும். அங்குத்தான் மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகம் கிடைத்ததாம். பிற்காலச் சோழர்களாகிய இராஜராஜன் முதலியோர் தில்லைப் பெருமானைத் தம் குலதெய்வமாகக் கொண்டாடி வந்தனர்; கூத்தப்பிரான் கோவிலைப் பொன்மய மாக்கினர்; தாம் அடிக்கடி சென்று தங்கியிருக்க அரண் மனை கட்டினர். சோழ வேந்தர்களைப் பின்பற்றி அவர் தம் அரசியல் அலுவலாளரும் கோவிலுக்குச் செய்த திருப்பணிகள் பலவாகும். சோழர்க்குப் பின் வந்த பாண்டியரும் விஜயநகர வேந்தர்களும் தில்லையைச் சிறப்பித்துவந்தனர்.

தில்லை வைணவத்திற்கும் பெயர் பெற்ற தலமாகும். கூத்தப்பிரான் திருமுன் தில்லைக் கோவிந்தன் பள்ளிகொண்டிருக்கும் திருக்கோலம் கண்டு களிக்கத் தக்கது. அத்தலம் திருமங்கையாழ்வாரால் பாடப் பெற்ற பெருமை உடையது. தில்லை, பட்டினத்தடிகள் போன்ற பெருமக்களும் அடியார் பிறரும் போற்றத் தக்க திருப்பதியாய் விளங்கியது.

பழைய தில்லைப் பதியின் ஒரு பகுதி கொற்றவன் குடி என்பது. அஃது இக்காலத்தில் 'கொத்தங்குடி' என மருவி வழங்குகின்றது. அஃது சிதம்பரம் புகை வண்டி நிலையத்திற்கு எதிரில் அமைந்திருக்கின்றது. அதனை அடுத்து ஏறத்தாழ ஒரு கல் கிழக்கே திருவேட்களம் என்ற பாடல் பெற்ற தலம் இருக்கின்றது. அத்தலத்தில் அழகிய சிறிய கோவிலும் திருக்குளமும் அமைந்திருக்கின்றன. கொற்றவன் குடிக்கும் திருவேட்களத்திற்கும் இடைப்பட்ட இடம் ஏறத்தாழ இருபதாண்டுகட்கு முன் பசிய வயல்களைப் பெற்றிருந்தது.

அண்ணாமலைச் செட்டியார்

இராஜா-சர்-அண்ணாமலைச் செட்டியார் என்பவர் இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள 'செட்டிநாடு' என்னும் பகுதிக்கு அரசர். அவர் பி. ஏ. பட்டம் பெற்றவர்; சிறந்த வணிகர்; கடல் கடந்த நாடுகளில் வாணிகம் நடத்தி வந்தவர்; உலையா முயற்சியும் ஊக்கமும் கொண்டு வாணிகம் நடத்திப் பெரும்பொருள் ஈட்டியதால் கோடீசுவரர் எனப் பெயர் பெற்றார். அவர் செல்வத்திற் சிறந்திருந்தாற் போலவே கொடையிலும் சிறந்து விளங்கினார். அப்பெரியாரது வள்ளன்மையைப் பாராட்டி அரசாங்கத்தார் அவரைச் சிறப்புச் செய்தனர். அவர் தமிழ் வளர்ச்சிக்காகப் பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினார்; அதற்குரிய இடத்தைத் தேடினார்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பல்கலைக் கழகம் என்பது பல கலைகளைக் கற்பிக்கும் கல்லூரிகளைத் தன் ஆட்சியின்கீழ்க் கொண்டிருக்கும் கழகம் எனப் பொருள்படும்.

அத்தகைய கழகமே சென்னைப் பல்கலைக் கழகம் என்பது. அது நமது மாகாணத்தில் உள்ள பல கல்லூரி களை ஆட்சி புரிவதாகும். அதுபோலப் பல கலைக் கல்லூரிகள் இருந்தாற்றான் பல்கலைக் கழகம் நிறுவ முடியும். பல கல்லூரிகள் உண்டாக்க இடம் விரிவாக இருத்தல் வேண்டும். அந்த இடம் நாட்டில் சிறப்புற்ற இடமாகவும் இருத்தல் நல்லதன்றோ? இவை அனைத் தையும் செட்டியார் நன்கு யோசித்தார்; பல்லாண்டு களாகச் சமயத் துறையிற் சிறப்புற்றுத் தமிழகத்தின் உயிர் நாடியாகவுள்ள தில்லையம்பதியிலேயே தமது பல்கலைக் கழகத்தை நிறுவத் துணிந்தார்; கொற்றவன் குடி முதல் திருவேட்களத்துக்கும் அப்பால் கடற்கரை வரையுள்ள பரந்த நிலப்பகுதியை விலை கொடுத்து வாங்கினார்; முதலில் ஒரு கல்லூரியைத் தொடங் கினார்; தமிழ்ப்புலவர் பயிற்சிக் கல்லூரியையும் தோற்றுவித்தார். பின்னர்ப் படிப்படியாகத் தமிழ்க் கல்லூரி, வடமொழிக் கல்லூரி, இசைக் கல்லூரி முதலியன தோன்றலாயின. இப்பொழுது எஞ்சினீய ரிங் கல்லூரி, சட்டக் கல்லூரி முதலியன தோன்றி வருகின்றன.

தமிழ்ப் பேராசிரியர் பதவி

எப். ஏ., பி. ஏ, எம். ஏ., முதலிய வகுப்புகட்கும் புலவர் வகுப்புகட்கும் புலவர் பயிற்சி வகுப்புகட்கும் சிறந்த தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர் கட்கு மேலாகப் பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும். அப் பதவிக்கு உரியவர் தமிழ்ப்புலமை யுடன் அரசாங்க மொழியாக இருந்த ஆங்கிலத்திலும் சிறந்தவராய் இருத்தல் நல்லதென்பது கருதப்பட்டது.

'தமிழ்ப் பல்கலைக் கழகமான அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்நாட்டுக்குத் தேவையேயாகும்' என்று நமது விபுலானந்த அடிகள் முன்பு சாக்ஷியம் கூறினார் அல்லவா? செட்டி நாட்டரசர் அப்பொழுது அடிகளது தமிழ்ப்பற்றை நன்கு அறிந்தார்; அதனால் அவரையே முதற் பேராசிரியராக இருந்து தொண்டாற்றுமாறு வேண்டினார்.

தொண்டு ஒன்றையே பிறவி எடுத்ததன்பயனாகக் கருதியிருந்த அடிகள் அவ்வேண்டுகோட்கு இசைந்து, ஈழ நாட்டிலிருந்து தில்லையை அடைந்தார். அவர் சைவ மரபிற் பிறந்து சைவ சாத்திரங்களை நன்கு கற்று அறிஞராதலின் தில்லைக் கூத்தப்பிரானிடம் எல்லையில்லாப் பேரன்பு கொண்டிருந்தார். ஆதலின் தில்லையின்மீது அவர் கொண்ட பகதியும் பேராசிரியர் பதவியை ஏற்கத் தூண்டிய காரணங்களில் ஒன்றாகும் என்னலாம். விபுலானந்த அடிகள் 1931 முதல் 1933 வரை அப்பதவியில் சிறப்புற இருந்து தொண்டாற்றினார்.

பேராசிரியர்

பேராசிரியர் விபுலானந்த அடிகளை 1931-க்கு முன்னரே தமிழ்ப்புலவர் நன்கறிந்தவர்; அவருடைய கட்டுரைகளைப் படித்துப் பாராட்டியவர்; ஆதலின் சிறந்த ஆசிரியராய அடிகளைப் பேராசிரியராய்ப் பெற்றமைக்கு மனமகிழ்ந்து அவருடன் ஒத்துழைத்துப் பணியாற்றிவந்தனர். மாணவரும் ஆசிரியர்மூலம் பேராசிரியர் சிறப்பினைக் கேள்வியுற்றனர்; நேரிலும் அவர் பாடம் நடத்தும் திறனைக் கவனித்தனர்; தமிழ்ப் புலவர்களுடன் அவர் வடமொழிப் புலவரையும்

ஆங்கிலப் புலவரையும் ஒப்பிட்டுப் பேசுந்திறனையும் கவனித்தனர்; தமது அறிவு வளர்ச்சிக்கு ஏற்ற பேராசிரியரே கிடைத்தனர் என்று எண்ணி அகமிக மகிழ்ந்தனர். அடிகள் தமிழ் மாணவர்கட்கு ஒழுக்கம், சமய அறிவு, தமிழ்ப்பற்று இவற்றை நாடோறும் ஊட்டி வந்தார்; காலை-மாலைகளில் மாணவருடன் நெருங்கிப் பழகி, அவரவர் குண நலன்களை அறிந்து, குணங்களைப் பாராட்டிக் குறைகளைத் திருத்திவந்தார்.

சேரித் தொண்டு

மாணவர் எம்முறையில் நாட்டுக்கும் மொழிக்கும் சமூகத்திற்கும் தொண்டு செய்தல் வேண்டும் என்பதைப்பற்றி அடிகள் மாணவர்க்கு அடிக்கடி கூறுவதுண்டு அவர் அத்துடன் அமையாது தாமே தொண்டு செய்து காட்டினார். அவர் செய்த தொண்டுகளிற் சிறந்தது சேரித் தொண்டாகும். “ தீண்டாமைப் பேய் நமது நாட்டில் உள்ளவரை நமது சமூகம் நாகரிகச் சமூகமாகக் கருதப்படமாட்டாது. அதனை ஒழித்து, அவர்களைத் தம்மைப் போன்றவராகக் கருதும் மனப்பான்மை மக்களிடம் ஏற்படுதல் வேண்டும் தாழ்த்தப்பட்ட மக்கட்குக் கல்வி, சுகாதார, பொருளாதார வசதிகளை அளித்து மேனிலைக்குக் கொண்டுவருதல் மற்ற வகுப்பார் தலையாய கடமையாகும்,” என்று அடிகள் கூறிவந்தனர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகமுள்ள இடம் அண்ணாமலை நகர் எனப்படும். அடிகள் அந்நகருக்கு அப்பால் உள்ள திருவேட்களச்சேரியில் இராப்பள்ளிக் கூடம் ஒன்றை ஏற்படுத்தினார்; தொண்டில் ஆர்வங் காட்டிய கல்லூரி மாணவர் சிலரைக்கொண்டு சேரி

மக்கட்குக் கல்வி கற்பிக்கத் தொடங்கினர். மாண வர்க்குப் பலகை, புத்தகங்கள் முதலியவற்றை அடி களே வாங்கித் தந்தார். பலர் படித்துப் பயன்பெற் றனர். 1933-ஆம் ஆண்டில் அச்சேரியினர் விவேகா னந்த அடிகளின் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடி னர்; அவர் படத்தை அலங்கரித்து ஊர்வலமாகக் கொண்டுவந்தனர்; தாம் கற்கத் தொடங்கியது முதல் சுகாதார நிலையைக் கவனித்து வளர்க்கலாயினர். அடிகளது அரிய முயற்சியால் அச்சேரி மிக்க பயன் அடைந்தது. அவரது தொண்டினை இகழ்ந்து பேசிய உயர்வகுப்பார் பலராவர். எனினும் அடிகள் தமது திருப்பணியிற் கருத்தாயிருந்தார்.

காங்கிரஸ் கொடி

அடிகள் நாட்டுப்பற்று மிக்குடையவர். அவர் எப்பொழுதும் காந்தியடிகளைப் பின்பற்றியவர்; 'அவ ரைப் போலப் பலர் இந்நாட்டில் தொண்டு செய்ய வேண்டும்,' என்று அவ்வப்பொழுது கூறுவதுண்டு. 1933-இல் அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவின்போது பட்டமளிப்பு மண்டபம் அரசியலார் கொடியினைப் பெற்றிருந்தது. ஒவ்வொரு பேராசிரியர் மாளிகைமீதும் அக்கொடி கட்டப்பட்டிருந்தது. ஆயின், விபுலானந்த அடிகள் இருந்த மாளிகைமீது காங்கிரஸ் கொடி பறந்துகொண்டிருந்தது. அடிகள் துறவி அல்லவா? 'துறவிக்கு வேந்தன் துரும்பு' என்பது உண்மைதானே! அடிகள் அஞ்சாமையையும் நாட்டுப் பற்றையும் ஆசிரியரும் மாணவரும் பாராட் டிப் பேசினர்.

பாரதியாரின் படத்திறப்பு

தேசியப் புலவர் சுப்பிரமணிய பாரதியாரை இப்பொழுது அறியாதார் இலர். ஆயின் 1932-இல் அவரைப்பற்றிச் சிலரே அறிந்திருந்தனர். அவர் பாடல்கள் நாட்டுப்பற்று மணப்பவை; உயர்ந்த கருத்துக்களை உடையவை; எளிய சொற்களால் ஆனவை. அவை தமிழ்ப் புலவர் பாராட்டுக்கு உரியவை ஆயின; அரசியல் அறிஞரும் அவற்றைக் காங்கிரஸ் கூட்டங்கள் வாயிலாக நாடெங்கும் பரவச் செய்தனர். அப்பாக்களை நமது விபுலானந்த அடிகள் நன்கு படித்துப் பாராட்டிவந்தார்.

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

என்று தொடங்கும் பாடல் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டதாகும். அப்பெரியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் மாணவர்க்காகப் 'பாரதியார் கழகம்' என்பதைத் தோற்றுவித்தார்; அடிக்கடி மாணவரைத் தூண்டிப் பாரதியார் பாக்களைப் பற்றிப் பேசச் செய்துவந்தார். அக்கழகத்தின் சார்பில் 1932-இல் அடிகள் தலைமையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில் பாரதியார் படம் திறந்துவைக்கப்பட்டது.* "நாம் சாதி-மத பேதங்களை எண்ணி அல்லற்படாது பாரதியார் காட்டியுள்ள சமரச வழியினைப் பின்பற்றி நடக்க வேண்டும். நாட்டுப் பற்றும் மனிதப்பற்றும் நம்மிடை வளர்ச்சி பெறவேண்டும். பாரதியாருடைய உயர்ந்த கொள்கைகள் நம்உள்ளத்தில் தங்கிப்பயனளிக்குமாக!"

---

*இதனைத் திறந்துவைத்தவர் சிறந்த தேசபக்தராகிய திரு. S. சத்தியமூர்த்தி அவர்கள்.



மகர யாழ்



சீறி யாழ்



சகோட யாழ்



பேரி யாழ்

என்று அடிகள் அடிக்கடி கூறுவதுண்டு. இங்ஙனம் அடிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பற்று, நாட்டுப்பற்று, மக்கள் தொண்டு இவற்றைப் பரப்பிவந்தார்.

7. பலதுறைத் தொண்டு

தமிழ் இசை ஆராய்ச்சி

விபுலானந்த அடிகள் 1933-இல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைவிட்டு விலகினார்; விலகுவதற்கு முன்னரே தமிழ் இசை பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினார். தமிழ்ச் சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள சீறியாழ், பேரியாழ், சகோடயாழ் முதலிய யாழ்வகைகள் இக்கால இசைக்கருவிகளாக இல்லை. அதனால் அவற்றைப்பற்றி ஏதும் நேரிற் கண்டறியக் கூடவில்லை. அவற்றின் இலக்கணம் சிலப்பதிகாரம் போன்ற பழைய தமிழ் நூல்களிற்றும் கூறப்பட்டுள்ளது. பழைய தமிழ் நூல்களைக் கொண்டே இதனை ஆராய்ந்து, பழைய இசைக் கருவிகளை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அடிகட்குத் தோன்றியது. அதனால் அவர் சங்க நூல்களை ஆராயலானார். அடிகள் தமது கூரிய அறிவு நுட்பத்தினாலும் இசைப் பயிறசியாலும் பல உண்மைகளை உணர்ந்தார்; உணர்ந்தவற்றைக் கட்டுரைகளாய் வரைந்தார்; பழைய யாழ் உருவங்களைத் தீட்டினார்.

இங்ஙனம் தாம் ஆராய்ந்து கண்டறிந்த உண்மைகளை 1936-இல் சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஆதரவில் நடைபெற்ற ஐந்து சொற்பொழிவுகளில் மிகத் தெளிவாக விளக்கிப் பேசினார்; யாழ்களை உணர்த்தும் ஓவியங்களைக் காட்டினார். அச்சொற்பொழிவுகளை

டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதலிய பெரும்புலவர்களும் பிற துறை அறிஞர்களும் கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்தனர்; அடிகள் ஆராய்ச்சியை மனமாரப் பாராட்டினர். "இறந்தொழிந்த தமிழ் இசையையும் இசைக் கருவிகளையும்பற்றி ஆராய்ந்து, அவற்றுக்குப் புத்துயிர் கொடுக்க முயன்ற இப்பெரியார் நீடுவாழ்க!" என்று அறிஞர் பலர் வாழ்த்தினர். அடிகள் ஆற்றிய சொற்பொழிவுகள் எல்லாச் செய்தித் தாள்களிலும் வெளியிடப்பட்டன.

இச்சொற்பொழிவுகள் தமிழகத்திற் பெருங் கிளர்ச்சியை உண்டாக்கின. தமிழ்ப்பற்றுக் கொண்ட அறிஞர் பலர் தமிழிசை பற்றிய நூலை வெளியிட வேண்டும், தமிழிசை பற்றி நாடெங்கும் சொற்பொழிவாற்றுதல் வேண்டும் என்று அடிகளை வேண்டிக்கொண்டனர். அடிகள அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் 'இசை', 'அலங்கார சாத்திரம்' பற்றிச் சொற்பொழிவுகள் செய்தார்; திருச்சிராப்பள்ளி வாஞெலி நிலையத்திலும் 'பண்டைத் தமிழர் இசைக் கருவிகள்' என்ற பொருள்பற்றி அழகாகவும் தெளிவாகவும் பேசினுர்; தமது ஆராய்ச்சி உண்மைகளைத் தமிழ்ப் பொழில் என்னும் திங்கள் தாளில் வெளியிட்டு வந்தார்.

பல்கலைக் கழகத் தொடர்பு

சென்னைப் பல்கலைக் கழகத்தார் அடிகளிடம் மிக்க மதிப்புக் கொண்டிருந்தனர். அவர்கள் 1935-இல் தங்கள் தமிழ் ஆராய்ச்சித்துறை சம்பந்தமாக விசாரணைக் குழு ஒன்றை நியமித்தனர். அக்குழுவில் டாக்டர் உ. வே. சாமிநாதையருடன் நமது அடிகளும் உறுப்

பினராக இருந்து, ஆராய்ச்சித் துறைத் தொடர்பான செய்திகளை விசாரித்து அறிக்கை தயாரித்தனர்; அடுத்த ஆண்டு மேற்சொன்னவாறு பல்கலைக் கழகத்தார் வேண்டுகோட்கு இணங்கித் 'தமிழ் இசை' பற்றிச் சொற்பொழிவாற்றினர். அவர்கள் விருப்பப்படி தமிழாராய்ச்சித் தொடர்பாக விரிவான திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தனர்; பின்னர் நடந்த தமிழ் ஆராய்ச்சித் துறைப் பதவிகட்கு உரிய அறிஞரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் உறுப்பினராக இருந்து தொண்டாற்றினர். பின்னர்ச் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்க் குழுவில் உறுப்பினராக மூன்றுண்டுகள் இருந்தனர்.

கலைச்சொல்லாக்க மாநாடு

தமிழகத்தில், விஞ்ஞானத் தொடர்பான மேனாட்டுச் சொற்களுக்கும், பிற கலைகளைப்பற்றிய மேனாட்டுச் சொற்களுக்கும் நேரான தமிழ்ச் சொற்களைத் தயாரிக்கும் பணி 1936-இல் தொடங்கப்பட்டது. பல கலைகளிலும் வல்ல தமிழறிஞர் அம்முயற்சியில் ஈடுபட்டுத் தமிழ்ச் சொற்களைத் தயாரித்து நூல் வடிவில் வெளியிட்டனர்; அந்நூலை அரங்கேற்றம் செய்ய ஒரு மாநாடு தேவைப்பட்டது. மாநாட்டுத் திறப்பாளராக அப்பொழுது திருவிதாங்கூர் திவானாக இருந்த சர். சி. பி இராமசாமி ஐயர் அவர்கள் விளங்கினார். நமது விபுலானந்த அடிகள் தமது தலைமையுரையில் தமிழின் தொன்மையையும் சிறப்பையும் தக்க சான்றுகளுடன் குறிப்பிட்டு, "இத்தகைய பழமையும் பெருமையுமுடைய நமது தாய்மொழியில் கலைச்சொற்களை ஆக்குதல் சிறப்புடைத் தொண்டாகும். இம்

முயற்சியை நான் மனமாரப் பாராட்டுகின்றேன்,'' என்று பேசினார்.

திருக்கயிலை யாத்திரை

அடிகள் 1937-இல் இமயமலையைத் தாண்டித் திபெத்துக்குச் சென்று, திருக்கயிலையைத் தரிசித்துத் திரும்பினார். அவர் தமது யாத்திரையின்போது திபெத்தில் பல இடங்கட்குச் சென்றார்; அங்குள்ள பௌத்தப் பள்ளிகட்குச் சென்றார்; பௌத்த குருமாராகிய லாமாக்களுடன் அளவளாவினார்; திபெத்தியர் பழக்க வழக்கங்களை நேரிற் கண்டார்; கயிலாய மலையின் அருமை பெருமைகளை நேரிற் கண்டு களித்தார்; நம் முன்னோர் கயிலையைச் சிறப்பாகக் கொண்டாடியது முற்றும் பொருத்தமானதே என்று எண்ணினார்; வெள்ளிபோன்ற பனிப் படலங்கள் போர்த்துள்ள மலையை நம்மவர் 'வெள்ளிமலை' என்றது பொருத்த மானதே என்பதை உணர்ந்தார்; ஈழநாடு திரும்பியதும் 'ஈழகேசரி' ஆண்டு மடலில் "விண்ணுலகம்" என்ற தலைப்பில் தமது திருக்கயிலாய யாத்திரையைப் பற்றிய விவரங்களை விளக்கி வரைந்தார். அக்கட்டுரையைப் படித்த தமிழர் திருக் கயிலாயத்தைப்பற்றிப் பல விவ ரங்களை அறியலாயினர்.

பத்திரிகை ஆசிரியர்

இமயமலைச் சாரலில் மாயாவதி என்பது ஓர் இடம். அங்கு இராமகிருஷ்ண மடம் ஒன்று இருக்கின்றது. அங்கு இருந்துகொண்டு 'பிரபுத்த பாரதம்' என்னும் ஆங்கில வெளியீட்டை நடத்திவருமாறு இராம கிருஷ்ண மடத்து அதிகாரிகளிடமிருந்து ஆணை பிறந்தது. மடத்தைச் சேர்ந்தவர் ஆதலின், அடிகள்

அவ்வாணைக்குக் கட்டுப்பட்டார்; 1939-இல் மாயாவதியை அடைந்தார்; அங்கு 1941 வரை இருந்து பத்திரிகை ஆசிரியத் தொண்டு செய்தார். அடிகள் மாயாவதியில் இருந்துகொண்டே பல தமிழ்க் கட்டுரைகள் தமிழ்ப் பொழிலில் வெளியிட்டுவந்தார். அவை தமிழ் இசை, கயிலைக் காட்சி முதலிய பல பொருள் பற்றியன; படிக்கப் படிக்க இன்பம் பயப்பன.

தமிழகத்திற் சொற்பொழிவுகள்

அடிகள் மாயாவதியை விட்டுத் தமிழ் நாடு வந்தார். அவர் வருகையை அறிந்து தமிழ் நாட்டில் அங்கங்கு இருந்த கலைக் கழகங்கள் அவரைத் தத்தம் கழகத்திற்கு வந்து பேசுமாறு வேண்டின. அடிகள் தம் உடல் நலக் குறைவையும் கருதாமல், பொதுமக்கள் வேண்டுகோட்கு இணங்கிப் பல இடங்களிற் சொற்பொழிவாற்றித் தமிழ் மக்களை மகிழ்வித்தனர். அடிகள் மாயாவதியில் இருந்தபொழுது அவரது உடல்நிலை கெட்டது. தமிழ்நாடு மீண்டதும் அவ்வுடல்நிலையைச் சரிப்படுத்திக் கொள்ளாது அடிகள் பல ஊர்கட்கும் சென்று சொற்பொழிவாற்றியதால் உடல்நிலை மிகுதியாகக் கெட்டது. பின்னர் அடிகள் அதனை உணர்ந்து சிறிது காலம் ஓய்வெடுத்துக்கொண்டனர்.

இலங்கைப் பல்கலைக் கழகம்

இலங்கையில் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப் பட்டது. தமிழ் ஆராய்ச்சித்துறை ஒன்று ஏற்படுத்தப் பட்டது. அதற்குரிய பேராசிரியர் ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்புப் பல்கலைக் கழகத்தாரைச் சேர்ந்தது. அப்பொழுது ஈழநாட்டுத் தமிழ்ச் சங்கங்களும்

சமய சங்கங்களும் ஒன்றுபட்டு நமது அடிகளே அப் பதவிக்கு ஏற்றவர் என்று அறிவித்தன. தமிழ்ப் பெரியார்களும் அக்கருத்தை ஆதரித்தனர். அனைவரும் இராமகிருஷ்ண மடததுத் தலைவர்க்குத் தம் கருத்தைக் கூறிப் 'பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு அடிகட்கு அநுமதி தரவேண்டும்,' என்று வேண்டினர்.

தமிழ்ப் பேராசிரியர்

இராமகிருஷ்ண மடத்துத்தலைவர் நமது அடிகளைத் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினார். அடிகள் 1943-இல் இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் பதவி ஏற்றார். அப்பெரியார் பல்கலைக் கழகத் தமிழ்ப்பாடக்குழு, தேர்வுக்குழு, ஆராய்ச்சிக்குழு முதலிய குழுக்களில் இருந்து அரிய தொண்டாற்றினார்; தமிழ் மொழியை எம் முறையிற் கல்லூரியிற் பரப்பவேண்டும் என்பதுபற்றி விரிவான திட்டமிட்டார்; புதிய பல்கலைக் கழகம் ஆதலின் அடிகள் அதன் நலனைக் கருதி இராப்பகலாக வேலை செய்யலானார். அதனால் அவரது உடல் நலம் முன் போலத் தளர்ந்துவரலாயிற்று.

யாழ்நூல் அரங்கேற்றம்

அடிகள் பல ஆண்டுகளாகத் தமிழிசைபற்றி ஆராய்ச்சி செய்த முடிவுகள் 'யாழ்நூல்' என்னும் நூல் வடிவில் வெளிவந்தன. அந்நூல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டது. அஃது 1947-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5, 6-ஆந் தேதிகளில் திருக்கொள்ளம்பூதூர்க் கோவிலில் திருஞான சம்பந்தர் திருமுன் அரங்கேற்றம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள இயல்—இசை—நாடகப் பெரும்புலவரும் தமிழ்

அறிஞர் பலரும் விழாவிற் கலந்துகொண்டனர். நமது மாகாண முன்னுள் கல்வி அமைச்சரும் தமிழ்வளர்ச்சிக்கு இராப்பகலாக உழைத்துவருபவருமாகிய திரு. தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள் தமிழின் ஆக்கம் கருதி அரிய சொற்பொழிவாற்றி அடிகளாரது பெரு முயற்சியைப் பாராட்டிப் பேசினர். அவ்விழாவில் அடிகள் தம் ஆராய்ச்சியாற் புதுப்பித்த யாழ்கள் வைக்கப்பட்டிருந்தன. தமிழராகிய நாம் செய்த தவப் பேறே அடிகளைக் கொண்டு யாழ்நூலை வெளிப்படுத்தியது என்னலாம். யாழ்நூல் அரங்கேற்றம் தமிழ் மக்கட்கு எல்லையில்லாத இன்பத்தை அளித்ததென்ன லாம். தமிழர் இழந்த மாணிக்கத்தைப் பெற்ற காகத்தை ஒத்து அகமகிழ்ந்தனர்.

அடிகள் மறைவு

நூல் அரங்கேற்றத்துக்குப்பின் அடிகள் ஈழநாடு சென்றனர். அவரது உடல்நிலை கெட்டுவந்தது. எனினும் அவர் தமது பேராசிரியர் பதவியில் இருந்து தமிழ்ப் பணி செய்துவந்தார். நாள் ஆக ஆக உடல் மெலிவு மிகுதிப்பட்டது. இறுதியில் அப்பெரியார் 1947-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19-ஆந் தேதி யன்று இரவு ஒன்றரை மணிக்கு இம்மண்ணக வாழ்வை மறந்தார். அவரது மறைவு காட்டுத்தீப்போல ஈழ நாடு முழுவதும் பரவியது; தமிழகத்திலும் பரவியது. தமிழ்ப் பொதுமக்கள் அடைந்த துயருக்கு அளவில்லை. பெரும்புலவர்கள் அப்பெரியார் தமிழ்ப் பணியைச் சொல்லிச் சொல்லிக் கண்ணீர்விட்டனர்.

8. நற்பண்புகள்

தமிழ்த் தொண்டு

ஒவ்வொரு தமிழனும் தன் தாய்மொழிக்குத் தன்னால் இயலும் தொண்டினைச் செய்தல் வேண்டும் என்பது அடிகள் கருத்து. அதனை அவர் பல கூட்டங்களிற் கூறியுள்ளார். அவர் தம் வாழ்க்கையில் அதனைச் செய்து காட்டினார்; தம்மளவில் எல்லாத் தமிழ் நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றார்; தாம் ஆராய்ந்தறிந்த உண்மைகளை நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிப்படுத்தித் தமிழ் மக்கட்கு உதவினார்; இறந்தொழிந்த தமிழ் இசை அறிவை "யாழ்நூல்" வாயிலாகப் புதுப்பித்தார். இஃதொன்றே அப்பெரியார் பெயரை நிலைநிறுத்தப் போதியதாகும். அவர் தம்மைக் காண வரும் தமிழ் நண்பர்களுடன் தமிழ் நூல்களைப்பற்றியே பேசுவார்; அவற்றின் சிறப்பியல்புகளை அவர்கள் மனத்திற் பதியவைத்துத் தமிழின்பால் பற்றுள்ளம் கொள்ளச் செய்வார். முற்றும் துறந்த முனிவராக இருந்தும் அவர் தாய்மொழியினிடம் கொண்டிருந்த பற்று அளவிடற்கரிய தென்பது அவர் வாழ்க்கையிலிருந்து நாம் நன்கறியலாம். அடிகளது தமிழ்நடை செய்யுள் நயம் பொருந்தியது; நல்ல தமிழ்ச் சொற்களைப் பெற்றது; படிக்கப் படிக்க இன்பம் அளிப்பது; "தமிழர் சங்க நூற்களையும் சைவசித்தாந்த சாத்திரங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து, அவற்றின் சிறப்பை மேனாட்டாரும் பிறரும் அறியுமாறு செய்யவேண்டும்," என்று பல சமயங்களிற் கூறியுள்ளார்.

அடிகளும் மறுமலர்ச்சிக்காரரும்

"இக்காலத்தில் எழுவாய் பயனிலைப் பொருத்தங்கூட இல்லாமல் தமிழ் எழுதும் மறுமலர்ச்சிக்காரர்

களால் தமிழ்நடை வளர்ச்சி பெருது. மறுமலர்ச்சி என்பது தமிழுக்கே சிறப்பாக உண்டான இலக்கண வரம்புகளை மீறி எழுதுவதும் பேசுவதுமாகும் என்று சிலர் நினைக்கின்றனர்.......பழைய இலக்கியங்களில் இல்லாத மலர்ச்சியையா இந்த மறுமலர்ச்சிக்காரர்கள் கொண்டுவரப் போகிருர்கள்? பலர் நம் பொக்கிஷங்களான பழந்தமிழ் நூல்களை வெறுக்கிருர்கள்; அவற்றைத் தொடுவதும் இழிவெனக் கருதுகின்றனர். அத்தகையோர் கட்டுரைகளும் கதைகளும் பாட்டுகளும் எழுதிக் குவிக்கின்றனர். 'அவை அனைத்தும் மணமற்ற வெறும் காட்டுப்பூக்களே ஆகும். பழைய நூல்களில் ஊன்றிப்பயின்று தமிழ் மரபும் பண்பாடும் உள்ளத்தில் மலராவிடில், எழுத்திலும் பேச்சிலும் மறுமலர்ச்சி காண்பது அருமை. காலப்போக்குக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்பத் தமிழ்நடை மலரவேண்டுவது வரவேற்கத்தக்கது. ஆயின் மரபும் ஒழுங்கும் தவறிப் போவது இயல்பில் அமைந்த அழகைச் சிதைப்பதாகும்.... அருமையாக எழுதக்கூடிய மறுமலர்ச்சி எழுத்தாளர் பலர் தமிழ் இலக்கியங்களிற் பயிற்சி இன்மையாலோ—பயிற்சிக் குறைவினுலோ—சில இடங்களில் வழுக்கி வீழ்வதைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. அவர்கள் மனம் வைத்துத் தமிழ்நூற் பயிற்சி பெறின், அவர் தொண்டு சிறப்புறும். பழந்தமிழ்நூற் பயிற்சியுடைய புதுமை எழுத்தாளர்களே தமிழ் நாட்டுக்கு இப்பொழுது தேவையானவர்."

அடக்கமுடைமை

அடிகள் மும்மொழிப்புலவர்; முற்றும் துறந்த பெரியார். எனினும் அவர் தமக்குத் தமிழறிவை ஊட்டிய ஆசிரியர்களிடம் இறுதி நாள்வரை பேரன்புட

னும் மரியாதையுடனும் நடந்துவந்தது குறிப்பிடத் தக்கது. செருக்குற்று மற்றவரை இழிவாகக் கருதும் மனப்பான்மை அடிகளிடம் இருந்ததில்லை. கற்றார்-கல்லார், முதியவர்-இளைஞர், வறியவர்-செல்வர் ஆக அனைவரிடத்தும் இனிய முகத்துடன் பேசிப்பழகுதல் அவர் இயல்பு.

பிறரை ஊக்குவிக்கும் பண்பு

பலர் தம்போன்ற புலவரைக் காணின் பொறாமை கொண்டு அவர் முற்போக்கிற்கு ஊறுசெய்தல் இயல்பு. ஆயின் சங்கப்புலவர்கள் ஒருவரை ஒருவர் பாராட்டியே பேசியுள்ளனர். அடிகள் நிறைகுடம் ஆதலின் சங்கப் புலவரை ஒத்திருந்தார்; தம்போன்ற புலவர்களை அவர்களது முயற்சியில் ஊக்கித் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்துள்ளனர்; நவநீதகிருஷ்ண பாரதியார் என்பவர் பாடிய பாக்களை 'உலகியல் விளக்கம்' எனப் பெயரிட்டுத் தாமே அதற்கு வாழ்த்தும் பதிகமும் வலிந்துதந்து அச்சிடுவித்து வெளிப்படுத்தினர். அந் நூற் பாக்களை ஆங்கிலத்தில் வரைந்து பாரதியார் புகழையும் பரப்பினர். இந்த உண்மையை நவநீதகிருஷ்ண பாரதியாரே வரைந்துள்ளனர்.

"எனது யாழ்நூலை அச்சிட அன்பர் ஒருவர் விரும்புகிறார்" என்று அடிகள் தம் நண்பர் ஒருவரிடம் குறிப்பிட்டார். அந்த நண்பர், "தங்கள் அன்பர் சிறந்த படிப்பாளிபோலும்!" என்றார். அடிகள், "அந்த அன்பர் பெரிய படிப்பாளியல்லர். ஆயின் தமிழ் ஆர்வம் மிக்கவர்; நற்பண்புகள் பெற்றவர்; பெருஞ் செல்வர். தமிழ் நாட்டிலும் ஈழ நாட்டிலும் தமிழ் கற்றார் பலருள்ளும் காணப்படும் பெருங்குறை ஒன்றுண்டு. அஃதாவது பிறரிடம் நலன் எதுவும் காணவிரும்பாமை ஆகும்.

பிறர்பாலுள்ள நலன்களைக் கண்டு பொறுமை கொள் இன்றனர்; வெளியில் உதட்டளவில் புகழ்கின்றனரே தவிர உளமாரப் புகழ்வதில்லை. இதனால் புலவர்கள் தம்முள் மன ஒற்றுமையின்றிச் சிதறுண்டு சிறப்பிழந்து தவிக்கின்றனர்,"* என்று மிகுந்த வருத்தத்துடன் கூறினார்.

ஏழை பங்காளர்

அடிகள் ஏழைகளிடம் எல்லையற்ற அன்பு கொண்டவர்; அவர்கள் முன்னேறத் தம்மால் ஆயின செய்து வந்தார். அநாதை மாணவர் பலர் அவரால் கல்வியறிவு பெற்று நன்னிலையில் இருந்துவருகின்றனர். அடிகள் தாழ்த்தப்பட்ட மக்களிடம் பேரன்பும் கழிவிரக்கமும் கொண்டவர். அவர்கள் கல்வியறிவு பெறத் தம்மால் இயன்றன வெல்லாம் சலியாது செய்தார். அண்ணா மலைநகருக்கு அருகில் இருக்கும் சேரியில் அவர் செய்த தொண்டுகொண்டே அவர் 'ஏழை பங்காளர்' என்று கூசாது கூறலாம்.

சமயப் பற்று

விபுலானந்த அடிகள் சைவ சமயத்திற் பெரும் பற்றுக்கொண்டவர்; சைவ மடங்களினிடம் தொடர்பு கொண்டவர். திருஆவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனார்கோவில் ஆதீனங்கள் அவரைப் பெருமைப்படுத்தின; அடிகளது யாழ்நூல் ஆராய்ச்சிக்கு வேண்டிய ஏட்டுச் சுவடிகளை உதவின. அடிகள் சைவ சித்தாந்த சாத்திரங்களில் நல்ல பயிற்சி உடையவர்; சைவ சித்தாந்த ஆண்டுவிழாக் கூட்டங்களில் தலைமை வகித்த பெருமை அவருக்கு உரியது. அவர் மதுரை

---

*ஈழமணி, விபுலானந்தர் நினைவுமலர், பக். 38.

மீனாக்ஷியம்மன்மீது பெரும்பக்தி கொண்டவர்; தாம் சொற்பொழிவாற்றுதற்குமுன் கடவுள் வாழ்த்தாக மீனாக்ஷியம்மைப் பிள்ளைத் தமிழில் உள்ள ஒரு பாடலைப் பாடுவது அவர் வழக்கம். அடிகள் தில்லைக்கூத்தப் பிரானிடமும் எல்லையற்ற பக்தி கொண்டவர்; இந்தியாவில் இருந்த காலங்களில் எல்லாம் தில்லைக்குச்சென்று சில நாட்கள் தங்கி நடனப்பெருமானைத் தரிசிப்பது வழக்கம். சைவர்க்குத் தில்லை சிறந்த தலமாதல்போல வைணவர்க்குச் சீரங்கம் சிறந்த பதியாகும். அங்குக் கார்முகில்வண்ணன் கிடந்த கோலத்திற் காட்சி அளிக்கின்றான். நமது அடிகட்கு அப்பெருமானிடத்தும் ஈடுபாடு இருந்தது.

கற்றாரைப் போற்றல்

'கற்றலிற் கற்றாரை வழிபடுதல் நன்று' என்று அடிகள் அடிக்கடி கூறுவது வழக்கம். அப்பெரியார் சிறந்த தமிழ்ப்புலவர்களாகிய சுன்னாகம்-குமாரசுவாமி புலவர், டாக்டர் உ. வே. சாமிநாதையர், வெ. ப. சுப்பிரமணிய முதலியார், மறைமலையடிகள் முதலிய பெருமக்களிடம் மிக்க அன்பும் மதிப்பும் கொண்டிருந்தார். "தமிழை நன்றாகப் படித்த இப்பெருமக்களை நீங்கள் யாத்திரையாகச் சென்று தரிசிக்கவேண்டும்; அவர்களுடன் பேசிப் பழகவேண்டும்; அவர்களுடன் சிறிதுநேரம் பேசுவது-பல நூல்களைப் படித்தறிவதற்கு ஒப்பாகும்," என்று அடிகள் தம் மாணவர்க்கும் ஈழ நாட்டு நண்பர்கட்கும் கூறியுள்ளனர்.

எல்லோரிடத்தும் அன்பு

அடிகள் எல்லாச் சமயத்தினரையும் நண்பராகப் பெற்றிருந்தார். முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், சைவர், வைணவர் முதலிய அனைவரும்

அவரை நேசித்தனர் ; அவருடன் அளவளாவி மகிழ்ந்தனர். அடிகள் அவ்வச் சமயத்தாருடன் அவரவர் சமயத் தொடர்பான செய்திகளைப் பேசி மகிழ்விப்பது வழக்கம் ; அத்துடன் சமரச சன்மார்க்கத்தைப் பற்றியும் பேசுவார் ; இந்து நண்பர்களுடன் பேசுகையில் சாதி வேறுபாடுகள் இந்து சமய பலத்தைப் போக்கி வருவதை நன்கு விளக்கிக் கூறிச் சமய ஒற்றுமைக்கு எல்லோரும் பாடுபட வேண்டும் என்று கூறி வற்புறுத்துவார் ; "ஒழுக்கமே உயர்ந்தவன்-தாழ்ந்தவன் என்பதை உறுதிப்படுத்தும் அளவு கருவியே தவிரப் பிறப்பன்று," என்று கூறுவார் ; 'நாட்டில் உள்ள சாதிச் சண்டை, மதச் சண்டைகள் ஒழிந்து மக்கள் முன்னேறும் நாள் எந்நாள்!' என்று அடிக்கடி கூறி வருந்துவார்.

முடிவுரை

அடிகளது வாழ்வு தியாக வாழ்வு. அவர் துறவியாக இருந்தார் ; கல்விக்கும் சமயத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றினார் ; தமிழ்-ஆங்கிலப் பத்திரிகைகட்கு ஆசிரியராக இருந்தார் ; தமிழ் ஆராய்ச்சி நூல்கள் எழுதினார் ; கருத்தை ஈர்க்கத்தக்க கட்டுரைகளை வெளிப்படுத்தினார் ; ஏழை பங்காளராய்த் திகழ்ந்தார் ; நாடெங்கும் சொற்பொழிவாற்றி மக்கட்குத் தமிழ்ப் பற்றையும் சமயப்பற்றையும் வளர்த்தார் ; 'தொண்டு செய்யவே பிறவி வேண்டும்' என்றார். இராமகிருஷ்ண மடத்து அடிகளுள் தமிழ் மொழிக்குப் பாடுபட்ட முதற் பெரியார் விபுலானந்தர் என்றே கூறலாம். அப் பெரியாரைப் பெறற்கரிய ஈழ நாட்டுக்கு நமது நன்றி உரியதாகுக! அவரது தியாக வாழ்வு நமக்கு நல்வழி காட்டுவதாக!

கட்டுரைப் பயிற்சி

ஒவ்வொரு பொருள் பற்றியும் ஒன்றரைப் பக்கத்தின் மிகாமல் கட்டுரை வரைக.

I. 1. சுந்தரம் பிள்ளையின் பிள்ளைப்பருவம்
2. அவரது கல்விப் பருவம்
3. சுந்தரம் பிள்ளையும் ஆசிரியர் பணியும்
4. அவர் செய்த தமிழ்த் தொண்டு
5. மனோன்மணீய வரலாறு
6. சுந்தரம் பிள்ளை நல்லியல்புகள்

II. 1. சாஸ்திரியார் கல்விப் பயிற்சி
2. அவரது ஆசிரியப் பண்பு
3. அவர் செய்த தமிழ்த் தொண்டு
4. அவர் இயற்றிய நூல்கள்
5. முத்தமிழ்
6. அவர் வரலாறு உணர்த்தும் உண்மைகள்

III. 1. மயில்வாகனர் தமிழ்ப் புலமை பெற்ற வரலாறு
2. துறவிற்கு முன்னர் அவர் வரலாறு
3. அவர் கல்விக்குச் செய்த தொண்டு
4. அவர் தமிழிற்குச் செய்த திருப்பணி
5. அவருடைய முதிர்ந்த கருத்துக்கள்
6. அடிகளும் ஆசிரியப் பண்பும்
7. அவர் வரலாற்றால் நீவிர் அறிவன

59920